தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி - XXXI

சேலம் மாவட்டக் கல்வெட்டுகள் - தொகுதி-1

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2025 திருவள்ளுவர் ஆண்டு 2056

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசைஎண். 70

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி –XXXI

சேலம் மாவட்டக் கல்வெட்டுகள் - தொகுதி - I

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசைஎண். 70

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி –XXXI

சேலம் மாவட்டக் கல்வெட்டுகள் - தொகுதி- I

ஆசிரியர்
க. குழந்தைவேலன்

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை
சென்னை – 600 008
2025 - திருவள்ளுவர் ஆண்டு 2056

BIBLIOGRAPHICAL DATA

Title	**:**	**TAMILNADU INSCRIPTIONS -VOL. XXXI**
		(Salem District Inscriptions Vol.I)
Editor	**:**	K. Kulandaivelan
Copy right	**:**	Tamilnadu State Dept. of Archaeology
Subject	**:**	Epigraphy
Language	**:**	Tamil & English
Edition	**:**	First
Publication No	**:**	373
Year	**:**	2025
Type point	**:**	13
No. of pages	**:**	328
No. of copies	**:**	1000
Paper used	**:**	80 Gsm Maplitho
Printer	**:**	The Chennai Printers Industrial Co-operative Society Ltd., 6, Pycrofts Road, Triplicane, Chennai-600 005
Publisher	**:**	**State Department of Archaeology,** Thamizh Valarchi Valaagam, Thamizh Salai, Egmore, Chennai - 600 008.
Price	**:**	Rs.220/-

உள்ளடக்கம்

வ.எண்.			பக்கம்
	பதிப்புரை	...	i
	முன்னுரை	...	iii
1.	ஆத்தூர்	...	1
2.	கருங்காடு	...	14
3.	ஆறகளூர்	...	16
4.	பெரியேரி	...	106
5.	வேப்பம்பூண்டி	...	110
6.	நரசிங்கபுரம்	...	113
7.	திட்டைச்சேரி	...	115
8.	செந்தூரப்பட்டி	...	116
9.	துலுக்கனூர்	...	121
10.	தியாகனூர்	...	122
11.	அம்மன்கோயில்பட்டி	...	126
12.	கருப்பூர்	...	127
13.	கேதுநாயக்கன்பட்டி	...	131
14.	கோட்டைமேட்டுப்பட்டி	...	133
15.	செட்டிபட்டி	...	134
16.	பெரியசோரகை	...	135
17.	தாரமங்கலம்	...	137
18.	வெள்ளாறு	...	165
19.	திசைவிளக்கு	...	170
20.	சக்கரைச்செட்டிப்பட்டி	...	171
21.	அமரகுத்தி	...	172
22.	உத்தமசோழபுரம்	...	178
23.	ஆட்டையாம்பட்டி	...	184
24.	சீரகாப்பாடி	...	185
25.	குமாரசாமிப்பட்டி	...	186
26.	விலாரிபாளையம்	...	187

27. மேச்சேரிப்பட்டி	...	188
28. வாழக்குட்டப்பட்டி	...	189
29. குறிச்சி	...	192
30. சின்னமாங்கோடு	...	195
31. பேளூர்	...	196
32. புழுதிக்குட்டை	...	211
33. ஆற்றுவளவு	...	212
34. கருமந்துறை	...	216
35. நங்கவள்ளி	...	217
36. சப்பாணிப்பட்டி	...	221
37. மாறமங்கலம்	...	222
38. பிள்ளைமதில்	...	224
39. காடையாம்பட்டி	...	225
40. தடாவூர்	...	227
41. தம்மம்பட்டி	...	242
42. சேலம்	...	247

இ.க.ஆண்டறிக்கை -   இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை

தெ.இ.க.தொ. - தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி

ARE - Annal Reportson (South) Indian Epigrapy

EI. - Epigraphia Indica

SII - South Indian Inscriptions

த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம)
ஆணையர்(மு.கூ.பொ.)

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்
தமிழ்ச்சாலை
சென்னை - 600 008

பதிப்புரை

வரலாற்றினை எழுதுவதற்கு துணைபுரியும் சான்றுகளாகத் திகழ்பவை கல்வெட்டுகள்,காசுகள், செப்பேடுகள், அகழாய்வுத் தொல் பொருட்கள், வரலாற்றுச் சின்னங்கள், இலக்கியங்கள் போன்றவையாகும். வரலாற்றினை அறிய உதவும் கல்வெட்டுகளைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையானது தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து, பதிப்பித்து, நூலாக வெளியிடும் பணியினைத் தனது முதன்மைப் பணிகளில் ஒன்றாகச் செய்து வருகிறது.

இத்துறைக் கல்வெட்டுப் பிரிவு வாயிலாக இது வரை10571 கல்வெட்டுகள் 69 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 2025-ஆம் ஆண்டில் இந்நூல் கல்வெட்டு வரிசை எண் 70ஆவது நூலாக வெளியிடப்படுகின்றது. சேலம் மற்றும் பிற ஊர்களிலிருந்தும் படியெடுக்கப்பட்ட 192 கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியில் ஆத்தூர், கருங்காடு, ஆறகழூர், பெரியேரி, வேப்பம்பூண்டி, நரசிங்கபுரம், திட்டைச்சேரி, செந்தாரப்பட்டி, துலுக்கனூர், தியாகனூர், அம்மன் கோயில்பட்டி, கருப்பூர், கேதுநாயக்கன்பட்டி, கோட்டைமேட்டுப்பட்டி, செட்டிபட்டி, பெரியசோரகை, தாரமங்கலம், வெள்ளாறு, திசைவிளக்கு, சக்கரைச்செட்டிப்பட்டி, அமரகுத்தி, உத்தமசோழபுரம், ஆட்டையாம்பட்டி, சீரகாப்பாடி, குமாரசாமிப்பட்டி, விலாரிபாளையம், மேச்சேரிப்பட்டி,வாழக்குட்டப்பட்டி, குறிச்சி , சின்னமாங்கோடு, பேளூர், புழுதிக்குட்டை, ஆற்றுவளவு, கருமந்துறை, நங்கவள்ளி, சப்பானிப்பட்டி, மாறமங்கலம், பிள்ளைமதில், காடையாம்பட்டி, தடாவூர், தம்மபட்டி, சேலம் ஆகிய ஊர்களின் கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி 31 (சேலம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி 1) என்னும் தலைப்பில் வெளிவருகின்றது.

இக்கல்வெட்டுகளைப் படித்து பதிப்பித்து நூலாக வெளிவரும் பணியினை மேற்கொண்ட இத்துறையின் கல்வெட்டாய்வாளர் க. குழந்தைவேலன் (ஓய்வு) அவர்களுக்கும், இணை இயக்குநர் இரா. சிவானந்தம் அவர்களுக்கும் தொல்லியல் அலுவலர் திருமதி. கி. பாக்கியலட்சுமி அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இந்நூலினை தட்டச்சு, D.T.P. மற்றும் நிழற்படம், அட்டைப்படம் செய்த திருமதி. தே. சத்தியவதி, அவர்களுக்கும் மற்றும் அச்சுப்பிழைத்திருத்திய திருமதி. கோ. கீதா அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும், பெரும் முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முதன்மை தரவுகளாக உள்ள இக்கல்வெட்டு வாசகங்களை ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் பயன்படுத்தி இப்பகுதியின் வரலாற்றினை எழுதுவதற்கு உதவும் என்ற நோக்கில் இந்நநூலினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம)

ஆணையர்(மு.கூ.பொ.)

முன்னுரை

பரந்து விரிந்து கிடந்த சேலம் மாவட்டம் தகடூர், நாமக்கல், கிருட்டிணகிரி எனப் பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டபின் சுருங்கிய எல்லைக்குள் அடங்கிவிட்டது. முல்லையுங் குறிஞ்சியும் கலந்து பாலையாக மாறும் இயல்புடைய நிலப்பகுதி. அஃதாவது,

“வேனலங் கிழவனோடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்”

என்னும் சிலப்பதிகார அடிகளுக்கு எடுத்துக்காட்டான நிலப்பகுதி. காடும் மேடும் குன்றும் குவடும் நிரைந்து நீர்வளம் குறைந்த நிலப்பகுதியாதலால் மழையும் குறையு. பெய்யும் மழையால் பெருக்கெடுத்தோடும் ஓடைகளும் ஆறுகளும் பள்ளம் நோக்கிப் பாய்ந்துவிடுவதால் வளத்திற்கு வாய்ப்பு குறைவு. ஆதலால் பெருங்கோயில்கள் பல பெருக வாய்ப்பில்லாமற் போய்விட்டது. பெருங்கோயில் என்று சொல்லத்தக்க அளவில் உள்ளவை சேலம் ஆற்றையும் (திருமணிமுத்தாறு) நிவாஆற்றையும் (வெள்ளாறு-சுவேதநதி) சார்ந்து எழுந்த சேலம் கிளிவண்ணமுடையார் (சுகவனேசுவரர்), ஆறகளூர் உடையார் திருக்காசுமீவரமுடையார்) போன்ற சில கோயில்களில் மட்டுமே அதிகக் கல்வெட்டுகளைக் காணமுடிகிறது. சிற்றோடைகளையும் ஏரிகளையும் சார்ந்து தோன்றிய கோயில்கள் சிலவற்றில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. பிற இடங்களில் அரிதாக ஓரிரண்டு கல்வெட்டுகள் மட்டுமே காணப்படுகின்றன.

தொல்மாந்தர் தோன்றி வாழ்ந்ததற்கான ஏந்துகள் மிகுதியால் இங்குள்ள மலைத்தொடர்க், குன்றுகளின் அடிவாரங்களில் புதிய கற்கால மக்களும் பெருங்கற்கால மக்களும் வாழ்ந்ததற்கான தடையங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. பெத்தநாயக்கன்பாளையம் வட்டத்து ஆற்றுவளவில் என்னற்ற புதிய கற்காலக் கருவிகளும் எழுத்தில்லா பல்லவர்கால நடுகல்லும் அதனைத்தொடர்ந்து சோழர்கால கோயில் கல்வெட்டுகளும் நடுகற்கல்லும் கிடைத்துள்ளதை நோக்க தொல்மாந்தர்களைத் தொடர்ந்து வரலாற்றுக்கால மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் கல்வெட்டுகளில் மிகப் பழமையான கல்வெட்டு ஓமலூர் வட்டம் அம்மன்கோயில்பட்டி தேப்பாழிச் சுனைக் கல்வெட்டாகும். இது தமிழி எழுத்து வட்டெழுத்தாக வளர்நிலையில் பொது ஆண்டு மூன்றாம் நூற்றாண்டு

வாக்கில் வெட்டப்பட்ட கல்வெட்டு. பாறை இடுக்கில் இருந்து சுரந்துவரும் சுனை நிரைத் தேக்கி வைப்பதற்காக பரம்பன் கோகூர் கிழான் மகன் வியக்கன் கோபன் கணதேவன் தோண்டி வைத்தான் என்பதை,

“கோகூர் கிழார் மகன் வியக்கன்
கோபன் கணதேவன் தொட சுனை”

என வெட்டி வைக்கப்பட்டுள்ளது. தொட்ட சுனை என இருக்கவேண்டியதில் ‘ட்’ விடுபட்டுள்ளது. இவ்வாறு ஓரெழுத்தே ஒற்றும் உயிர்மெய்யுமாக தொடர்ந்து வரும் தமிழிக் கல்வெட்டுகள் சிலவற்றில் ஒற்று விடுபட்டு, பள்ளி-பளி என்றும், கொட்டிய-கொடிய என்றும், பெருந்தச்சன் என்பது பெருந்தசன் என்றும் இவைபோல பல இடங்களில் வந்துள்ளதைக் காணமுடிகிறது. எனவே தொடசுனை என்பது தொட்ட சுனை என்பதாகும். தொட்ட என்றால் தோண்டிய என்று பொருள். “தொட்டனைத் தூறும் மணற்கேணி” என்னும் குறளையும், தொடுபொறி-உட்குழைவாகத் தோண்டி அமைக்கப்பட்ட பொறி என்ற வழக்கையும் காண்க.

அம்மன்கோயில்பட்டிக் கல்வெட்டுக்கடுத்தபடியாக நமக்கு பழமையான கல்வெட்டாகக் கிடைப்பது ஓமலூர் வட்டம் கேதுநாயக்கன்பட்டியில் காணப்படும் இரண்டு வட்டெழுத்து நடுகற்கள். பொது ஆண்டு ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்வட்டெழுத்து நடுகற்களில் முதற் கல்வெட்டின் முகப்புப் பகுதி உடைந்துவிட்டமையால் ஆளும் அரசன் பெயரை அறிய இயலவில்லை. பொன்னந்தியார் சேவகர் தாயனூராள்வோர் மக்கள் பொற்சாத்தனார் என்பவர் தாயனூர் மேல் தொறுக்கொளப் படையெடுத்து வந்தபொழுது வழுதியரையன் என்பவன் தொறுமீட்டுப் பட்ட செய்தியைக் கூறுகிறது.

இரண்டாவது கல்வெட்டில் கங்கவரசர் மேல்நாட்டை ஆண்டபொழுது தாயனூர் நாட்டை காரிப்பெருமாள் என்பவன் ஆண்டுள்ளான். அவர்களுடைய கோயிற்றமர் குலமாணிக்க இளவரையர் மகன் கடத்தூர்மேல் கங்கப்படை வந்தபொழுது குத்திப்பட்ட செய்தியைக் கூறுகிறது.

இதற்கடுத்தாக ஆத்தூர் வட்டம் செந்தூரப்பட்டியில் ஒரே இடத்தில் ஐந்து நடுகற்கள் கிடைத்துள்ளன. பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டுகளில் நீலகண்டரசர் மருமக்கள் பொய்த்தலையார் சேவகன் ஆதிதொட்டிமேல் படைவந்த ஞான்று எருமைகொள்ளிச் செல்வன் என்பவனும் (க.எண். 67), கோழிவடுகன் என்பவனும் (க எண். 66), பொங்கில் விண்ணன் என்பவனும் (க.எண். 69) வண்ணநக்கன் என்பவனும் (க.எண். 71), கங்சப்புழையுள் படைவந்த ஞான்று சாகாட நக்கன் (க.எண். 70) என்பவனும் எறிந்துப்பட்டமைக்காக எடுக்கப்பட்டுள்ளன.

இந்நடுகற்களில் குறிப்பிடப்படும் நீலகண்டரைசர் யார் என்பதை அறிய இயலவில்லை. விழுப்புரம் மாவட்டம் மேல் சிறுவலூரில் உள்ள பல்லவ அரசன் சிம்மவிண்ணனின் 24 -ஆம் ஆட்சியாண்டு நடுகல்லில் குறிப்பிடப்படும் நீலகண்டரைசனாக இருக்கலாம்.

ஆறு, ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த இந்நடுகற்களுக்குப்பின் சோழ அரசன் முதலாம் ஆதித்தன் கொங்கு நாட்டைக் கைப்பற்றிய பின்னரே இங்குச் சோழர் கல்வெட்டுகள் பரவலாகக் காணப்படுகின்றன. சேலம், ஆத்தூர், ஆற்றுவளவு, பேளூர், சிறுமாங்கோடு போன்ற ஊர்களில் பராந்தகன், சுந்தரசோழனுடைய கல்வெட்டுகளும், பேளூரில் பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மனான ஆதித்தகரிகாலனுடைய கல்வெட்டும். ஆற்றுவளவில் உத்தமசோழன் நடுகல்லும், சிறுமாங்கோட்டில் முதலாம் இராசேந்திரன் கல்வெட்டும் உத்தமசோழபுரம், காடையாம்பட்டி ஆகிய ஊர்களில் இரண்டாம் இராசாதிராசனுடைய கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இவர்களுக்குப்பின் மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டுகள் மிகுதியாகவும் அவனுக்கடுத்து மூன்றாம் இராசராசனின் கல்வெட்டுக்கள் குறைந்தும் காணப்படுகின்றன.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழப்பெருவேந்தர்களின் ஆட்சியில் தொய்வு ஏற்பட்டுள்ளதைக் காட்டும் கல்வெட்டுகள் ஆறகளூரில் கிடைத்துள்ளன. குலோத்துங்கனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் ஆறகளூருடைய இராசராசதேவன் பொன்பரப்பினாரான குலோத்துங்கசோழ வாணகோவரையனுக்கும் திருக்கோவிலூருடைய கிளியூர் மலையமானுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையும் (40), அவனது முப்பத்தைந்தாவது ஆட்சியாண்டில் ஐயர் பொன்பரப்பின வானகோவரையர்க்கும் , ஐயர் குலோத்துங்கசோழ வாணகோவரையர்க்கும், அவரது மைத்துனர் காடவராயனுக்கும் இடையே ஏற்பட்ட ஒருவருக்கொருவர் தப்பாமையைக் காட்டும் உடன்படிக்கையையும், (31) எடுத்துக்காட்டாக உள்ளதைக் காணலாம். குலோத்துங்கன் காலத்தில் வெளியூர் (பேளூர்) ஏரியில் (வெளியூரான் ஏரி) உள்ள இரண்டு கல்வெட்டுகள் வண்ணான் ஒருவனும் வண்ணாத்தி ஒருத்தியும் தனித்தனியாக இரண்டு மதகுகள் அமைத்துக்கொடுத்ததைக் கூறுகின்றன.

மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் சோழநாட்டைக் கைப்பற்றி ஆண்ட பாண்டிய மன்னர்களில் சடையவர்மன் சுந்தரபாண்டியனுடைய கல்வெட்டுக்கள் இம்மாவட்டத்தில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. சுந்தரபாண்டியனுடைய அண்ணாழ்வி (அண்ணன்) பெயரால் ஆறகளூர் திருக்காமீசுவரமுடையார் கோயிலில் குலசேகரஆளுடையார் திருமுற்றம் ஒன்றை ஏற்படுத்திக் குலசேகர ஆளுடையார்க்கும் நாச்சியார்க்கும் பூசை திருப்பணி முதலானவற்றுக்கு நிலம் முதலியவற்றை அளித்துள்ளான். கோயிற்காணியுடைய பிராமணர்கள் தமது பூசைக்காணிப் பங்குகளையும் உரிமைகளையும் விற்றுக்கொள்வதும் வாங்கிக்கொள்வதும் நடைமுறையில் இருந்துள்ளதையும் (11), பெண்களுக்கும் பூசைக்காணிப் பங்குகள் இருந்துள்ளதையும், கோயிற்காணி உடையாரே சொத்தைத் திருடுவதையும் அதற்குத் தண்டம் பெற்றதையும் சுந்தபாண்டியனுடைய ஆறகளூர்க் கல்வெட்டில் (41) காணலாம். சுந்தரபாண்டியன்

திருமேனிக்கும், இவன்காலத்தில் ஆறகளூர் திருக்காமீ சுவரமுடையார் கோயிலில் சுந்தரபாண்டியனுடைய அண்ணன் குலசேகரதேவரையும் நாச்சியாரையும் எழுந்தருளிவித்து பூசைக்காணி முதலியவற்றை அளித்த கண்டியதேவர் வாளுக்கும் தோளுக்கும் நன்றாகத் தாரமங்கலம் இளமீசுவரமுடையாருக்கு நிலக்கொடை அளித்த செய்தி குறிப்பிட்டுள்ளது. இவன் காலத்தனவாக மன்னன் பெயர் குறிப்பிடப்படாமல் அருளிச் செயல் என்ற வாசகத்தோடு பல கல்வெட்டுகளைக் காணமுடிகிறது.

சுந்தரபாண்டியன் காலத்தில் தாரமங்கல முதலிகளில் நீரணி இளையான் நல்லுடையப்பர் தன்னுடைய தந்தை பெயரால் ஏற்படுத்திய லக்சுமணச் சதுர்வேதிமங்கலம் அமைத்ததையும் அச்சதுர்வேதிமங்கலத்துப் பட்டர்களுக்கு நிலம் போன்ற பலவகைத்தானங்களை நல்லுடையப்பரும், ஊரவரும் அளித்த கொடைகளையும் தாரமங்கலம் கல்வெட்டுகள் பேசுகின்றன. சுந்தரபாண்டியனுடைய பதின்மூன்றாம்ஆட்சியாண்டில் ஆறகளூர் வாணிக நகரத்தார்க்கும் செட்டிகளுக்கும் இடையே பூசை மேற்கொள்வதில் பிணக்கு ஏற்பட்டுள்ளது. வாணிகநகரத்தார் இக்கோயிலில் பூசை முதலான திருப்பணிகள் தங்களுக்கே உரிமையுடையது எனச் செட்டிகளுடன் பிணங்கி நின்றனர். வழிவழிப் பூசை உரிமை தனக்குள்ளது என்று நகரத்தார் வாதீடு செய்தனர். அதனால் பூசை உரிமை ஏலத்தில் விடப்பட நகரத்தார் சண்டேசுவரப்பெருவிலையாக உரிமை பெற்றனர். காலப்போக்கில் இத்திருப்பணிகளை முறையாகக் குறைவரைச் செய்யாமல் திருப்பணிகளில் தாழ்வு ஏற்பட்டது. அதனைக் கண்டறிந்த ஆற்றூர் நாட்டவர் முன்வந்து பூசை முதலான திருப்பணிகள் முட்டாமல் நடைபெற இக்கோயில் சீமாகேசுவரர்க்கும் தானத்தார்க்கும் ஆற்றூர் நாட்டுத் தலைவாய் என்ற ஊரை குடி நீங்கா தேவதான இறையிலியாக அளித்து பூசை திருப்பணிகள் தாழ்வுராமல் நடைபெறச் செய்தனர். இது இன்றைய கோயிற் சிக்கல்களில் தீர்வு காண ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்திற்கு முன்பிலிருந்து இன்றைய சேலம் மாவட்டத்தின் கிழக்குப்பகுதி கல்லைக்குறிச்சி (கள்ளக்குறிச்சி) கடலூர் மாவட்டங்களின் மேற்குப்பகுதிகளை உள்ளடக்கி ஆறகளூரைத் தலைநகராகக் கெண்ட மகதைமண்டலத்தை வாணகோவரையர் என்னும் சிற்றரச மரபினர் ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் அக்கால சூழலுக்கேற்ப சோழர்களுக்கும் பின்னர் பாண்டியர்களுக்கும் அடங்கியும், அடங்காமல் தனித்தும் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் புகழ்பெற்றவன் பொன்பரப்பினானான மகதேசன் என்பவன் மிகச் சிறந்த போர்வீரனாகவும் பக்திமானாகவும் திகழ்ந்துள்ளான். திருவண்ணாமலைக் கோயிலுக்கு “பொன்வேய்ந்தமையால் பொன்பரப்பின வாணகோவரையன்” எனப் பட்டப்பெயர் பெற்றுள்ளான். இப்பட்டப்பெயரால் இவனது ஆட்சிப்பகுதியில் பல ஊர்களும் பல கோயில்களும் உள்ளன. இவனது காலத்தில் ஆறகளூர்

திருக்காமீசுவரமுடையார் திருக்கோயில் வளாகத் தரையில் கிடந்த கல்வெட்டால், ஆறகளூருக்கும் காஞ்சிபுரத்துக்கு இடையே ஒரு பெருவழி அமைக்குப்பட்டுள்ளது என்பன அறியவருகிறது[1]. மகாதேசன் பெருவழி காஞ்சிபுரம் என எழுதிக் காத்ததைக் குறிக்க சிறுசிறு குழிகள் தோண்டப்பட்டுள்ளன. எத்தனைக் காதங்கள் என்பதை அறிய இயலாவண்ணம் அக்காதகல்லின் இறுதிப்பகுதி உடைந்துள்ளது. கல்லா மக்களும் அறியும் வகையில் காதத்தைக் குறிக்கப் பெரிய சிறிய குழிகளைத்தோண்டி வைப்பது மரபு என்பதை தகடூர் மாவட்டம் வழியாகச் செல்லும் அதியமான் பெருவழி காதக் கற்களால் அறியலாம்.

ஆறகளூரில் சமணசமயம் செல்வாக்குப்பெற்று இருந்திருக்கவேண்டும். அதற்கடையாளமாக இவ்வூர்க் கோயிலில் இரண்டு சமணத் தீர்த்தங்கரர் செப்புத் திருமேனிகள் உள்ளன. அவை வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டன எனக் கூறப்படுகிறது. ஆனால் இவ்வூரிலேயே ஒரு சமணக்கோயில் இருந்து அழிந்துவிட்டமையை இவ்வூர்க் கோட்டைக்கரை நிலத்தில் காணப்படும்

“ஸ்வ்ஸ்தி ஸ்ரீ இந்த
ஸ்ரீகோயில் பொன்
பரப்பின பெருமாள்
ஜினாலயமான
நாற்பத்தெண்ணா
யிரம் பெரும்பள்ளி
நாற்பத்தெண்ணா
யிரவர் ரக்ஷை” என்ற வாசத்துடன் கூடிய கல்வெட்டால் அறியலாம்.

போசள அரசன் இராமநாதன் காலத்தில் கருப்பூர், பெரியசோரகை, தாரமங்கலம் இளமீசுவரர், கைலாசநாதர்கோயில்களுக்கு அளிக்கப்பட்ட கொடைகள் கூறப்படுகின்றன. இதே காலகட்டத்தில் சேலம் மாவட்டத்தில் சோழகங்கர் என்ற ஒரு சிற்றரசமரபு ஆண்டுள்ளதற்கடையாளமாக சில கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

சோழ பாண்டியர்களுக்குப் பின்னர் விசயநகரத்தார் ஆட்சியின் கீழ் சேலம் மாவட்டம் அடங்கியது. விசயநகர அரசன் கம்பணன் காம்லமுதல் வசந்தராயர் வரை உள்ள அரசர்களின் கல்வெட்டுகள் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றன. அவற்றுள் கிருட்டிணதேவராயன் காலக் கல்வெட்டுக்களே மிகுதி.

கம்பணன் காலத்தில் ஆறகளூர் திருக்காமீசுவரமுடையார் கோயில் அகோரசிவமுதலியார் மகனுக்குக் கண்காணிப்பணிகள் பலவும் மனையும் கொடுத்ததைப் பற்றிக் கூறுகிறது. விருப்பண்ண உடையார் காலத்தில் வலஞ்சிரத்து உடையார்

1. 1976-ஆம் ஆண்டு இப்பதிப்பாசிரியரால் கண்டறியப்பட்டது.

கோயில் பூசைக்காணி உடைய சிவபிராமணன் தடுத்தாட்கொண்ட நாயனார்க்கு ஆறகளூர் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் பூசைக்காணி உடைய சிவப்பிராமணர்கள் மூவர் தம் கோயிற்காணி பங்கில் சிலவற்றையும் பலதளி உரிமைகளையும் விற்றுக்குடுத்ததைப் பேசுகிறது. இதே காலத்தில் ஆறகளூரில் நடந்த பூசைக்காணி தொடர்பான ஒரு வழக்கும் அதனை திருமலை நாயக்கர் தீர்த்து வைத்த செய்தியும் (28) மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

கிருட்டிணதேவராயர் காலத்தில் மகதைமண்டலத்தை ஆட்சி செய்த எறமாஞ்சி திம்மைய நாயக்கனும் அவன் மகன் துலுக்கணநாயக்கனும் பலகொடைகள் அளித்ததையும் பாண்டியர்காலம் முதல் ஓடாமல் கிடந்த ஆறகளூர்த் தேரை ஓட்டுவித்துத் திருவிழா எடுத்த செய்திகளையும் கூறுகிறது. ஆறகளூருக்கு அருகில் உள்ள பனைத்தலை என்ற ஊர் பாழாய்கிடக்க அதனைத் திருத்தித் தன்பெயரால் துலுக்கணன்பேட்டை எனப் பெயரிட்டு குடியேற்றியதையும் பேசுகிறது.

விசயநகர நாயக்கர்களுக்குப் பின்னர் சேலம் மாவட்டத்தின் மேற்கில் சங்ககிரி ஓமலூர் வட்டப் பகுதிகளில் கட்டிமுதலிகள் ஆண்டுள்ளனர். அவர்களது கொடைகள் பெரும்பாலும் பிராமணர்களுக்கு பல அக்ரகாரம் அமைத்துக் கொடுத்ததையும் அக்ரகாரப்பட்டர்களுக்கு கொடைகள் அளிக்கப்பட்டதையும் குறிக்கிறது. கட்டிமுதலியார் சிதம்பரத்தில் வணங்காமுடி மடம் என்றோர் மடத்தை நிறுவி அம்மடத்துப் பூசை முதலியவற்றுக்காக பூவாணிய நாட்டுப் படைவீட்டில் நிலக்கொடை அளித்துள்ளான். இக் கட்டிமுதலி சொல் தவறாதவன் என்பதைக் காட்ட இளமீசுவரமுடையார் கோயிலில்,

"செங்கதிர் பன்னிரண் டீசர்பதி னொன்று திக்குபத்து
கங்கையு மொன்பது வெற்பெட் டேழுகடல் கார்த்திகையா
றைங்கணை நான்மறை முச்சுடர் சாதியவை யிரண்டு
மங்கை வரோதயன் கட்டிமுதலி வார்த்தை ஒன்றே" எனச் செய்யுள் வடிவில் கல்வெட்டு வெட்டிவைத்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தின் கிழக்கு பகுதியில் சின்னமநாயக்கன் என்பவன் செல்வாக்குபெற்று இருந்துள்ளான். அவன் பெயராலும் அவன் மக்கள் பெயராலும் பல ஊர்களும் பெயர் பெற்றுள்ளன.

ஆற்றுவளமில்லா சேலம் மாவட்டத்தில் ஏரிப்பாசனம் மிகுதியாகப் போற்றப்பட்டுள்ளதை கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் பல ஏரிகள் பற்றிய செய்தியால் அறியலாம். ஆற்றுப்பாசனம் இல்லா இப்பகுதியில் கட்டப்பட்ட ஏரிகள் அவற்றைப் பேண மக்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் போன்றவற்றைக் கண்டுணர்ந்தால் இன்றைய நிலையில் நீர்வளத்தைப் பேண நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கு பாடமாக அமையும்.

க. குழந்தைவேலன்

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 1/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 14
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 10-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆத்தூர்	இ.க.ஆண்டறிக்கை	: 407/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.க.தொ.XIX-351
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க.எண்	: 1
அரசு	: சோழர்		
அரசன்	: பரகேசரி		

இடம் : காயா நிர்மலேசுவரர் கோயிலில் நடப்பட்டுள்ள பலகைக்கல்.

குறிப்புரை : மிலாட்டு ஆற்றூர்க் கூற்றத்துப் பிரமதேயம் மலையமானாற்றூர் திருமேற்றளி நக்கர்க்குப் பெருமாள் கன்மிகள் பெருமங்கல முடையானும், இருமடி மாயிலட்டி என்பவனுக்காக மிலாடு, வாணகப்பாடி, மோரமும், சுங்கமும் பாட்டத்துக்கு ஆள்கின்ற நின்னா-வடுதுறையுடையானும் திருச்சென்னடைக்காக நாள்தோறும் குறுணி நெல்லால் நானாழி அரிசி அளந்துள்ளதைத் தெரிவிக்கிறது.

Summary : On a stone slab erected in the Kāyanirmalēsvarar temple. It registers the provision made for the daily supply of one *kuruṇi* and *nānāḻi* of paddy for the tiruccenṉaḍai service in the temple of Thirumēṟṟaḷi Nakkar at Malayamān Āṟṟūr a *brahmadēya* in Ārrūrkkūṟṟam, subdivision of Milāḍu by Ninnāvaḍuturaiyāṉ and two other persons who are stated to be the collectors of tolls in Milāḍu Vānagappādi and Mōram divisions.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்-
2. பரகேசரி பநூ(ர்)க்கி
3. யாண்டு ௰௪ ஆ-
4. வது மிலாட்டு ஆற்-
5. றூர்க் கூற்றத்து ஸ்ர-
6. ஹ்மதேய மலையமா-
7. னாற்றூர் திருமேற்றளி
8. நக்கர்க்கு பெருமாள்
9. கந்மிகள் பெருமங்க
10. லமுடையானும் இரும-
11. டி மாயில(ட்)டிக்குமாக மி-
12. லாடும் வாணகப்பாடியு-
13. ம் மோரமுஞ் சுங்கமும்

14. பாட்டத்துக்கு ஆழ்கின்ற
15. நிந் னாவடுதுறையநும்
16. கழஞ்சேகாற் த . . . . கா
17. மனும் இம்மூவோம் இவ்வூ-
18. ர்த் திருமேற்றளி ஆள்வார்க்-
19. கு வைத்த திருச்செந்நடை
20. நிசதி நெல்லுக் குறுணி னா-
21. ழி யரிசியால் சந்திராதித்தவ-
22. ற் வைத்தோ மித்துறை-
23. யில் சுங்கமாழ்வார் இ-
24. யநூஐ இரக்ஷி-
25. த்தார் ஸ்ரீபாதம் எங்கள்
26. தலைமேலின இதுக்கு சு–
27. ஹிதஞ் செய்வான் ஏழகத்து
28. (க்கீ)ழச்ச மறுவான்

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 2/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: சகம் 1435 பொ.ஆ.1513
ஊர்	: ஆத்தூர்	இ.க.ஆண்டறிக்கை	: 403/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/248
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க.எண்	: 2
அரசு	: சோழர்		
அரசன்	: கிருட்டிணதேவராயர்		

இடம் : காயா நிர்மலேசுவரர் கோயில் தென்சுவர்.

குறிப்புரை : அக்கித்திம்மைய நாயக்கர் இறைவானரையூர் ஆரித கோத்திரத்து ஆசுவாலயன சூத்திரத்து அருணகிரிநாதர் ஸ்ரீரங்கநாதபட்டர்க்கு ஆற்றூர் கூற்றத்து ஆற்றூர் நாட்டு நிவாவாற்று வடகரையிலுள்ள வில்லவராய நத்தத்தை அக்கித்திம்மைய நாயக்கச் சதுர்வேதி மங்கலமென்று பெயரிட்டு முற்றூட்டாக அளித்ததைக் குறிக்கிறது. இன்று சுவேதநதி, வசிட்டநதி என அழைக்கப்படும் வெள்ளாற்றின் பழம் பெயர் நிவா ஆறு என்பதை இக்கல்வெட்டாலும் பிற கல்வெட்டுகளாலும் அறியவருகிறது.

Summary : South wall of the same temple. Records that Akki-Timmiya nāyakkar a nayakkadanam of Krishṇadēvarāya granted the village called Vilvarāyanattam of the north bank of the river Nivā in Āṟṟūr Kūṟṟam in Magadhai Manḍala Malāḍu alais Jananātha vaḷaṇaḍu after renaming his own name as Akkitimmaiya nāyakkacchadurvēdi maṅgalam to a *Brāhmaṇa* named Aruṇagirināthār Sri Raṅgarājabhaṭṭar of Hāritha gōtra.

கல்வெட்டு :

1. ஶு஭மஸ்து
2. ஸ்வஸ்தி ஸ்ரீ ஶகாப்தம் ௲௪௱௩௰௫ இதன்மேல் செல்லா நின்ற ஸ்ரீமுக ஸம் . . சித்திரை மீ ௰௩ ஸ்ரீமந் நாயங்காசாய௹ . . . . . ஹாஷைக்குத் தப்புவநாயங்கர
3. கண்டன் லோககண்ட வஞ்சிநாராயணன் சாடிக்காறர் கண்டன் மறைபுக்கார் காவலன் ஸ்ரீமக … … .. ளாசி அக்கித்திம்மைய நாயக்கர் யிறைவானரையூர் ஹாரித மொ–
4. த்ரத்து சூஶ்வலாயந ஸூத்ரத்து அருணகிரி நாதர் ஸ்ரீரங்கராஜஹட்டற்கு ஸர்வமாந்ய பட்டயம் குடுத்தபடி நமக்கு ஸ்வாமி க்ருஷ்ணராயர் பாலித்த நாயக்கத்தன சீர்மையான மகதைமண்டல மலாடாகிய ஜநநா-
5. தவளநாட்டு ஆற்றூர்க் கூற்றத்து ஆற்றூர் நாட்டு நிவாவாற்று வடகரை வில்லவராயநத்தம் நந்செய் புஞ்செய் நத்தம் செய்த்தலைத் திடர் மாவடை மரவடை குளவடை சாரடை ஏற்கடமை பொற்கடமை தறிக்கடமை வா-

6. சல்மனை காசாயம் மந்தைவரி பல செக்காய நகரிகை ஆய மற்றும் எப்பேர்ப்பட்ட பலவுபாதியு முள்ப்பட நாளது ஶுதியையும் ஶுக்ரவாரமும் ரோஹிணி நக்ஷத்ரமும் ஸௌபாக்ய யோகமும் பெற்ற இற்றைநாள் ஸ்ரீரங்கராஜ ஸன்னிதியிலே ஸந்நிதி-

7. க்ஷீரிணி தீர்த்தகரையிலே இந்த வில்வராயந் நத்தத்தை நம்முடைய பேராலே அக்கித்திம்மைய நாயக்க ஸமுத்ர மங்கலமென்று இவற்கு ஸஹிரண்யோதக தாராபூர்வ்வமாக பண்ணி குடுத்தோம் இந்த அக்கித் திம்மைய நாயக்க

8. ஸமுத்ரமங்கலத்து ஸகர் சீர்மைக்குள்ப்பட்ட நியிநிக்ஷேப ஜலதருபாஷாண ஆகாமிகோபூ ஸாக்ஷ்ய ஹோம தெஜஸ்வாம்யங்களும் உட்பட தாராபூர்வ்வமாக பண்ணிக் குடுத்தோம் இந்த அத்தித் திம்மநாயக்க

9. ஸமுத்ர மங்கல மிவற்கும் மிவர் வம்ஶ த்தாற்கும் தாநாதி விநிமய விக்ரயம் களுக்கு யோக்யமாக சந்த்ராகாஸ்தாயியாக ஸர்வமாந்யமாக தாரைவார்த்து குடுத்து நான்கெல்லையும் கல்வெட்டி நாம் குடுத்தோம்

10. இந்த தன்மத்தை பரிபாலனம் பண்ணினவர் கெங்கை கரையிலே ஆயிரங்கோடி கோதாநம் பண்ணின பலத்தை பெற கடைவாராக-

11. வும்.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 3/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 15-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆத்தூர்	இ.க.ஆண்டறிக்கை	: 404/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/249.
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க.எண்	: 3
அரசு	: விசயநகர்		
அரசன்	: கிருட்டிணதேவராயர்		

இடம் : காயா நிர்மலேசுவரர் கோயில் தென்சுவர் அடிநிலை.

குறிப்புரை : கல்வெட்டு சிதைந்தும் முற்றுப்பெறாமலும் உள்ளது. கிருட்டிணதேவராயர் காலத்தில் துலுக்கணநாயக்கருக்கு நாயக்கத் தானமாக அளிக்கப்பட்ட ஆற்றூர் கூற்றத்து ஆற்றூர் நாட்டுப் பிரிவு கள்ளி நத்தம் குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு செய்திகள் ஏதும் பெற இயலவில்லை.

Summary : In the same place. The main portions of the record have been lost. Mentions Tulukkaṇa-Nāyakar, the nāyaka of the sīrmai Kaḻḻinattam on the northern bank of river Nivā separated from Āṟṟūr in Āṟṟūrkūṟṟam in Āṟṟūr nāḍu renamed it as Marittayi agram.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ மன் மகாமண்டலேசுவரன் அரிராய விபா(டன்)
2. . . . . நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பூறுவ தெட்சிண
3. க . . . . . . டைய பிறதாப கிறிட்டிணராயர் பிறிதிவி ராச்சியம் பண்ணி அருளா நின்ற ச . . .
4. த்து துலாநாயற்று பூறுவபக்ஷத்து தெசமியும் சோமவாரமும் சதையமும் . . .
5. ஸ்ரீமன் மகாநாயங்காச்சாரியன் பாழ்சைக்குத் தப்புவராயங்கர கண் . . .
6. காவலன் மானங்காத்தான் நரலோக கண்டன் வஞ்சிநாராயணன் செ
7. ஞ்சித் துலுக்கண நாயக்கர் தமக்கு சுவாமி பாலித்த நாயக்கத்தந சதுச்சீர்மை
8. யும் ஆற்றூர் நாட்டு ஆற்றூர்க் கூற்றத்துப் பிரிவு நிவாவாற்று வடகரை கள்ளிநத்தத் –

கல்வெட்டு இதோடு நின்றுவிட்டது. தொடர்ச்சி கிடைக்கவில்லை. இதனுடன் உள்ள துண்டுக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அது,

1. இம்மடி நரசிங்க . . . . சன் . . கால்
2. ள இவ்வீர கிறாம்மாக யிரண்டு . .

3. மற்றும் எப்பேர்பட்டது(ம்) இந்த ஊற்கு வரும் பல
4. .க்கு இவற்கும் இவர் வர்க்கத்தாற்கும் சந்திராதி. .
5. புண்ணிய காலத்திலே . . . வேதப்பிரமணரையும்

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 4/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: சகம் 1449 பொ.ஆ. 1527
ஊர்	: ஆத்தூர்	இ.க.ஆண்டறிக்கை	: 404அ/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/250.
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க.எண்	: 4
அரசு	: விசயநகர்		
அரசன்	: கிருட்டிணதேவராயர்		

இடம் : காயா நிர்மலேசுவரர் கோயில் மேற்குச் சுவர் அடிநிலை.

குறிப்புரை : கல்வெட்டு சிதைந்தும் முற்றுப்பெறாமலும், இரண்டு துண்டுகளாகவும் உள்ளது. துண்டுகளுக்கிடையில் சில பகுதிகள் விடுபட்டுள்ளன. பாரத்வாச கோத்திரத்து ஆசிலாயன சூத்திரத்துப் பிராமணன் ஒருவனுக்கு கிருட்டிணதேவராயர் நன்மைக்காகத் தானம் அளிக்கப்பட்டதைக் குறிப்பதாகத் தெரிகிறது.

Summary : In the west wall of the same temple. Mutilated inscription. Two separate portions are available. It seems to be records the land grand to a *brāhmiṇ* with all its privileges including local miscellaneous levies *nallerudu, naṟpasu, nāṭṭuviniyōgam* etc., and enjoy the eight kinds of rights in respect of that land, on occasion of ēkādasi for the merit of the king.

கல்வெட்டு :

முதல் துண்டு.

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ மன்மகா மண்டலேசுரன் பாஷைக்கு தப்புவராயர்
2. கண்டன் கொண்டநாடு குடாதான் பூறுவதெக்ஷிண பச்சிம
3. உத்தர சதுசமுத்திராதிபதி கசவேட்டை கண்ட அருளிய ஸ்ரீவீர
4. பிரதாபன் ஸ்ரீவீரகிறுஷ்ணராயர் மகாரா௱யர் பிறுதி(வி)ராச்சி-
5. யம் பண்ணி அருளா நின்ற சகாத்தம் ௲௪௱௪௰௯ இதின்மேல் செல்-
6. லா நின்ற விரோதி சங்வசரத்து சிங்க நாயற்று பூறுவ பக்ஷத்து
7. ஏகாதேசியும் ஆதித்த வாரமும் பெற்ற பூச நக்ஷத்திறத்து நாள் பா-
8. ரத்வாச கோத்திரத்து ஆசிலாயன சூத்திறத்து குரவைசேரி . .

துண்டு இரண்டு

1. துலுக்கண . . . . கிறாமம் ஒன்றுக்கு நான்கெல்லைக்கு-
2. ட்பட்ட நஞ்சை புஞ்சை நத்த மட்டுகை மாவடை மரவடை நல்-
3. லெருது நற்பசு நாட்டு(வினியோ)கம் மற்று மெப்பேற்பட்ட சகல சமுதா-

4. ய பி(ராப்)த்தியும் உட்பட (சர்வமா)னியம் ஆக ஏகாதேசி புண்ணி-
5. ய காலத்திலே . . . கிறுஷ்ணராய மகாராயற்கு தன்மம் ஆக கு-
6. டுத்தபடியாலே னேதிநிக்ஷேபம் லெபாஷாண இக்ஷிண்ணி
7. யாகாமி சித்த சாத்தியம் என்னப்பட்ட அஷ போக தேச சுவாம்
8. மியங்க . . . . உட்பட . . . . . . நித்திய . . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 5/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 32
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆத்தூர்	இ.க.ஆண்டறிக்கை	: 405/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/251
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க.எண்	: 5
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : காயா நிர்மலேசுவரர் கோயில் மேற்குச் சுவர் அடிநிலை.

குறிப்புரை : வன்னெஞ்சப்பெருமாள் ஆற்றூர் ஊரவற்கு விடுத்த ஓலை. ஆற்றூர் திருமேற்றளி உடைய நாயனாற்கு தமது 32-ஆவது ஆட்சியாண்டு முதல் இவ்வூர் நன்செய் முதல்தர நிலத்தில் இருநூறு குழி திருவிளக்குப் புறமாக அளித்துள்ளார். அதன் நான்கெல்லையிலும் திருச்சூலக்கல் நாட்டி கல்வெட்டு வித்துக்கொண்டு காக்க வேண்டும் என ஆணையிட்டுள்ளதைக் குறிக்கிறது.

Summary : On the base of the west wall of the same temple. Records an order from *Vaṉeñjapperumāḷ* to the ūraver of Āṟṟūr, that the *Vaṉneñjapperumāḷ* gave 200 *kuḻi* of wet land to the Tirumēṟṟaḷi uḍaya nāyanār of Āṟṟūr as *tiruviḷakkuppuram.* The villagers of Āṟṟūr should install the boundary stones and maintain the endowment.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஶ்ரீ வன் (நெஞ்சப்) பெருமாள் ஓலை ஆற்றூர் ஊரவர் ஓலை கண்டு விடை
2. தங்களூர் உடையார் திருமேத்தளி உடையா நாயனார்க்குச் சந்திராதித்தவற் திருவி-
3. ளக்குப் புறத்துக்கு இவ்வூர் நன்செய் நிலத்து முதல்த்தர நிலத்திலே இருநூறு குழி
4. இறையிலியாக முப்பத்திரண்டாவது முதல் குடுத்தோம் இப்படிக்கு திருச்சூலத்தாபநம் பண்ணி
5. கல்லிலும் வெட்டிக் கொண்டு திருவிளக்குச் செலுத்துவதே இவை வன்நெஞ்சப் பெருமாளெழுத்து
6. இவை விழுஞத்தரையனெழுத்து .

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 6/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 32
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: சகம்1431 பொ.ஆ.1509
ஊர்	: ஆத்தூர்	இ.க.ஆண்டறிக்கை	: 406/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/252.
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 6
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : காயா நிர்மலேசுவரர் கோயில் வடக்குச் சுவர் அதிட்டானம்.

குறிப்புரை : சக ஆண்டு 1431இல் துலுக்கணநாயக்கர், ஆரித கோத்திரத்து ஆசுவலாய சூத்திரத்து அருணகிரிநாதர் பற்பநாப பட்டர்க்கு மகதை மண்டலத்து ஆற்றூர் நாட்டுப் பிரிவான நிவாவாற்று வடகரை கள்ளிநத்தத்தை அம்மன் பெயரால் மாரித்தாய் அகரம் எனப் பெயரிட்டு நீரோடட்டிக் கொடுத்ததைக் குறிக்கிறது. இத்தானத்தை ஆற்றூர் திருமேற்றளி தம்பிரானார் கோயில் குமுதப்படையில் கல்வெட்டிக் காத்து வரவேண்டும் என ஆணையிட்டதையும் குறிக்கிறது.

Summary : On the base of the north wall of the same temple. Records the gift of the village kallinattam by Tulukkaṇa Nāyakkar which is separated from Āṟṟūr in Āṟṟūr nāḍu in Magadamaṇḍalam after renaming it as Mārittāy agaram to a *Brāhmiṇ* named Aruṉagirināthar Parpanāpabaṭṭar of Irayānaraiūr.

கல்வெட்டு :

1. சகாத்தம் ௲௪௱௩௰௧ இதன்மேல் செல்லாநின்ற சுக்கில ௵ அற்பசி ௴ ௨௰௨ ௳ . . ஆ . . . . துலுக்கண நாயக்கர் இறையாநரையூர் ஆரிதகோத்திர. . . . . . (சூ)த்திரத்து அருணகிரிநாதர்
2. பற்பநாபபட்டற்கு மகதைமண்டலத்து ஆற்றூர் நாட்டு ஆற்றூர் பிரிவான நிவாவாற்று வடகரை கள்ளிநத்தம் என்று பேராந இவ்வூர் அம்மன் திருநாமத்தாலே மாயித்தாய் அகரம் என்று தாரைவார்த்து இவ்வூர்
3. நான்கெல்லையும் கல்லும் நாட்டி ஆற்றூர் உடையவர் திருமேநித்தெளி உடைய தம்பிரானார் சன்னிதியில் குமுதப்படையில் கல்லிலும் எழுதிக் குடுத்தபடியாலே இந்த தந்ம்மத்தை சந்திராதித்யவரை-
4. யும் னாங்களே செலுத்திக்கொண்டு வரக்கடவோம் ஆகவும் இப்படிக்கு ஆற்றூர் நாட்டு நாட்டு கு. . . . . டிக்கு ஆற்றூர் நாட்டு வேளார் அம்பலவர் எழுத்து உ .

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 7/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 15-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆத்தூர்	இ.க.ஆண்டறிக்கை	:8/1892
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.IV-435
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 7
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : ஆத்தூருக்கு அருகில் உள்ள கரியராமர் கோயில் முன்புறம் நடப்பட்டுள்ள கல்.

குறிப்புரை : தள்ளரையகவுண்டர், மதுரை வீரையகவுண்டர் மற்றும் மேல் மலை நாட்டாரும் கரிய பெருமாளுக்கு மேலைச் செம்பரக்கை என்ற ஊரைத் திருவிடையாட்டமாகக் கொடுத்ததைக் கூறுகிறது.

Summary : A stone slab erected in front of the Kariyāramar temple at Āṟṟūr. It records that the land given as tiruviḍaiyāṭṭam to the God Kariaperumāḷ by Taḷḷaraiya gouṇḍḍer, Madura Vīraiya gouṇḍer and the mēlmalai nāṭṭār in the year of Virōthikirudu.

கல்வெட்டு :

கல்லின் முன்பக்கம்

1. விரோதிகிறிது ஹ . மார்-
2. கழி மாதம் உ௰க தள்ள-
3. ரைய கவுண்டர் ம(துர)
4. வீரையகவுண்டர் மேல்ம-
5. லை நாட்டாரும் கரிய-
6. பெருமாளுக்கு மேலைச்
7. செம்பறக்கை திருவி-
8. ளையாட்டம் குடுத்த-
9. படி நஞ்சை புஞ்சை
10. நாற்பாற்க் கெல்லை-
11. யும் சகலமும் யுள்பட ச-
12. ந்திர சூரி(ய)ர்வரை
13. அகுதம் பண்ணின-
14. வர் கெங்கையிலே

கல்லின் பின்பக்கம்

15. காராம் பசுவை
16. கொன்ற பா-
17. வத்திலே போ-
18. க கடைவர்கள்.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 8/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: ---
ஊர்	: ஆத்தூர்	இ.க.ஆண்டறிக்கை	:9/1892
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.IV-456.
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 8
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : மேற்படி கல்லுக்கு அருகில் உள்ள மற்றொரு கல்.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. செய்திகளை அறிய முடியவில்லை.

Summary : In the same place. Badly mutilated inscription.

கல்வெட்டு :

1. . . . . . சித். . . . .
2. . . . . . த . . . . .
3. . . . . . . மு . . . . .
4. . . . . ழ . . . . .
5. . . . . . . முறை . . . .
6. . . . . . . குத . . . . .
7. . . . . தங் . . .
8. . . . . . க்கு . . . .
9. . . . . . ஆகக் . . . . .
10. . . . . . ச்சன் உ . . .
11. க்கு . . . . . . வமானி . . .
12. . . . . . . நம் யிதுக்கு . . .
13. . . . . தமதன் . . .
14. . . . . பெற்றுந் . . . . . . த . . .
15. . . . . . ண்ணின . . . .
16. . . . . . . ரை . . . .
17. . . . . . எட்டு . . . .

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 9/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: ---
ஊர்	: கருங்காடு	இ.க.ஆண்டறிக்கை	: 10/1892
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.IV-457.
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க.எண்	: 1
அரசு	: ---		
அரசன்	: ---		
இடம்	: மாரியம்மன் கோயில் முன்புறம் நடப்பட்டுள்ள கல்.		

குறிப்புரை : அவ்வையாரம்மை என்பவர் கருங்காடு என்ற இடத்தில் கோயிலுக்கு (சுவாமியாற்கு) நிலக்கொடை அளித்துள்ளார். இதற்குக் கள்ளரைய பெரிய கரியப்ப கவுண்டர், பட்டத்துக் கள்ளரைய அண்ணியப்பகவுண்டர் ஆகிய இருவரும் நாலுகரை நாட்டாரும் பொறுப்பாக இருக்க இதற்குப் பூசை நிமித்திகப் பணிகளை நயினாக்கவுண்டர், நம்பியார் உள்ளிட்டார் செய்து வந்துள்ளனர்.

Summary : A stone erected in front of the Māriyammaṉ temple. In mordern characters. Records the land donated to the Avvaiyārammai swamiyār as poodāṉam (land donation) by Periyakariappa gouṇḍer, Kallaraiya Anniyappa gouṇḍer and Nālukarai nāṭṭār at Kāṇgāḍu. And said that the person who performed pooja with Nāyinagouṇḍa nambiyār should be done it perfectly without fail.

கல்வெட்டு :

1. விய ஸ்ரீ வையாசி மீ ௰௭௨
2. அவைய்யாரம்மை
3. சுவாமியாற்கு பூதா-
4. னம் விட்டதுக்கு க-
5. ள்ளரையக பெரிய
6. கரியப்ப கவுண்டர்
7. பட்டத்து கள்ள-
8. ரைய அண்ணியப்ப
9. கவுண்டர் இந்த ரண்-
10. டு துரையளும் நாலு-
11. கரைநாட்டாரும் கள்ள
12. நாட்டில் சேந்த காங்-

13. காடு பூதானம் விட்ட-
14. துக்கு பூசை நிமித்தி-
15. யம் பண்ணிவருகுறவர்
16. கள் நயினாகவுண்ட நம்பி-
17. யார் உள்பட்டார் யிந்த வூர்-
18. தானத்துக்கு யாதா மொரு-
19. வர் பூசை கட்டளை அவி
20. . . . . . . [மே]கம் அதி-
21. க மாகா நடத்தி வரு[கிற]-
22. வர்கள் ஆயிராரோக்கிய
23. அய்ஸ்வரியம் அவர் பி...
24. . . . . வை தொழுது மாதா. . .
25. . ண்டு போகவும்
26. யிந்த பூதானம் பூமி
27. ஆகவும் சந்திராதித்தர்
28. உள்ளமட்டும் நடத்தவும் இ-
29. ப்படி யிதுக்கு யாதா
30. மொருத்தர் ரண்டு நி-
31. னைச்சவர்கள் கெங்-
32. கைக் கரையிலே
33. காராம் பசுவை க்
34. கொன்ற பாவத்தி
35. [லே] போவார்[கள்]

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 10/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 9
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 429/1913.
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/275
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 1
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சுந்தரபாண்டியன்		

இடம் : திருக்காமீசுவரமுடையார் கோயில் முன் மண்டப வடக்குச்சுவர்.

குறிப்புரை : அரசனது ஆணைப்படி மிலாடாகிய சனநாதவளநாட்டு ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரம் உடைய நாயனார் கோயிலுக்கு திருநந்தவனம் அமைக்க ஆறகளூர் குலசேகரன் பெரிய ஏரி முதல்தர நன்செய் நிலத்தில் அனைத்தாயங்களும் உட்பட இரண்டாயிரம் குழி நிலம் இறையிலியாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இந்த ஆணையைப் பாண்டி மண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து கப்பலூரான உலகளந்த சோழநல்லூர் ஆச்சன் கணபதி ஆழ்வான் காடுவெட்டி நிறைவேற்றினான்.

Summary : North wall of the Tirukkāmīśwaramuḍaiyār temple of Āṛagaḻūr . Records the gift of 2000 kuḻi of first grade wet land under the irrigation of the reservoir named Kulasēkaraṉ pērrēri as tax-free (irai-ili) with all entitlements (anaithu āyam) for the tirunandavaṉappuram to the God Tirukkāmīśwaramuḍaiyār nāyanār at Āṛagaḻūr in Āṟṟūrkūṟṟam in Milāḍu alais Jananātha vaḷanāḍu. The record was attested by Āchchaṉ Gaṇapathi Āḻvaṉ alais Kāḍuveṭṭi of Kāppalūr alais Ulagaḷanda chōḻa nallūr in Muttūrrukkūṟṟam in Pāṇḍimaṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமுகப்படி ஸ்ரீகோச்சடபன்ம
2. ரான த்ரிபுவநச்சக்கரவத்திகள் எம்மண்டலமும் கொ-
3. ண்டருளிய ஸ்ரீஸுந்தரபாண்டிய தேவர்க்கு ஒன்ப-
4. தாவது மாசிமாதம் பத்தொன்பத[ா]ந்[தி]ய-
5. தி மிலாடாகிய ஜனநாத வளநாட்டு ஆற்றூர்
6. கூற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீ-
7. ஸ்வரமுடைய நாயனார்க்கு திருநந்தவன-
8. ப்புற இறையிலிஆக இவூர் குலசேகரன் பெ-

9. ரி ஏரியில் முதற்தரத்திலே நன்செய் அனை-
10. த்தாயம் உட்பட இரண்டாயிரம் குழி
11. இறையிலியாக குடுத்தோம் இப்படிக்கு ஓலை பிடி
12. பாடாக திருச்சூலத் தாபனம் பண்ணி சந்திறாதித்தவரை-
13. யும் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்-
14. வது இப்படிக்கு பாண்டிமண்டலத்து முத்தூற்றுக் கூற்-
15. றத்து கப்பலூரான உலகளந்த சோழநல்லூர் ஆச்-
16. சன் கணபதி ஆழ்வான[ா]ன காடுவெட்டி எழுத்து ௨
17. திருவெழுத்து இவை துல்லியம் ௨

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 11/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: சகம்.1306.பொ.ஆ.1384
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 430/1913.
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/276
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 2
அரசு	: விசயநகர்		
அரசன்	: விருப்பண்ண உடையார்		

இடம் : திருக்காமீசுவரமுடையார் கோயில் முன்மண்டப வடக்குச்சுவர்.

குறிப்புரை : விசயநகர அரசன் விருப்பண்ண உடையார் காலத்தில் பானூர்க் கூற்றத்து வலஞ்சிரத்து வலஞ்சிரமுடையார் கோயில் காணியுடைய சிவப்பிராமணன் தடுத்தாட்கொண்ட நாயனுக்கும், ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் திருக்காமீசுவரமுடையார் கோயில் காணியுடைய திருச்சிற்றம்பலநம்பி, திருஞானசம்பந்தபிரமராயர் திருநீற்றுவீரர் இடையே ஏற்பட்ட பூசைக்காணி தொடர்பான முறையீட்டுக்கான தீர்ப்பு பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

Summary : In the north wall base of the same temple. Records the sale out of their share of the right of worship along with the rights and privileges attached to the share of the right including a house-site to Tatuttātkond dēvar nayar son of Kāsiyaba<u>n</u> Namaccivāyadēvar, who was one of the Sivbrāhmaṇās and who has the Kāni in the temple of Tiruvalañjiramu-daiya nāyanār of Valañchiram in Pa<u>n</u>urkūṟṟam in Malāḍu alias Jananātha vaḷanāḍu in Magadaimṇḍalam by of three Sivabrāhmaṇās who had Kāni in the temple of Tirukkāmīśsvaram udaiya nāyanār, the god of Āṟagaḻūr in Āṟṟūrkkūṟṟam. The first of the later three Brahmins Kasiban Tālippiḷḷai alias Tiruccirṟambala nambi referred to two days kaṇi which had. The second Po<u>n</u>parappi<u>n</u>ār alias Tiruna-sambanda-brahmarayar both which he sold been given as sridanam to his mother Nalla tayar and ⅜ days kāni of his as that which son of he (his family) had secured (inherited) both of which he sold. The second po<u>n</u>parappinār alais Tirunanasambanda brahmarāyar son of Kāsipan Namaccivāya brahmarayār sold one day's kāṇi which he had secured from Nambiyār Tirukkāmīśvaramuḍaiyār alais Tirunana sambanda Pāṇḍithar and his co shars (uḷḷiṭṭār) who was also one conducting workship in the same temple. The third, Bharadvāja<u>n</u> Kacchibhaṭṭa<u>n</u> Tirunīrru virar, sold ½ days kāni which had been given to him by his uncle or father in law (māmanār) Tāḷippiḷḷai alais Tiruc-cirrambalanambi, the same having been given as bride fee (parisam) in favour of his mother by his father. The rights sold were expensive and combrehensive as they included entitlement to the privileges and rights attached to (the worship) several other temples in the surrounding areas.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீஉநுமா உஹாஉணுடுஷ்முரநு ஹரிராயவிஹாடநு ஹாஷைக்குத் தப்புவராயர் கண்டன் வகுஷ்ஜுஜூாதிபதி ஸ்ரீவீரஅரியண்ண உடைய[ா]ர் குமாரன் விருப்பண்ண உடையார் வூயிவி இராஜூ பண்ணி அருளாநின்ற ரூகாவூ சூநாசு [இதன்]மேல் செல்லாநின்ற ரகூாக்ஷி ஸம்வகஸரத்து ஒஷ நாயற்று பூறுவபக்ஷத்து வூணெூயும் புதன் கிழமையும் பெற்ற சொதிநாள் மகதைமண்டலம் மலாடாகிய ஜனனாதவளநாட்டு பானூர்க் கூற்றத்து வலஞ்சிரத்து உடையார்
2. திருவலஞ்சிரம் உடைய நாயனார் கோயிற் காணிஉடைய ஶிவஷ- ாஹ்ணரில் காமஶூபன் நமச்சிவாய தேவர் மகன் தடுத்தாண்ட நாயனார்க்கு ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுரமுடையநாயனாற் கோயிற் காணிஉடைய ஶிவப்பிராஉணரில் காசிபன் தாழிப்பிள்ளையான திருச்சிற்றம்பல நம்பியும் மேற்படி கோயிற் காணிஉடைய காசிபன் நச்சிவாயப்பிரஉாராயர் மகன் பொன்பரப்பினாரான திருஞானசம்பந்த பிரஉராயரும் இக்கோயிற் காணிஉடைய பாரத்துவாஜன்
3. திருவுடையான் கச்சிபட்டர் மகன் திருநீற்றுவீரரும் ஆக இவ்வனைவரோம் காணி விலை வூஉாணஂ பண்ணிக் குடுத்தபடிக் குடுத்த பரிசாவது இந்த தடுத்தாட்கொண்ட நாயனார்க்கு நாங்கள் காணியாக கல்வெட்டிக் குடுத்தபடி என் ஹூாதா இஷபதேவர் மகள் இந்த தடுத்தாட்கொண்ட நாயனார் உாதா நல்லதாயார்க்கு முன்னாள் நாந் ஷூதன வூாவூியாக குடுத்த எங்கள் சென்மமான நாள் உ௹ ஂ நாங்கள் கொண்டுடையோமான நாள் தெவசஂ ஆகநாள் மூன்றேகாலே அரைக்காலும் மனையும்
4. உள்ளூர் தாயிலுநல்ல சோளீசுரமுடையநாயனார் பொன்பரப்பின சோளீசுரமுடைய நாயனார் மற்றும் பல கோயில்களில் இன்நாளால் வருஂ ஸகல வூாவூிகளுஂ படாகை ஆற்றூர் நரசிங்கபுரம் பூண்டி பொன்பரப்பி மற்றும் பல ஊர்களில் பலதளி கோயில்களில் இன்நாளால் வரும் ஸகல வூாவூிகளும் உரித்தாவதாகவுஂ பொன்பரப்பினாரான திருஞானசம்பந்த பிரஉாராயன் இக்கோயிலில் பூசிக்கும் நம்பியார் திருக்காமீசுரமுடையாரான திருஞானசம்பந்த பண்டிதர் உள்ளிட்டார் பக்கல்
5. கொண்டுடையேனான நாளாய் யிவர்க்கு விற்றநாள் க-ம் மேற்படி உள்ளூர் பலதளி கோயில்களிலும் பிடாகைகளில் பலதளி கோயில்களிலும் இந்த நாள் ஒன்றினால் வரும் சகலப் பிராத்திகளும் உரித்தவதாகவும் பாரத்வாஜந் கச்சிப்பட்டந் திருநீற்றுவீரர் முன்னாள் என் மாதாவுக்கு பரிசத்துக்கு எங்கள் பிதாக்கள் குடுத்து எங்கள் மாமனார் தாழிப்பிள்ளையான திருச்சிற்றம்பலநம்பி இனக்குத் தந்த நாளாய் இவர்க்கு நான்விற்றநாள் ௹ஂ உள்ளூர் பலதளி கோயிலும் மேற்படி பிடாகைகளில் பல-
6. தளி கோயில்களிலும் இன்னாள் வரைக்கும் வரும் சகல வூாவூிகளும் உரித்தவதாகவும் இப்படி சம்மதித்து ஆகநாள் சஞவசஂ மனையும் உரித்தாவதாக சம்மதித்து வூஉாணப்படிக்கு கல்வெட்டிக் குடுத்தோம் தடுத்தாட்கொண்ட நாயனார்க்கு தாழிப்பிள்ளையான திருச்சிற்றம்பல நம்பியும் பொன்பரப்பினாரான திருஞானசம்பந்த பிரஉராயரும் கச்சிப்பட்டர் மகன் திருநீற்றுவீரரும் ஆக இவ்வனைவரோஂ இவை முதலியார் அகோரசிவர் எழுத்து நாயனார் என்னிடைய நாயனார் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 12/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 8
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 1258
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 426/1913.
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/272
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 3
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சுந்தரபாண்டியன்		

இடம் : திருக்காமீசுவரமுடையார் கோயில் முன்மண்டப வடக்குச்சுவர் செகதி.

குறிப்புரை : மிலாடாகிய சனனாதவளநாட்டு ஆற்றூர் கூற்றத்து ஆறுகளூர் உடையார் திருக்காமீசுவரமுடையார் கோயிலில் அண்ணாழ்வி (அரசனுடைய தமையன்) பேரால் கண்டியதேவர் எழுந்தருளுவித்தக் குலசேகர ஆவுடையார்க்குஅமுதுபடிசாத்துப்படிஉள்ளிட்டநாள்வழி நிவந்தங்களுக்கு உடலாக (வைப்புச்சொத்தாக) ஆறகளூர் குலசேகரன் பெரியேரியில் கீழ்பற்றில் முதல்தரமான நன்செய் நிலத்தில் அனைத்தாயங்களும் உட்பட 3000 குழி நிலம் அளிக்கப்பட்டதை ஆறகளூர் கோயில் தானத்தார்க்கு தெரிவிக்கும் அரசாணையைக் குறிக்கிறது. இதைச் செயல்படுத்தியவன் பாண்டிமண்டலத்து உரைய்குடி உடையா னாவான்.

Summary : North wall of front in the same temple. A record of the Pāṇḍiya king Kōccaḍapanmar alias Tripuvanacckkaravattikaḷ Sundarapāṇḍiya devar in his 8th year records the grand of 3000 *kuḻi* of first grade wet land in the Kilpaṟṟu under the irrigation of Kulasēkaraṉ pererī and all the income came from the lands should be utilized capital for the daily routine worship of food offerings and decorations (cattuppaḍi) for the God Kulasēkara Āluḍaiyar, which is consecrated in the name of annāḻvi (brother of the king) by Kaṇḍiya dēvar in the temple of Tirukkāmīśvarmuḍaiya nāyanār, the God of Āṟagaḻūr in Āṟṟūrkūṟṟam in Milāḍu alais Jananatha vaḷanāḍu. The order was addressed to the tānāṭṭār of the temple. The copy was attested by the Uḍaiyan of Uraikuḍi in Pāṇḍimaṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமுகப்படி கோச்சடபன்மரான திரிபுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீஸுந்தர பாண்டிய தெவற்க்கு
2. யாண்டு எட்டாவது எதிராமாண்டு ஆடிமாதம் மிலாடாகிய ஜனனாத வளநாட்டு ஆற்றூற்-
3. கூற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீஸ்வரமுடையநாயனார் கோயில் தானத்தார்க்கு இன்னாய[னா]ர் கே-
4. ரயில் அண்ணாழ்வி தி(ருநாமத்)தால் கண்டியதேவர் எழுந்தருளுவித்த ஆவுடையார் குலசேகர ஆவுடையார்க்கு

5. அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட நித்த நியமத்துக்கு உடலாக இவ்வூர்க் குலசேகரன் பெரி ஏரியில் கீழ்பற்று நன்-
6. செய் முதல்தரத்திலே அனைத்தாயம் உட்பட மூவாயிரம் குழி குடுத்தோம் இப்படி(க்)கு இ ஓலை பிடிபாடாககொண்-
7. டு இன்னிலம் கல்லிலும் செம்பிலும் வெட்டி நான்கெல்லையும் திருச்சூலத்தாபனம் பண்ணி சந்திராதித்தவ-
8. ரையும் அனுபவித்துப் போதுவது இப்படிக்கு இவை பாண்டிமண்டலத்து உரைய்குடி உடையான் எழுத்து வ
9. இவை திருவெழுத்து துல்லியம் வ

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 13/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	:	சகம்.1436.பொ.ஆ.1514
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	428/1913.
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/274
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	:	4
அரசு	: விசயநகர்			
அரசன்	: கிருட்டிணதேவராயர்			

இடம் : திருக்காமீசுவரமுடையார் கோயில் முன் மண்டபம் வடசுவர்.

குறிப்புரை : கிருட்டிணதேவராயர் காலத்தில் (சகம் 1436) உள்ளூர் ஆட்சியாளன் எறமாஞ்சி அக்கிதிம்மய நாயக்கரும் ஆறகளூர் திருக்காமீசுவரமுடையார் கோயில் பண்டாரத்தாரும் சீமாகேசுரரும் ஆறகளூர் வேங்கடம் மகன் ஊராண்டானுக்கு ஊரமை இறையிலியாக அவன் திருத்தின நிலம் உட்பட 250 குழி நன்செய் நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

Summary : In the same place. A record of the Vijayanagara king Krishnadēvarāya in Saga era 1436. Records that Eramañji Akki Timmaya Nāyaka and the authorities (sri panḍārattār and māgēsvarās) of the Āṛagaḻūr Tirukkāmīś-varamuḍaiyār temple together granted 250 *kuḻi* of land as Ūrāmai to a private individual named Ūrāṇḍār son of Vēṇgaḍam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டலேசுரந் பாஷைக்கு தப்பும் இராயர் கண்ட மூவராயர் கண்டந் மேதிநி மீசு
2. ர கண்டந் கட்டாரி சாளுவந் கிறுட்டிணதேவ மஹாராயர் ப்ருதுவிராஜ்யம் பண்ணி அருளா நின்ற சகாப்தம்
3. ௧௪௩௬ இதன்மேல் செல்லா நின்ற யுவ ஸம்வத்ஸரத்து மிதுந நாயற்று பூர்வபக்ஷத்து பஞ்(ச)மியும் சோமவாரமும் பெற்ற
4. அசுவதினாள் ஸ்ரீமந் மஹா நாயங்காசாரியந் பாஷைக்குத் தப்பும் நாயங்கர் கண்டந் நரலோகர் கண்டந் வங்கிநாராயணந் மறை
5. புக்கார் காவலந் சேர சோழ பாண்டிய வல்லாளராய பயங்கரந் யாதவராய ஸ்தாவ நா[ச்]சாரியந் சம்புவராய சவுத்தாங்க வயிரி சாடிக்காரர்
6. கண்டந் ஸ்ரீமது எறமாஞ்சி அக்கி திம்மயநாயக்கரும் மகதைமண்டலத்து ஆற்றூற் கூற்றத்து ஆறகளூர் நயினார் திருக்காமீசுரமுடை-
7. ய தம்பிரானார் கோயில் ஸ்ரீபண்டாரத்தாரும் ஸ்ரீமாயேசுரரும் இவ்வூர் வேங்கடம் மகன் ஊராண்டாற்க்கு ஊரமை இறையிலி பட்டயம் குடுத்த-
8. படி காளியம்மை நாச்சியார் கோயிலுக்கு வடகிழக்கு முன்னாள் தான் திருத்தின நிலம் உட்பட நஞ்சைநிலம் ௨௫௰ குழியும் அகழுக்குள் இறையி[லி]

9. யிற் செய்துகொண்டு புஞ்சை ஓரணை ஏற்க்கு மானிய . . . . . தானத்தாற்க்கு பின்பு ஊற்கு முன்பு . . . . தோம் உள்ளூர் ஒடுக்கம் இந்த ஊள்ளூர் . . . .

10. யக சம்பந்தனுக்கு ஊரமை இறையிலி ஊருடி குழி நஞ்சையும் ஓரணை ஏற்கு மாரும் . . . . ம . . . . . ருத்துக்குப் பின் முன் சுவந்திரமும் சந்[தி]ராதித்த

11. வரையும் அனுபவித்துக்கொண்டு சுகத்திலே இருக்கவும்.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 14/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	10
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	:	---
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	425/1913.
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/271
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	:	5
அரசு	: பாண்டியர்			
அரசன்	: சுந்தரபாண்டியன்			

இடம் : திருக்காமீசுவரமுடையார் கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டபம் வடச்சுவர்

குறிப்புரை : மலாடாகிய சனனாத வளநாட்டு ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு வந்த அரசனது திருமுகம். இக்கோயிலில் அண்ணாழ்வி (அண்ணன்) பெயரால் கண்டியதேவர் எழுந்தருளுவித்த குலசேகர ஆளுடையார்க்கும் நாச்சியார் வாழ்வித்தமங்கைக்கும் தேவதான இறையிலியாக பொன்பரப்பின இராசநாராயணநல்லூர் வாரப்பற்று முதல்தர நஞ்சையில் அரைநிலம் அனைத்தாயங்களுமுட்பட இறையிலியாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

Summary : In the same place. A record of the Pāṇḍiya king Jaḍāvarmaṉ alais Tribhuvanacchakkravarthi Sundara Pāṇḍiyadēva in his 10th year. Registers that the king granted ½ vēli of land at Ponparappi alais Rājanārayaṇanallūr as a dēvadāṇa to the shrines of Kulasēkara Āvuḍaiyār and Vaḻvitta Maṅgaiyār which is consecrated by Kaṇḍiyadēva in the name of the king's elder brother (annāḻvi) The record was attested by Ādichchan Ganavathi Āḻvān alais Kāḍuveṭṭi of Kāppalūr in Muttūṟṟūkkūṟṟam, a subdivision of Pāṇḍimaṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமுகப்படி கோச்சட பன்மரான த்ரிபுவனச்சக்ரவத்தி ஸ்ரீஸுந்தர பாண்டி-
2. யதெவற்கு யாண்டு ௰ வது மீனநாயற்று பூர்வபக்ஷத்து த்ரயோதஸியும் வியாழக்கிழமையும் பெற்ற
3. மகத்து நாள் மலாடாகிய ஜனநாத வளநாட்டு ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திரு-
4. க்காமீஸ்வரமுடைய நாயனார் கோயில்த் தானத்தார்க்கு இக்கோயிலில் அண்ணாழ்வி திருநாமத்-
5. தால் கண்டியதேவர் எழுந்தருளுவித்த குலசேகர ஆவுடையார்க்கு நாச்சியார்
6. வாழ்வித்த மங்கையர்க்கு தேவதான இறையிலியாக பொன்பரப்பியான இராஜநாராயண நல்லு-

7. ரர் வாரப்பற்று நன்செய் நிலத்து முதல்தரத்திலே அரை நிலம் அனைத்தாயங்களும் உட்பட இறையிலி-
8. யாகத் தந்தோம் இப்படிக்கு இ ஓலை பிடிபாடாக கொண்டு இனிலம் சந்திராதித்தவரையும் செல்லக் கடவுதாக கல்-
9. லிலும் செம்பிலும் வெட்டி தேவதான இறையிலியாக அனுபவித்துப் போதுவது இப்படிக்கு பாண்டிமண்டலத்து மு-
10. த்தூற்று கூற்றத்து கப்பலூரான உலகளந்தசோழநல்லூர் ஆதிச்சன் கணபதி ஆழ்வானான காடுவெட்டி எழுத்து ௨ திருவெ-
11. ழுத்து துல்லியம் ௨

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 15/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 13
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 1289
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 432/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/278
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 6
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சுந்தரபாண்டியன்		

இடம் : திருக்காமீசுவரமுடையார் கோயில் முன்மண்டப வடக்குச்சுவர்க் குமுதம்.

குறிப்புரை : பாண்டிய அரசன் சுந்தரபாண்டியனுடைய பதின்மூன்றாவது ஆட்சியாண்டில் (பொ.ஆ.1289) ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீசுவரமுடையார் கோயில் பணிகளில் செட்டிகளுக்கும் வாணிகநகராத்தார்களுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்குபற்றி குறிப்பிடுகிறது. ஆறகழூருடையார் கோயிலில் திருவானி, திருமார்கழி, திருமாசித் திருநாள் விழாக்கைளை நடத்துவதில், இவர்களிடையே பிணக்கு ஏற்பட வாணிய நகரத்தாரே சண்டேசுவரப் பெருவிலையாகக் கொண்டு நடத்ததும்படி செட்டிகள் விட, இத்திருப்பணி தாழ்வுபட்டமையால் ஆற்றூர் நாட்டவர் இந்தத் திருப்பணி எங்கள் பூர்வீகமானது அது தாழ்வுபடாமல் நடத்தவேண்டும் எனக் கோயில் சீமாயேசுவரரையும் தானத்தாரையும் நடத்தும்படி அச்செலவுகளுக்காக ஆற்றூர்நாட்டு தலைவாய் என்ற ஊரை அனைத்தாயங்களுடன் குடிநீங்கா தேவதான இறையிலியாக அளித்துள்ளனர்.

Summary : In the same place. A record of the Pāṇḍiya king Jaḍavarmaṉ alais Tribhuvanacchakkravarthi Sundara Pāṇḍiyadēva in his 13th year (A.D. 1289) Records the dispute between Vāṇiya nagarattār (oil merchants) and the cheṭṭis in which the later permitted the former to manage the temple duties. The management continued to be in the hands of the Vaṇiya nagarattar for some time and it was failed. So it was handed over the cheṭṭīs and the arunattavar (district people) granted the village of Talaivāi for conducting the festival permanently in the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு பதின்மூன்றாவது மிதுன நாயற்று பூர்வ்வபக்ஷத்து த்ர- யொதஸியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சுநிழத்து நாள் மலாடான ஜனநாத வளநாட்டு ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீஸ்வரமுடைய நாயனார்க்கு திருவானித் திருநாளுக்கும் திருமார்கழித் திருநாளுக்கும் திருமாசித்

2. திருநாளுக்கும் முன்னாள் வாணிக நகரத்தார் செட்டிகளுடன் பிணங்கி இவர்களைத் தாழ்வுகாட்டி நாங்கள் இத்திருப்பணி ஏறிட்டுக்கொள்ள என்ற அளவில் நீங்கள் சண்டேஸ்வரப் பெருவிலையாகக் கொண்டு திருநாள்படி தேவை உள்ளது குறைவறுக்கிறோம் என் கையில் இவர்கள் இத்திருச்சாந்து சாத்தி எழுந்தருளிப் புறப்படும்படிக்கு திருமேற்பூச்சு திருப்பரிவட்டம் திருமாலை திருக்காப்புநாண் திருப்பாவாடை-

3. க் குறைவறுப்பு திருவினைக்குடை திருவாலவட்டம் திருக்கோடி ஆடை சட்டத்துக்குப்பீலிஉள்ளிட்டவைபந்தம்எண்ணைதட்டுப்படாமல்செய்விக்(க) கடவதாக சீமாஹேஸ்ர கண்காணி செய்வார்களுக்கு முறிகொடுத்து இவர்கள் சண்டேஸ்ரப் பெருவிலை கொண்டு உடையதான இத்திருப்பணி தாழ்வுபடுகையாலேய் ஆற்றூர்நாட்டவர் கண்டு இத்தாழ்வு கேட்டு இப்படி தாழ்வுபட லாகாதென்றும் ஆற்றூர்நாட்டுக்கு ஆறகளூருடையார்

4. திருக்காமீரமுடையநாயனார் திருநாள்தேவை எங்களுக்கு வஂஷ்வூம் என்றும் இடையிலே தாழ்வுகாட்டி வாணிகர் நடத்துகிறோ மென்கிற இது தாழ்வுபட்டபடியாலே இது தாழ்வுபடாமல் நடத்தும்படி சீஊஹேஸ்ரர்க்கும் தானத்தார்க்கும் இசைய நாங்கள் நாடாக குடுப்பதான ஆற்றூர் நாட்டு தலைவாய் இத்தலைவாய் நான்கெல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்செய் கரைப்புன்செய்க்கு பொன்வரி உள்ளிட்ட அனைத்தாயங்களும்

5. நாட்டுவினியோகமும் உட்பட திருநாள் தேவைக்கு தலைவாய் குடிநீங்காத் தேவதானம் இறையிலியாகத் தந்தோம் ஆற்றூர்நாட்டு நாட்டவரோம் இப்படிக்கு நான்கெல்லையும் திருச்சூலத்தாபனம் பண்ணி கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளவும் இப்படிக்கு ஆற்றூர்நாடு காணிப்பற்று அற்ற கடமை கொள்ளக்கடவது இப்படிக்கு நாட்டுக்குச் சமைந்து பெரியநாட்டுவேளான் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 16/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 434/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII -280
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 7
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : திருக்காமீசுரமுடையார்கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டப வடசுவர் அடிநிலை

குறிப்புரை : சேரமானார்க்கு அளிக்கப்பட்ட சிறுமுறி. அரசனது 13-ஆவது ஆட்சியாண்டு முதல் சேரமானார்க்கும், திருக்காமீசுவமுடையார் கோயில் தாயிலும்நல்ல சோழீசுவரமுடையார் கோயில், பொன்பரப்பின சோழீசுவரமுடையார் கோயில் ஆகிய கோயில்களுக்கும் அளிக்கப்பட்ட காணியாட்சி பற்றி குறிக்கிறது. குறுக்கைப்பாடியில் கார், பசானம் விளையும் நஞ்சை நடுப்பற்றில் நூறுகுழியும், பாக்கன்பாடி நஞ்சை நடுப்பற்றில் நூறுகுழியும் இலத்திபாடி வரகுவிளை புன்செய்நிலத்தில் ஆயிரங்குழியும் விசலூரில் வரகுவிளை நிலத்தில் ஆயிரங்குழியும் ஆக நன்செய்யில் இருநூறுகுழியும் புன்செய்யில் இரண்டாயிரம் குழியும் காணியாக அனுபவிக்க இறையிலியாக அளிக்கப்பட்டுள்ளது.

Summary : In the base of the same wall. Registers order of the king Cēramāṉ in his 13th year. The king granted the temples of Tirukkāmīsvar muḍai-yanāyanār, Tāyilumnallanāyanār. Tāyilumnalla-chōlīsvaramudaya nāyanār and Poṉparappiṉa choḷiśvaramuḍaya nāyanār and also granted 100 kuḷi at Kuṛukkaippādi, 100 kuḷi at Pākkaṉpāḍi. 1000 kuḷi of dry land at llattippāḍi, 1000 kuḷi of dry land at Visalūr as Kāṇi for the temples.

கல்வெட்டு :

1. சேரமான[ா]ர்க்கு சிறுமுறி உடையார் திருக்காமீசுரமுடைய நாயனார் கோயிலும் உடையார் தாயிலுநல்ல சோளீசுரமுடைய நாயனார் கோயிலும் உடையார் பொன்பரப்பின சோளீசுரமுடைய நாயனார் கோயிலும் உ[ட்] பட்ட கோயில்களும் தங்களுக்கு காணியாக தந்தோம் இப்படிக்கு காணி ஆக
2. அனுபவித்து போதவும் தங்களுக்கு காணியாக பதின்மூன்றாவது பங்கூனி மாதம் முதல் குறுக்கைபாடியில் னஞ்சையில் நடுப்பற்றிலே கார் பாசான மு[ம்]பயின்ச் செயும் நிலத்திலே இறையிலியாக அடைத்தகுழி நூறும் பாக்கன்பாடியில் னஞ்செய் நிலத்தில் நடுப்பற்றில் அடை[த்]த இறையிலி குழி நூறும் இலத்திபாடியில் வர-
3. கு விளையும் நிலத்தில் அடைக்கு குழி ஆயிரமும் விசலூரில் வரகு விளையும்

நிலத்தில் அடைத்த குழி ஆயிரமும் ஆக னஞ்செய் குழி இறுநூறும் புஞ்செய் குழி இரண்டாயிரமும் ஓலை பிடிபாடாக கொண்டு சந்திராதித்தவரையும் காணியாக அனுபவித்து போதவும் இப்படி கல்லும் வெட்டிக் கொள்ளவும் பாற்பது

4. முதலியார் நமஶிவாயதேவர் எழுத்து உ னாயனார் திருக்காமீஶ்வரமுடையார் எழுத்து குலசேகரப் பிரமாராயர் எழுத்து தாயிலும் நல்லபட்டர் எழுத்து திருமேற்தளி உடையார் எழுத்து சேதராயபிரமராயர் எழுத்து ஆறகளூற் கோயில் கண(க்)கு காணியுடைய நெடுவாயிலுடையாந் பிச்சந் திருக்காமீசுர வேளார் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 17/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: சகம்.1430பொ.ஆ.1508
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 427/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/273
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 8
அரசு	: விசயநகர்		
அரசன்	: கிருட்டிணதேவராயர்		

இடம் : திருக்காமீசுரமுடையார்கோயில் முன்புள்ள மண்டப வடக்குச் சுவர் அடிநிலை.

குறிப்புரை : விசயநகர அரசன் கிருட்டிணதேவராயர் காலத்தில் (சகம்1430 பொ.ஆ.1508) ஆற்றூர்ப் பகுதியை ஆண்ட உள்ளூர் ஆட்சியாளன் எறமாஞ்சி துலுக்கணநாயக்கர் ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடையார் கோயிலுக்கு பாண்டியர் காலத்திற்குப் பின்பு திருத்தேர் ஒன்று இல்லாமையால் திருத்தேர் சமைத்து திருநாள்(திருவிழா) நடத்தி சீபலி நாயகரை முன்னெழுந்தருளும்படிச் செய்தார். அதோடு அமையாது நாச்சராண்டார் என்பவரை சீபலிநாதர் திருவடிதாங்கப் பணித்து அவருக்குக் காணியாட்சியாக நானூறு குழி நஞ்சை நிலமும் ஒரு மனையும் நாள்தோரும் அரைநாழி அரிசியால் அமுதும் அளிக்கச் செய்தார்.

Summary : West wall of the maṇḍapa of the same temple. A record of the Vijayanagara king Krishnadēvaraya in the Saga era 1430. Registers that Erramañji Tulukkana Nāyaka granted some wet land and a house site to Naccarāṇḍar as *kaṇiācci* to be enjoyed hereditarily. After he came to know that there was no car for the temple after Pāṇḍiyas time he also arranged to make a car or the Gods procession during the festival time.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஊநு ஊஹாஊணூஜெஸ்வூரநு ஹாஷெக்குதப்பும் இராயர் கண்ட-
2. நு மூவராயர் கூணூநு ஜெதிநிஃசுர கூணூநு கட்டாரி ஸாளுவந் வகூ சமுத்திறாதிபதி
3. ஸ்ரீ கூரஷ்ணராயர் வுரயூவிரராஜ்ஜூ பண்ணி அருளா நின்ற சகாவூ
4. தூசாநடு இதந் மேல் செல்லா நின்ற சுக்கில சங்வற்சரத்து மீந நாயற்று
5. வூஷுவகூஷத்து ஸவுமியும் வூஹஸூதி வாரமும் பெற்ற விசாகத்து நாள்
6. மகதை மண்டலத்து ஆற்றூ[ர்] கூற்றத்து ஆறகளூர் நயினார் திருக்கா-
7. மீசுரமுடைய தம்பிரானாற்க்கு ஸ்ரீஊநு மஹாநாயங்கரசாரியன்
8. ஹாஷைக்கு தப்பும் நாயங்கர் கண்டந் நரலோக கண்டந் வங்கி (நா)-
9. ராயணந் ஸ்ரீஊகூ எறமாஞ்சி துலுக்கண நாயக்கர் திருக்காமீசுரமுடைய

10. தம்பிரானாற்கு பாண்டிய நாள்ளுக்கு பிந்பு தேரில்லாமல் இருக்கயில் தே-
11. ரும் சமைத்து திருநாளும் நடத்தி சீவிலி நாயகர் திருமு(ன்) எழுந்தருளும்படி க
12. ட்டளை இடுகையில் சீவிலி நாயகர்[க்]கு சீபாதம் தாங்கும்படி நாச்சராண்
13. டார்க்கு காணி ஆட்சி ஆக கோயிலிலே திநமும் நானாழி அருசியில் அ-
14. ம்முதும் முள்ளி குழி நஞ்சை நிலம் சா ம் ஒரு மனையும் சந்திறாதித்த
15. வரையும் நாச்சராண்டாரும் மிவந் வற்கத்தாரும் காணியாக அனுபவித்துக்
16. கொள்ளவும் இதுக்கு அகுதம் பண்ணிநவாள் காராம் பசுவை கொன்ற
17. பாவத்திலே போகவும் . . . . இவை திருஞாநசம்பந்த பண்டிதர்
18. எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 18/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 4
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ..1220
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 410/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/256
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 9.1&9.2
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம்இராசராசன்		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் அர்த்தமண்டபம் வடசுவர்

குறிப்புரை : மகதை மண்டலத்து ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீசுவர முடையார் கோயில் தானத்தார்க்கு இராசராசதேவனுடைய ஆணை. இத்திருக்காமீசுவரமுடைய நாயனார்க்கும், சுற்றாலைக்(பரிவார) கோயில் நாயன்மார்களுக்கும் திருக்காமக் கோட்டமுடைய பெரியநாச்சியார்க்கும் இராக்காலத்தில் திருமுன்பு எரியும் நூற்றைம்பது திருவிளக்குகளுக்காக ஆற்றூர் நாட்டு நரைத்தலை நாவலூர் நான்கெல்லைக் குட்பட்ட நன்செய் புன்செய் ஏந்தல் பற்று பொன்வரி உட்பட அனைத்தாயங்களும் திருவிளக்குப்புறமாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

Summary : North wall of the Arthamaṇḍapa of the same temple. A record in the fourth regnal year of the chōḻa king Tribuvanacakkaravattikaḷ Rājarājādēvar. Records gift of the village Narialai Nāvalūr to the temple of Tirukkamisvaramuḍaiya-Nāyanār at Āṟagaḻūr the subdivision of Magadaimaṇḍalam for burning 150 lamps is front of the shrines of the god and goddness and the sub shrines.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜதே
2. வர்க்கு யாண்டு நாலாவது மகதமண்டலத்து ஆற்றூர் கூ-
3. ற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீஸ்வர முடையநாய-
4. னார் கோஇல் தானத்தார்க்கு இன்னாட்டு நரைத்தலை நா-
5. வலூர் நான்கெல்லைக் குட்பட்ட நன்செய் புஞ்சை ஏந்தல்
6. பற்று உட்பட இன்னாயநார்க்கும் பரிவார நாயன்மார்க்கும் தி -
7. ருக்காமக்கோட்டமுடைய பெரியநாச்சியார்க்கும் இராக்க[ா]-
8. லத்துக்கு திருமுன்பெரியுந் திருவிளக்கு ௱௫௰ இத்திருவிளக்-
9. கு னூற்றைம்பதுக்கும் பொன்வரி உள்ளிட்ட அனைத்-
10. தாயமு மற்றும் எற்[ப்]பேர்பட்டனவும் உட்பட இந்த நரைத்தலை
11. நாவலூர் சந்திராதித்தவரையும் திருவிளக்குப்புற இறையிலியா-

12. க தந்தோம் இப்படி நான்கெல்லையும் திருச்சூலத்தாபன-
13. ம் பண்ணி கல்லிலும் செம்பிலும் வெட்டி திருவிளக்கு எரித்துப் போதுக
14. இவை வா(ண)கோவரையன் எழுத்து இவை விழுப்பாதராயன் எழுத்து உ

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 19/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 13
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1267
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 414/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/260
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 10
அரசு	: போசளர்		
அரசன்	: இராமநாததேவன்		

இடம் : திருக்காமீசுரமுடையார்கோயில் உண்ணாழிகை மேற்குச் சுவர்.

குறிப்புரை : போசள அரசன் இராமநாதனுடைய பதின் மூன்றாவது ஆட்சியாண்டில் இராகுத்தராமனுக்கு கொற்றிலக்கையாக (சீவிதமாக) சேலநாட்டு நாட்டாமங்கலம் அளிக்கப்பட்டிருந்தது. தனக்கு முன்னாளில் அளிக்கப்பட்ட இச்சேலநாட்டு நாட்டாமங்கலத்து நான்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய் கடமைவற்கம் மற்றும் எப்பேர்பட்ட வரிமுறைகளையும் ஆறகளூர் உடையார்க்கு இவ்வூர் முதலடங்களும் தேவதான இறையிலியாக அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கும் இராகுத்தராயனின் ஓலைச் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

Summary : In the central shrine of the same temple. A record in the 13th year of the Hoysala king Rāmanāthadēva. Registers an order of Rāhuttarāya of the village Nattamaṇgalam in Sela-nāḍu was given to him as a Jivitha by the king was now granted with all its income as a tax free devadanam to the temple of Tirukkāmīsvaramuḍaya Nāyanār at Āṛagaḻūr, for maintaining, worship and repairs.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ராகுத்தராமன் ஓலை ராமநாததேவர்க்கு யாண்டு பதின்மூன்றாவது நாள் ஆறகளூர் உடையார் திருக்காமீஸ்வர-
2. முடைய நாயனார்க்கு இனக்கு முன்னாள் ஜீவிதமாக அடைத்த சேலநாட்டு நாட்டாமங்கலம் நான்கெல்லைக்குட்பட்ட நன்-
3. செய் புன்செயும் கடமை வற்கமும் மற்றும் எற்[ப்]பேர்பட்ட இறைமுறைமையும் இவ்வாட்டை தைம்மாத[ம்] முதல்
4. இவ்வூர் முதலடங்கலும் தேவதானம் இறையிலியாகத் தந்தோம் இப்படி சந்திராதித்தவற் செல்ல நான்கெல்லையும்
5. திருச்சூலத்தாபனம் பண்ணி பூசையும் திருப்பணியும் நடத்துவிப்பது இவை ராகுத்தராமன் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 20/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	:	சகம் 1435 பொ.ஆ.1509
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	409/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/255
எழுத்து	:	தமிழ்	ஊ.க.எண்	:	11
அரசு	:	விசயநகர்			
அரசன்	:	கிருட்டிணதேவராயர்			

இடம் : திருக்காமீசுரமுடையார்கோயில் உண்ணாழிகை வடக்குச்சுவர்.

குறிப்புரை : விசயநகர அரசன் கிருட்டிணதேவராயர் காலத்தில் (சகம் 1435, கி.பி.1509) ஆத்தூர் சீர்மை ஆட்சியாளனான எறமாஞ்சி அத்தி திம்மநாயக்கன் ஆறகளூர் திருக்காமீசுவரமுடைய நாயனார் தேவதானத்து முற்றூட்டான (சர்வமானியம்) ஆறகளூர் நத்தத்துக்கு வடக்கில் பனைத்தலை எனப் பெயருடைய நத்தம் பாழாகக் கிடந்தமையால் அந்நத்தத்தை துலுக்கணநாயக்கன் பேட்டை எனப் பெயர் இட்டு அதில் வந்தேறும் கைக்கோளக் குடிகளுக்கு தறிக்கு மூன்று பணமும் ஏருக்கு மூன்று பணமும் கொள்ளவும் நஞ்சையில் பயிர்செய்து அதனால் வரும் நெல்லின் பங்கைக் கோயில் பண்டாரத்தில் அளக்கவும் ஆணையிட்டதைக் குறிக்கிறது.

Summary : In the north wall the same temple. A record of the Vijayanagara king Krishnadva - Magaraya in Saga era 1435. Registers that Erramañji Akki Timmaya Nāyaka rehabtated the deserted village of Pa̱nattalai, a dēvadā̱na and sarvamanya of the temple, under the name Immadi Tulukkaṇa Nāya-ka̱n pēṭṭai and fixed certain taxes which was evidently collected by the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ உ௩ உஹாஉணு
2. வெஸ்வாரநு ஹாஷெக்குத்
3. தப்பும் இராயர் கூணூநு மூவர் இராயர்
4. கண்டந் மேதிநிமீசுரகண்டந் கட்-
5. டாரி சாளுவந் கிறுட்டிணதேவமஹா
6. இராயர் வுூயூவிராஜ௱ூ௸ பண்ணிஅருளாநின்ற சகா-
7. ப்தம் ௲சாாடுயிரு இதின் மேல் செல்லாநின்ற பாவ ஸம்
8. வற்சரத்து சிங்க நாயற்று வூவஷு௳பக்ஷத்-
9. து ஏகாதசியும் புதவாரமும் பெற்ற சோதி
10. நாள் ஸ்ரீஉநுஉஹந் நாயங்காசாரியந் பாஷைக்கு-

11. த்தப்பும் நாயங்கர் கண்டந் நரளோக கண்டந்
12. சம்புவராய சவுத்தாங்கவயிரி யாதவராய ஷூபநா சா-
13. ரியந் சாடிக்காறர் கண்டன் ஸ்ரீஊது எஊஞ்சி அக்கி
14. த்திம்மய நாயக்கர் மகதை ஊண்டலத்து ஆற்றூர்கூற்றத்து
15. ஆறகளூர் நயினார் திருக்காமீசுரமுடைய தம்பிரானார் திருநாமத்-
16. துக்காணி ஆந தேவதாநம் சறுவமாநியம் ஆறகளூர் நத்தத்தின் வடக்கில் நத்த-
17. ம் பனத்தலை பாழாகையில் இன்த நத்தம் இம்மடி துலுக்கண நாயக்கந் பேட்டை
18. என்று கட்டி இதுக்கு எல்லை கிழக்கு ஆற்றுக்கு மேற்கு தெற்கு மடைக்கிண -
19. ற்றுக்கு தெற்கில் கரைக்கு வடக்கு மேற்கு துர்காதேவி கரைக்கு கிழக்கு ஆற்று-
20. க்கு தெற்கு இந்தநாந்கெல்லை(க்)கு உட்ப[ட்]ட இந்த நத்தத்தில் வந்தேறும் கை
21. ய்க்கோளர்க்கும் இ யெச்சோறு வரிசோறு ஆள்அமஞ்சி நாட்டுக்குள் பிற
22. க்கும் பழவரி புதுவரி கூடுவற்கம் அரைவரிசி இனிமேல் பிறக்கும் வரி உள்
23. பட மனையாங் கட்டுகுத்தகையாக தறிக்கு மூன்று பணமும் யேருக்கு மூன்று
24. பணமும் கொள்ளக் கடவோம் ஆகவும் இந்த நிலத்திலே நஞ்சை பயிற்செய். . . . வைப் படியாலே நூறுகுளனாற் . . கலம்நெல்லு . . .
25. மும்காருக்கு யிதில் ஒன்றுமுக்காலும் கோயில்பண்டாரத்துக்கு யி. . . தத்திலே இருக்ககடவேம் ஆகவும் இந்த துலுக்கணன்பேட்டை குடியேறி-
26. னாற்கு ஒருதறிக்கு மானியமும் துலுக்கணபேட்டைக்கு கிழக்கு தோட்டம் சறுவமானியம் ஆக ஒருமனையும் சந்திறாதித்யவரையும் மானியம் ஆக நடத்தி வரக் கடவர்கள்
27. ஆகவும் இந்த துலுக்கணன்பேட்டையிலே வந்தேறு கைக்கோளகுடிக்கு காணிஆக்ஷி ஆக இருத்தகடவர் (ஆகவும்) (இப்படி யி)வர்க்கு கல்லிலும் செம்பிலும்வெட்டிக்கொண்டுசந்திறாதித்யவரையும்கோயில்பண்டாரத்துக்கு இறுத்து சுகத்திலே இருக்ககடவார் ஆகவும் இதுக்கு அகுதம் பண்ணி னவர்கள் கெங்கை (க)ரையிலே கொன்ற பிறுமஅத்தி பண்ணின பாவத்திலே போவ[ர்]கள் உ

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 21/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: சகம்1427.பொ.ஆ. 1505
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 420/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/266
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 12.1&12.2
அரசு	: விசயநகர்		
அரசன்	: நரசாநாயக்கர்		

இடம் : திருக்காமீசுரமுடையார்கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டபத் தெற்குச்சுவர்.

குறிப்புரை : ஆற்றூர் காணியுடைய அல்லாளநாத இளையநாயக்கரும், ஆற்றூர் நாட்டவரும் வெண்பார் நாட்டில் வேறு பிரிந்த முலைப்பார் நாட்டவரும் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயிலில் கூட்டம் குறைவறக் கூடியிருந்து எறமாஞ்சி துலுக்கண நாயக்கருக்கு எல்லாப் பேறுகளும் (பாக்கியம்) உண்டாக வேணுமென்று திருக்காமீசுரமுடைய நாயனார் கோயிலுக்குத் திருநுந்தாவிளக்குக்கும் சந்திவிளக்குக்கும் எண்ணை அளக்க உடலாக (வைப்புச்சொத்து) ஆற்றூர் நாட்டு ஊர்வழியில் ஏருக்கு ஒரு கோட்டை அளக்கக் கட்டளை இட்ட செய்தியைக் குறிக்கிறது.

Summary : In the south wall base of the maṇḍpa in front of the central shrine. A record of the Sāḷuva king Tamaraya Immaḍi *Narasa* Nāyaka in Saga era 1427. Registers that Allaḷanātha Iḷaiya-Nayka and the inhabitants of Aṟṟūr nāḍu Mulaippāru nāḍu having met together and arranged for supplying oil to burn perpetual lamps and twilights lamps in the temple for the health of Eramañji Tulukkaṇa-Nāyaka.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ௨ஙு ௨ஹாஉணூமெஶ்வுரஙு ஹரிராய விஹாடிஙு பாஷைக்குத் தப்புவராயர் கண்டந் மூவராயர் கண்டந்
2. கண்டனாடு (கொண்டுகொண்டநாடு) கொடாதான் வூவ்வு உசஷிண பஶ்சிம உத்தர சதுசமுத்திறாதிபதி ஶஜ வேட்டை கண்ட அருளியஸ்ரீ
3. வீரபிறதாப தேவராயமகாராயர் மேதிநிமீசுர கண்டன் கட்டாரி சாளுவ தமராய இம்மடி நரஸனாயக்கர் பிறுதி-
4. வி இராச்சியம் பண்ணி அருளா நின்ற சகாவூம் சூசாஉ௰எ இதன்மேல் செல்லா நின்ற குறோதன ஸம்வற்ஸ-ர
5. த்து மகர நாயிற்று வூவ்வு ஶசஷத்து தூதிகையும் ஆதித்தவாரமும் பெற்ற அவிட்டத்து நாள் மலாடாகிய ஜந-
6. நாதவளநாட்டு மகதைமண்டலத்து ஆற்றூர் கூற்றத்து ஆறகழ்ளூர் நயினார் திருக்காமீசுரமுடைய நயினார்த் திருக்கோயிலுக்கு திருநுந்தாவிளக்கு சந்திவிளக்-

7. குக்கும் நரளோகர்கண்டந் வயங்கி னாராயணன் மறைபுக்கார் காவலன் சாடிக்காறர் கண்டன் ஸ்ரீமது எறமாஞ்சி துலுக்கணனாயக்கர் திருமேனிக்கு ஸகலபாயிக்கியமு[ம்]

8. உண்டாக வேணும் என்று துட்டர் கண்டன் துட்டர் நெட்டூரன் ஆற்றூர் காணிஉடை முளைவேட்டுவரி அல்லாளநாத இளையாநாயக்கரும் ஆற்றூர் நாட்டவரும் வெண்பார் நாட்டில் வேறுபிறிந்த முலைப்பாரு நாட்டவரும்

9. ஆறகளூர் திருகாமீசுரமுடைய நயினார் சன்நதியிலே குறைவற கூடி இருந்து மகர சங்கிறாந்தி புண்ணிய காலத்திலே எங்கள் நாட்டில் ஊர்வழியிலே ஏற்கு நாழி கோட்டை ஆக திருவிளக்கு எண்ணைக்கு கட்டளை பண்ணி குடுத்தோம்

10. இந்ததன்மம் சன்திறாதிகூதவரையும் நடத்தக் கடவோம் ஆகவும் இன்த தந்மத்துக்கு யாதொருத்தர் அகுதம் பண்ணினாவாள் ஙங்கைகரைஇலே காராம் பசுவை கொன்றப் பாவத்திலே போக கடவ[ர்கள்]

11. ஆகவும் இவை நாட்டவர் பணியால் நாட்டுக்கணக்கு ஆற்றூர்நாட்டு வேளாந் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 22/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 13
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 424/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/270
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 13
அரசு	: ---		
அரசன்	: கோனேரின்மேல் கொண்டான்		

இடம் : திருக்காமீசுரமுடையார்கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டபத் தெற்குச்சுவர் குமுதம்.

குறிப்புரை : திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மேல்கொண்டானின்பதின்மூன்றாவது ஆட்சியாண்டில் தன்னுடைய பேரால் ஆறகளூர் திருக்காமீசுவரமுடையார் கோயிலில் கோதண்டராமன்சந்தி அமைக்கவும், தன்னுடைய ஆட்டைப் பிறந்த நாளிலே திருநாள் எழுந்தருளச் செய்வதற்கும் மற்றும் திருநாள் திருப்பணிக்கும் உடலாக (மூலதனமாக) மகதை மண்டலத்து அலம்பளம் என்ற ஊரின் நான்கெல்லைக் குட்பட்ட நஞ்சை புஞ்சையில் இவ்வூர் நாயன்மார்களுக்கும் புறவூர் நாயன்மார்களுக்கும் தேவதானம், திருவிடையாட்டம் , பட்டர்கள் இறையிலி, பள்ளிச்சந்தம் நீங்கலாக உள்ள பொன்வரி உள்ளிட்ட அனைத்தாயங்களையும் முதலடங்கல் இறையிலியாக அளித்ததைக் குறிக்கிறது.

Summary : In the south wall kumudam of the same temple. A record in the 13th year of Kōnēriṉmaikoṇdān. Registers the grant of the village Alambalam in Magadtaimaṇḍalam with all its income for institute a service Kōthandarāman sandi in the temple of Kāmīśvaramuḍaiyār. And he also provided land for the festival and offerings to the temples of this and suburb villages for celebrating a festival on his birthday every year and for repairs. The chart was attested by Kaliṅgarāyaṉ and Iḷayāṇkuḍiyuḍaiyāṉ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநசக்கரவத்தி கோனேரின்மேல் கொண்டான் ஆறகளூர் உடையார் திருகாமீசுரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இந்நாயனார்க்கு நம்முடைய பேரால் கோதண்டராமன் சந்திக்கும் திருநாளுக்கும் திருப்பணிக்கும் உடலாக மகதைமண்டலத்தில் அலம்பளம் நான்கெல்லைக் குள்ப்பட்ட நஞ்செய்
2. புஞ்சையிலும் இவ்வூர் நாயன்மார்க்கும் புறவூர் நாயன்மார்க்கும் தேவதானம் திருவிடையாட்டம் பட்டர்கள் இறைஇலி பள்ளிச்சந்தம் பூதானம் யிறையிலி நீங்கலாக பதிந்மூன்றாவது வைகாசி மாத முதல் பொன்வரி யுள்ளிட்ட பல கடமை அனைத்தாயமுட்பட முதலடங்கல் இறையிலியாக வஞூா-

3. தித்தவரையும் செல்வதாக தந்தோம் இப்படிக்கு இவ்வூர் நான்கெல்லையிலும் திருச்சூலஸ்தாபனமும் பண்ணிவித்துக் கல்லிலும் செம்பிலும் வெட்டி நம்முடைய பேரால் சந்தியும் ஆட்டைப் பிறந்தநாளிலே திருநாளும் எழுந்த(ரு) ளப் பண்ணிவித்துத் திருப்பணியும் செய்வித்துப் போ-

4. துக இவை இளான்குடி உடையான் எழுத்து இவை காலிங்கராயன் எழுத்து திருவெழுத்து ௲௫௱௯ யாண்டு பதின்மூன்றாவது நாள் ௩௰௯

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 23/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 16 –ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 422/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/268
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 14.1&14.2
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டபத் தெற்குச்சுவர்.

குறிப்புரை : தியாகண நாயக்கர் கொடுத்த அடையோலைப்படி பல இரண்டகங்களால் (துரோகம்) மகதைமண்டல நாடு குலைந்து போய்விட்டது என நாடு (நாட்டவர்) எடுத்துரைக்க அவ்வோலை ஒழித்து அறமற்ற செயலும் (அநியாயம்) அடந்தேற்றம் பண்ணாமல் நேர்மையான முறையிலே நடத்தப்படும் எனக் கல்வெட்டிக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

Summary : South wall of the maṇḍapa in front central shrine of the same temple. Registers a pledge given by Tiyakaṇa-nāyakkar to the nāṭṭavar of Magadaimaṇḍalam to the effect that in view of the nāḍu that the husbandmen *(kuḍi)* had become disorganized due to several oppressions *(durōgam)* on the strength of this order *(aḍaiyōlai)* it will be ensured that from that date, just taxes and levies *(mariyāti)* will be done and no harm will be done to the kudis. The pledge was sworn on Suvāmyīśvara nāyakar and Tambi-Īśvarayaṉ.

கல்வெட்டு :

1. பிலவ வருஷம் மாசிமாதம் ௰ ஸ்ரீஉது தியாகண நாயக்கர் மகதைமண்டலம் நாட்டவற்கு கல்வெட்டி
2. குடுத்தபடி மகதைமண்டலம் பல உபத்துரோகத்தாலும் குடிக்குலைந்து என்று நாடாக சொன்னபடிஆலே
3. இந்த மண்டலத்து நாளதுமுதலுக்கு நாம்குடுத்த அடைஓலைபடி ஒழிந்து அடந்தேற்றம் கொள்ளக்கடவத
4. அல்ல ஒருகுடிச்சேதம் பண்ணக்கடவோம் அல்ல அன்னியாயம் அடந்தேற்றம் பண்ணாமல் நியாயம்ஆ-
5. ன மரிஆதி கொள்ளுற இதுக்கு சுவாமி யீசுர நாயக்கர் பாததாணையே தம்பி யீசுரயன் ஆணையே தப்பாது
6. இந்த நின்றையப்படிக்கு தப்பினவன் கெங்கை கரையில் காராம் பசுவை கொன்ற பாவத்திலே போக கடவ-
7. னாகவும் உ

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 24/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 15
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 13 -ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 419/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/265
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 15
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சுந்தரபாண்டியன்		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டபத் தெற்குச்சுவர் செகதிப்படை.

குறிப்புரை : பாண்டிய அரசன் சுந்தர பாண்டியனுடைய பதினைந்தாவது ஆட்சியாண்டில் சேதிராயர் ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடையார் கோயிலில் இரண்டு பிராமணர்கள் வேதம் ஓத (அத்யயனம்) ஏற்பாடு செய்திருந்தார். அவர்களுக்கு ஆறகளூர் பெரிய ஏரியில் சேதியராயர் காடுவெட்டி காணியாகச் செய்த நன்செய் நிலத்தில் ஆயிரம் குழியால் வரும் பொன்வரி உள்ளிட்ட அனைத்தாயங்களையும் இறையிலியாக விட்டார். வெம்பார் ஆற்றுக்கு வடக்கிலும் பெண்ணை ஆற்றுக்கு தெற்கிலும் அமைந்துள்ள பற்றுகளின் நாட்டவர் ஆறகளூர் நாயன்மார் தேவதானம், திருவிடையாட்டத்துக்கு நாட்டு விநியோகம் காணிக்கை சம்மாதம் முதலானவற்றைத் தவிர்த்து வந்த முதலால் தனக்கு (அரசர்க்கு) நன்றாக திருநாள் எழுந்தருள வேண்டும் என்றும், காணிக்கைப் பணம் வகைப்படுத்தி பிரிக்கப்பட்டது (தண்டப்பட்டது) எனக் கேள்விப்பட்டதாகவும் அவ்வாறு செய்யக்கூடாதென்றும், ஏற்கனவே தரவு பிரித்திருந்தால் திரும்பக் கொடுத்து விடவேண்டும் என்றும் ஆணையிட்டதைக் குறிக்கிறது.

Summary : In the same place. A record in the 15th regnal year of the Pāṇḍya king Sundarapāṇḍiyadēva. Registers a gift of 1000 kuḻi of land made rent free in the 13th year of the king, for the maintenance of two Brāhmaṇās who recited the vēdās in the temple by the chief Sēdirāyan̲. Also a royal order to the nāṭṭār of the pāṟṟu in between the rivers Vēmbāru and Pennaru intimating that the *devadanam* and *tiruviḍaiyāṭṭam* lands of the Gods of Āṟagaḻūr were exempted from ayam. The levies should be collected and utilized for celebrating a festival for the health of the King.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீகோச்சடபன்மரான திரிபுவனச் சக்கர~வத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு ௰ருவது ஆறகளூர் உடையார் திருக்காமீசுர முடையநாயனார் கோயில் தானத்தார்க்கு இன்னாயனார்க்கு அஜி அயனம் பண்ண சேதிராயர் கடைக்கட்டின ஸ்ரூஹ்ணர் பேர் இருவர்க்கு இவ்வூர் குலசேகரன் பெரிஏரியில் இவர் காடுவெட்டிக் காணியான நன்செய் நிலத்திலே பதிமூன்றாவது புரட்டாதி மாதம் முதல் ஆயிரம் குழி பொ-

2. ன்வரி உள்ளிட்ட காசாயவற்கமும் அனைத்தாயங்களும் உட்பட இறையிலியாகத் தன்தோம் இவ் அஷ்ிஅயனத்துக்கு இன்னிலம் சன்திராதித்தவரை செல்வதாக இப்படிக்கு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்வது இவை திருஎழுத்து கூ௵ ௨ இவை காடுவெட்டி எழுத்து ௨ ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் வெம்பார[ா]ற்றுக்கு வடக்கு பெண்ணை ஆற்றுக்கு தெற்கு உள்ப்பட்ட பற்றில் நாட்டாற்கு ஆறகள்-

3. ளூர் நாயன்மார் தேவதானம் திருவிடையாட்டத்துக்கு நாட்டு வினிஓகம் காணிக்கை சம்மாதம் உள்பட்ட அனைத்தாயங்களும் தவித்து இம்முதல் இட்டு நமக்கு நன்றாகத் திருநாள் எழுந்தருளிப் போதச்செய்(வ)தே காணிக்கைப் பணத்துக்கு வகுப்பிட்டுத் தரவுபிரித்தார்கள்ளாக கேட்டோம் இப்படி செய்யக்கடவர்கள்ளல்ல இவ்வோலை கண்டபொழுதே இப்பற்றில் பிறித்த தரவுகளும் தவிரக் கழித்துக்கொண்டதுண்டாகிலும் திரி

4. யக் குடுப்பித்து மேலும் இப்படி இருக்குமிவை பரிகரிக்க இவை திருஎழுத்து கூ௵ ௨ இவை வாணாதராயர் எழுத்து ௨

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 25/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 29
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1206
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 418/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/264
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 16
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை முன்புள்ள முன்மண்டப வடசுவர்.

குறிப்புரை : சோழ அரசன் மூன்றாம் குலோத்துங்கனின் இருபத்தொன்பதாவது ஆட்சியாண்டில் ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடையார் கோயிலில் ஆறகளூர் செல்வனான சிறுத்தொண்டன் என்பான் தேவாரமூவரையும் (எம்பெருமக்கள்) எழுந்தருளச் செய்து அவர்களுக்குப் பூசை செய்ய நாள்தோறும் ஆற்றில் இருந்து திருமஞ்சன நீர் கொண்டுவரவும் அந்தி சந்தியில் இரண்டு விளக்குகள் எரிக்கவும் சாத்தியருள திருப்பரிசட்டமும் திருப்பள்ளித் தாமமும் அமுதுபடியாக நானாழித் திருவமுதரிசி, கறியமுது முதலானவற்றுக்காக ஐயாயிரம் அன்றாடு நற்காசுகளை கோயில் பண்டாரத்திலே ஒடுக்கியுள்ளான் (இட்டு வைத்தான்). இவனே இந்நாயனாற்கு 40 பலம் எடையுள்ள மூன்று பரிகலமும் 15 பலம் எடையுள்ள திருவட்டணைக்காலும் 70 பலம் எடையுள்ள தாரா குத்தி விளக்கும் அளித்த செய்தியும் கூறப்பட்டுள்ளது.

Summary : North wall of the maṇḍapa in front of the central shrine of the same temple. Record of the chōḻa King Tribuvanachakkravattikaḷ Kulotunga chōḻadēva in his 29th regnal year. Records the gift of 5000 kāśu for maintaining the sacred bath, twilight lamps, garlands, cloths and offerings to the three saints (emperumakkal i.e., Appar, Sambandar and Sundarar) set up in the temple of Tirukkāmīśvaramuḍaiya-Nāyanār at Āṛagaḻūr

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு இருபத்தொன்பதா-
2. வது மிலாடாகிய சனநாத வளநாட்டு ஆற்றூற் கூற்றத் தாறகளூரில் உடையார் திருக்காமீஸ்வரமு-
3. டைய நாயனார் கோயிலில் எம்பெருமக்கள் மூவரையும் எழுந்தருளுவித்[து] மேற்படியூரில் இருக்கு-

4. ஞ் செல்வனான சிறுத்தொண்டனேன் எம்பெருமக்களுக்குச் சந்திராதித்தவர் பூசைசெய்யும்
5. படி நாள் ஒன்றுக்கு ஆற்றில் திருமஞ்சணந் தூணிப்பதக்கும் அந்திச்சந்தி விளக்கு இர-
6. ண்டுஞ் சாத்தியருள பரிசட்டமுந் திருப்பள்ளித் தாமமுந் திருஅமுதுக்கு அரிசி நாநாழியுங்-
7. கறியமுது நாற்பலமு(ம்) இதுக்குத் தக்க உப்பு மிளகு நெய்யமுதுஞ் செல்வதாக இன்னாய-
8. நார் ஸ்ரீபண்டாத்து மாஹேஶ்வரக் கங்காணி செய்வார்களுந் தேவர்கன்மி கோ-
9. யிற் கணக்கனும் முன்னிலையாக இவ்வாண்டைக் கன்னி நாயற்றுப் ஹூவ்பூ பக்ஷ-
10. த்து த்ரிதியையும் புதன்கிழமையும் பெற்ற அத்தத்தி நாள் ஒடுக்கின அன்றாடு நற்காசு
11. ருதூ இக்காசு ஐய்யாயிரமும் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்கி இப்படி சந்திராதித்தவரை
12. பூசை செலுத்தக் கடவதானமைக்கு இது பன்மாஹேஶ்வரர் இரக்ஷை இது அழிவுசெ-
13. ய்வான் கெங்கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவங் கொள்வான் ஶூவ
14. ஃஸ்ரூ வ இவன் எம்பெருமக்களுக்கு இட்ட பரிகல மூன்றிநால் எடை சய பலம் திருவட்டணைகால் ஒன்றினால் எடை
15. எய [ப]லம்.
16. தரா. . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 26/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	15
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ.1193
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	416/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/262
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	17
அரசு	:	சோழர்			
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			
இடம்	:	திருக்காமீசுரமுடையார் கோயில்முன்மண்டபம் தென்சுவர்.			

குறிப்புரை : மலையனூருடையான் செம்பை என்பான் தன்காணியான இலத்திபாடி நான்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய் நிலங்களை திருக்காமீசுவரமுடையார்க்கு விற்றான். அதனைப் பெற்ற இக்கோயில் தானத்தார் அவற்றின் வருவாயை இக்கோயில் பூசைக்கும் திருநாளுக்கும் திருப்பணிக்கும் உடலாகக் (முதலீடாக) கொள்ளும்படி ஆணையிட்டதைக் குறிக்கிறது.

Summary : In the south wall of the front maṇḍapa of the same temple. A record in the 15th Regnal year of the chōḻa king Tribuvanachakkravattikaḷ Kulōttuṅga coladevar. Records that the king ordered the Danāṭṭār of the temple of Tirukkāmīśvaramuḍaiya nāyanār at Āṛagaḻūr in Āṟṟūrkkūṟṟam. The Dānāṭṭār should utilize all the incomes from the land which is get from Malaiyāṉuruḍaiyān Sembaiyaṉ for the service, festival and repairs of the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலாத்துங்-
2. க சோழதேவர்க்கு யாண்டு பதினஞ்சாவது ஆற்றூர் கூ-
3. ற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுரமுடைய நா-
4. யனார் கோயில் தானத்தார்க்கு இன்னாயனார்க்கு தாங்கள்
5. மலையனுடையச் செம்பை பக்கல் கொண்டுடைய இல-
6. த்திபாடி நான்கெல்லைக் குட்பட்ட நன்செய் புன்செ-
7. ய் ஏந்தல் பற்று உட்பட பொன்வரி உள்ளிட்ட அனைத்தாய-
8. ங்களும் நாட்டு வினியோகம் உட்பட இன்னாயனார்க்கு இறையிலியா-
9. கப் பூசைக்கும் திருனாளுக்கும் திருப்பணிக்கும் உடலா-
10. க தந்தோம் இவை வாணகோவரையன் எழுத்து
11. இவை வில்லவராயன் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 27/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: சகம்1426/பொ.ஆ.1504
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 412/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/258
எழுத்து	: தமிழ்	ஊ.க.எண்	: 18
அரசு	: விஜயநகரர்		
அரசன்	: தன்ம இராயர்		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை மேற்குச்சுவர்.

குறிப்புரை : மலாடாகிய சனனாதவளநாட்டு தென்கரை நரையூர்க் கூற்றத்து பாக்கம்பாடி நான்கெல்லையும் முன்னாளில் (பூறுவம்) தேவதான முற்றூட்டாக நடந்து வந்தது. பின்பு எறமாஞ்சி துலுக்கணநாயக்கர் ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடையார்க்கு பாக்கம்பாடி நான்கெல்லையும் நன்செய் புன்செய் மற்றுமுள்ள அனைத்து ஆயங்களையும் மகாபூசையும் திருப்பணியும் நடத்துவதற்காக விட்டதைக் குறிக்கிறது.

Summary : In the west wall of the central shrine in the same temple. A record of the Sāḷuva King a Thanmaraya son of Narasiñga Bujabaladēva maharayar in Saga era 1426. It is stated that Pakkampadi in Naraiyūr-kūṟṟam on the southern bank in Magadaimaṇḍalam in Malādu alias Jananāthavaḷanāḍu was formerly a *dēvadāṉa* with all exemptions and full rights (sārvamānyam) but subsequently *rajakaram*, and *kāṇikkai* began to be levied on the village. Now Eṛamañchi-nāyakarTulukkana-nāyakar granted that village along with the wet and dry land in it along with the taxes *kānikkai, viniyōgam, nallerrtu, nalpasu, nalkiḍa, nallerumai, kānikkai virimuttu, āyam talaiyārikkam, maravaḍai, kuḷavaḍai* and such levies that were payable by the villagers conduct of the great worship (mahapujai) and for meeting the maintenance of the temple Tirukkāmīśvaramuḏaiya nāyanār of Āṛagaḻūr in Āṛṛurkkūṟṟam.

கல்வெட்டு :

1. ஸுஸ்திஸ்ரீ ஸ்வஸ்திஸ்ரீ ஊ உஹாஉணுஜீஸ்வரன் அரியஇராய விபாடன் பாஷைக்கு தப்புவ இராயர் கண்டன்
2. கூணு நாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பூறுவ தெக்ஷண உத்தர பஸிஉ சதசமுத்திராபதி யீழம் திறைகொண்டு கெச
3. வேட்டை கண்டருளிய இராசாதி இராசந் இராச பரமேசுரன் மேதினி மீசுர கட்டாரி சாளுவ நரசிங்க புசபெலதேவ மகா[யி]ர[ா]யர் குமாரர்

4. தந்ம இராயர் ப்ருதிவிராச்சியம் பண்ணி அருளாநின்ற ஸகாத௲ ௲௬௱௨௰௬ இதன்மேல் செல்லாநின்ற இரத்தஷத ஸங்வத்சரத்து சிங்க

5. நாயற்று பூறுவ பக்ஷத்து த்ரயோதேசியும் சுக்கிறவாரமும் பெற்ற சோதிநாள் மலாடாகிய ஜநநாதவளநாட்டு மகதைமண்டலத்தில்

6. தென்கரை நரையூர் கூற்றத்து பாக்கம்பாடி பூறுவம் நான்கெல்லையும் தேவதானம் ஆக ஸறுவமானியம் ஆயி நடக்கை(யி)ல்

7. பிந்பு யிராசகரம் காணிக்கை கொள்ளுகை(யி)ல் ஸ்ரீஉடு உகானாங்காசாரியன் பாஷைக்கு தப்புவ நாயக்கர் கண்டன் நரளோக கண்டநு

8. வஞ்சி நாராயணன் சாடிக்காற கண்டன் எறமாஞ்சி நாயக்கர் துலுக்கண நாயக்கர் ஆற்றூர் கூற்றத்து ஆறகழஞூர் உடை[யார்]

9. திருக்காமீசுரமுடைய ந[ா]யினார்க்கு பாக்கம்பாடி நான்கெல்லையும் உட்பட நன்சை புன்சை காணிக்கை நல்[லெரு]-

10. து நல்பசு நல்கிடா நல்எருமை கோணிக்கை விரிமுட்டு ஆயம் தலையாரிக்கம் நாட்டுவிநியோகம் மாவடை மரவடை குளவடை

11. ஆள்அமஞ்சி மற்றும் எப்பேர்பட்டதும் மகாபூசை திருப்பணிக்கு சந்திராதித்தவரையும் நடக்கும் படிக்கு கல்வெட்டி குடுத்தோம்

12. இந்த தன்மத்துக்கு யாதுயொருவர் அழிவு பண்ணிநவர் கெங்கை கரையில் கோவதை பிறுமவதை பண்ணிநவந்

13. பாவத்தில்லே போக கடவர் ஆகவும் ௨

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 28/2022**

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	15-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	413/1913.
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/259
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	19
அரசு	: மதுரை நாயக்கர்			
அரசன்	: ---			
இடம்	: திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை வடசுவர்.			

குறிப்புரை : மல்லிநாயக்கர் ஆறகளூர் திருக்காமீவரமுடைய நாயனார் கோயிலில் நடக்கவேண்டிய முப்பதுவட்டத்து பூசைக்காணி பற்றி இக்கோயில் தானத்தார்க்குச் செய்த ஆணை. இப்பூசைக்காணி பற்றிய ஒரு வழக்கு நடப்பில் இருந்துள்ளது. நம்பியார் திருஞானசம்பந்த பண்டிதர் என்பவர் முப்பது வட்டக் காணியாட்சி பூசை செய்துவந்தார். அதில் நம்பியார் அழகியார் என்பவர் தமக்குப் பதினைந்துநாள் பூசைக்காணி உரிமை உண்டு என்றும் அதற்குக் கோயிலில் பட்டோலை உண்டு என்றும் வாதீடு செய்தார். இது குறித்து நடந்த முந்தைய தீர்ப்புகள் நிறைவளிக்காமையால் மீண்டும் வழக்கு நடைமுறைக்கு வந்தது. கோயில் தானத்தாரும் நான்கு அகரத்து பெருமக்களும் (மகாசனங்கள்) கூடி ஆராய்ந்து அழகியார்க்கு இதில் எவ்வகைப் பங்கும் இல்லை என்றும் இப்பூசைக்காணி முப்பது வட்டமும் திருஞானசம்பந்த பண்டிதற்கே உரிமை உண்டு என்றும் தீர்ப்பளித்து முந்தைய தீர்ப்போலை கழிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

Summary : In the north wall of the same shrine. Records an order from Thirumalli-Nāyakar addressed to the *tāṉaṭṭār* of Āṟagaḻūr conveying his decision regarding the gift of worship all round the thirty days of the month (muppadu vaṭṭam) in the Tirukkāmīśvaramuḍaiya Nāyanār temple of Āṟagaḻūr . There was a dispute in this connection. One of the Nambiyar-Thiruñaṉasambanda-Pāṇḍitar was originally having the right of thirty days but Nambiyār Alagiyar claimped the right for 15 days. This claim was not probably sustained. One Pasupathi Pāṇḍidar was also sold the right for 7½ days by the temple. In this state of the dispute the worship seem to have suffered and the chief has orginally ordered the worship of the 15 days in the month to be got done by engaging person / persons on wages. Now when the chief had come to Āṟagaḻūr the summoned the nāṭṭavar and the mahājanās of the four agarams of Kulattūr, Alampaḷam, Sadaiyaṉpattu, and Maṭṭiyakkurchchi in hear both sides Tiruñaṉasambanda-Pāṇḍitar and Pasupati-Pāṇḍitar stated their case. Finally he decided that the kāni (right along with the perquisites pertaining) of worship for the all thirty days will belong to Tiruñaṉasambanda-Pāṇḍitar and the conveyance-deed given to Pasupati-Pāṇḍitar will become null and void.

கல்வெட்டு :

1. ரக்தாக்ஷி வருஷ௴ காத்திகை மாதம் உ௰௭ தியதி ஸ்ரீமது திருமல்லி நாயக்கர் ஆறகளூர் தானத்தார்க்கு வரக்காட்டின காரியம் ஆவது ஆறகளூர் உடையார் திருக்காமீஸ்வரமுடைய நாயினார் பூசை நாள்
2. முப்பது வட்டமும் நம்பியார் திருஞானசம்பந்த பண்டிதர் பூசித்துப் போந்த இதிலே முன்பே நம்பியார் அழகியார்க்கு பதின் அஞ்சுநாள் காணி உண்டு என்றும் காலற்றகாணி ஆட்சி அனுபவித்து போந்த இது திறப்பு ஆகவேணும் என்றும் இந்த அழகியார் காணி பதின் அஞ்சு நாளும் இறங்கல் இட்ட மரி ஆதிக்கு
3. கோயிலிலே பட்டோலை உண்டு என்றும் பசுபதிபண்டிதரைத் தாங்கள் அழைப்பித்து இதிலே ஏழரை நாள் அவர்க்கு சண்டேசுரப் பெருவிலை ஆகத் தாங்கள் சாதனம் பண்ணிக் குடுத்தபடி ஆலே பத்து எட்டுத் தலைமுறை ஆக நடந்து போந்த காணியை தாங்கள் வன்மையிலே எழரைநா-
4. ள் சாதனம் பண்ணுவித்துக் குடுத்தார்கள் என்றும் ஷூறுவி ஆன திருஞானசம்பந்த பண்டிதர் புறப்பற்றே போய் இருந்தபடி ஆலே நியாயம் ஆன மரியாதிக்கு நின்றயம் பண்ணுவித்து குடுக்கிறோம் என்றும் நாட்டவர் ஓலைவரக் காட்டி அழைப்பித்தபடி ஆலே வந்தேன் என்றும் இத்திருஞா-
5. னசம்பந்த பண்டிதர் முன்பே சொன்னபடிஆலே தங்களையும் அழைப்பித்து நாட்டவர் முன்பாக திருஞானசம்பந்தபண்டிதற்கும் பசுபதிபண்டிதற்கும் உண்டு ஆன வழக்கு கேட்டு அவர்கள் நின்றய௴ பண்ணின மரிஆதி கேட்க என்றும் அவளவும் தாங்கள் தீற்ப்பு என்று சொன்ன
6. பதின்அஞ்சு நாளும் கூலி ஆள் இட்டு ஷூசிப்பிக்க என்று முன்பே தங்களுக்கு நாம் ஓலை குடுத்தபடி ஆலே நாமும் ஆறகழ்ஊற்கு வந்தபொழுது இந்த திருஞானசம்பந்தபண்டிதர் வழக்கு கேட்டு நியாயம் ஆன மரியாதிக்கு நின்றய௴ பண்ண வேணும் என்றும் சொ-
7. ல்லுகைஆலே நாமும் நாட்டவரும் ஆக ௨ஹாஜநங்கள் முன்புஆக இரண்டு திறத்தாரையும் வழக்கு கேட்டுக்கொள்ளச் சொல்லி மனித்தரையும் கூட்டி போகவிட்ட அளவில் குளத்தூர் அலம்பளம் சடையன்பட்டு மட்டியக்குறிச்சி இந்த நாலு அ
8. கரத்தில் ௨ஹாஜநங்களும் காமநாதன் சன்னதியிலே இருந்து இரண்டு திறத்தந் சொல்லுகிற வழக்கும் கேட்டு ஷூறுவபாமாக அனுபவித்து போந்த நம்பியார் திருஞானச௴பந்த பண்டிதர் இருக்க ஷூறத்தி௵ பசுபதிபண்டிதர் கொ-
9. ள்ள பணி அல்ல என்றும் தீற்ப்பு உண்டு ஆநாலும் ஷூறுவம்ஆன திருஞானசம்பந்தபண்டிதரே கொள்ள வூாவு௴ என்றும் நாலு அகரத்தில் ௨ஹாஜநங்களும் நியமித்தபடிஆலே நாள் முப்பதுவட்டமும் திருஞானசம்பந்த

பண்டிதர் காணிஆக வூறுவம் அற்ற மரிஆதி அனுபவித்து

10. போதும்படி கற்பித்து நம்முடைய ஓலையும் திருஞானசம்பந்தபண்டிதற்கு குடுத்த அளவுக்கு தாங்கள் பசுபதிபண்டிதற்கு பண்ணிக்குடுத்த சாதனமும் கழித்து போகட்டு நாள் முப்பது வட்டமும் திருஞானசம்பந்தபண்டிதர் பூசிக்கும் படியும் கற்பித்து இம்மரிஆதிக்கு

11. கோயிலிலே கல்லும் வெட்டிவித்து நடத்திப் போதவும் ரையிஸ உ

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண்: 29/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	சகம்1430,பொ.ஆ. 1508
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	408/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/254
எழுத்து	: தமிழ் - கிரந்தம்	ஊ.க. எண்	:	20
அரசு	: ---			
அரசன்	: வசந்தராயர்			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை வடசுவர்.

குறிப்புரை : சகம் 1430 பொ.ஆ. 1508-ஆம் ஆண்டில் ஆற்றூர் பகுதியில் ஆட்சி செய்துவந்த உள்ளூர் ஆட்சியாளன் எறமாஞ்சி துலக்கண நாயக்கன் ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடையாருக்கு பாண்டியர் கால முதலாக திருத்தேர் இல்லாமையால் திருத்தேர் சமைத்து வளர்பிறையில் திருக்கொடி ஏற்றி ஆயில்யத்தில் திருத்தேர் ஓட்டுவித்தான் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது. இவன் உள்ளூர் ஆட்சியாளனாக இருப்பினும் இவனுக்கு அளவுகடந்த புகழுறை கூறப்பட்டுள்ளது வெற்று ஆரவாரமாகத் தோன்றுகிறது.

Summary : In the north wall of the central shrine of the same temple. A record of the Vijayanagara king Kumāra Vīra Narasimha Bujabala Vasantha rayar in Saga 1430. His local chief was Tulukkaṇa-Nayakkar, son of Eramanji Timmaya-nāyakar who had a string of titles, of which Vēṅngi-nārāyaṇaṉ, Maraipukkārkāvalan (protector of Brāhmaṇās) Chēra - Chōḻa Paniya - Vaḻḻalaraya-bayaṅgaraṉ, Yathavāraya-sthapaṉāчharia, Sambuvāraya-chavut-tāṅkavayiri are significant. He found that there was no chariot (tiru-ttēr) and no chariot-festival for God Tirukkāmīsvaramudaiya tambirānār of Āṛagaḻūr in Āṛṛūr-kūṛṛam in Magadaimaṇḍalam, in Maladu alias Janana-tha-vaḷanadu and consequently had chariot festival to be celebrated in the month of Masi. The continuation of the inscripition giving further details have been lost.

கல்வெட்டு :

1.ஸ்வஸ்திஸ்ரீ ஊநு ஊஹாஊணூஜெஙூ-

2. ஶநு ஹரிராய விஹாடன் ஹா

3. ஷைக்குத் தப்புவராயர் கண்டந் ஊவெ-

4. ராயர் கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு

5. கொடாதான் வூவு உக்ஷண வஜு ிஉ உத்தர
6. வகூஷஊ உாஜிவதி ஈழந் திரைகொண்டு மஜவே-
7. ட்டை கண்டருளிய ராஜாயிராஜந்இராஜ வரஜெவூரநூ-
8. ஸ்ரீவீரவுதாவ தேவராயர் உஹாராயர் ஜெதிநிஶீஹர கண்டன்
9. கட்டாரி சாளுவன் நரசிங்கராயர்குமார தம்மராயர் நரஸநா-
10. யக்கஉடையார் ஸ்ரீஉக குமார வீரநரஸிஂஹ வூஜஸவ வஸ
11. ந ராயர் வுயிவிராஜூ பண்ணி அருளாநின்ற வகாஸூ
12. தூசாநம இதன்மேல் செல்லாநின்ற விஷவ ஸஂவத்ஸர-
13. த்து கூஷ நாயற்று வூவு வக்ஷத்து ஷவூயியும் ஶூகூ வராமு-
14. ம் சுஜுதி ஷூஹயோமமும் பெற்றநாள் மலாடாகிய ஜநநா-
15. த வளநாட்டு மகதமண்டலத்து ஆற்றூற் கூற்றத்து ஆற-
16. களூர் நயினார் திருக்காமீசுரமுடைய தம்பிரானாற்கு ஸ்ரீஉநூஉ-
17. ஹா நாயங்காசாரியந் ஸாஷைக்குத் தப்புவ நயங்கர் கண்-
18. டன் நரளோ(க) கண்டன் வங்கினாராயணன் மறைபுக்கார்
19. காவலன் சேர சோள பாண்டிய வல்லாளராய பயங்கரந்
20. யாதவராய ஷாபனாசாரியன் சம்புவராய சவுத்தாங்கவயிரி
21. சாடிக்காறர் கண்டன் ஸ்ரீஉகூ எறமாஞ்சி திம்மயநாயக்கர்
22. ஸ்ரீஉகூகுமா(ர)ர் துலுக்கண னாயக்கர் திருக்காமீசுரமுடைய த-
23. ம்பிரானாற்கு பாண்டியன் நாள் முதல் இன்னாள் வரைக்கு(ம்) தி-
24. ருத்தேர் இல்லாமல் இருக்கஇல் நரளோக கண்டன் தி-
25. ருத்தேரும் சமைத்து மாசி மாஸத்து வூவு வக்ஷத்து துஶூஶாஉஶி[1]
26. யிலே திருக்கொடி ஏற ஆயிலியத்திலே ஆறை
27. னாயகர் திருத்தேரிலே எழுந்தருள திருத்தேரும் ஓட்டவித்து . . .

1. (த்ரயோதசியாக) . . . . இருக்கவேண்டும்.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 30/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: சகம்1430,பொ.ஆ. 1508
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 411/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/257
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 21.&1 21.2
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை வடசுவர்க் குமுதப்படை.

குறிப்புரை : மகதை மண்டலத்து ஆறகளூர் நயினார் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயிலிலே பாண்டியன் நாள்முதல் இந்நாள்வரை திருத்தேர் இன்மையால் எறமாஞ்சி துலுக்கணநாயக்கர் திருத்தேர் சமைத்து மாசியில் திருநாளெடுத்து ஆயிலியத்தில் தேர் நடத்தி திருமஞ்சனம் ஆட்டுவித்தார். அக்கால் தாமக . . . நல்லுர் கைக்கோளன் பெருமாள் மகன் பறையன் பறை எடுத்தான். முதலியார் சன்னகமல நாயனாரும் தாருமும் மாகேசுவரரும் ஆறை நாயகர் மண்டபத்திலே கூட்டம் குறைவறக் கூடி நிறைவறநிறைந்து சண்டேசுவரதேவர் திருவாய் மலர்ந்தருளியபடி இந்தப் பறையனுக்கு உதிரப்பட்டியாக ஆறகளூர் நன்செய் நிலத்தில் 250 குழி நிலமும், ஓரிணை ஏருழும் புன்செய் நிலம் ஒரு மாவும், சந்நதித் தெரு வடசிறகில் ஒரு மனையும், ஒரு தோட்டமும், கோயிலில் நித்தமும்(நாள்தோறும்) இருநாழி அரிசிச்சோறும் வழங்கப்பட்டுள்ளது.

Summary : In the same place. A record in the Saga samvath 1430 that Eramañji Tulukkaṇa nāyakka, seeing that the temple Tirukkāmīśvarmuḍaiya nāyanār at Āṛagaḻūr was not provided with festivel processions since the time of the Pāṇḍiyar, constructed a car for it and fixed the days for the festivals. Also registers a grant of land by the temple authorities and a house to certain *kaikkoḷaṉ* called Parayaṉ of Tamaḍanallūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் சூசாஙம இதன்மேல் செல்லாநிந்ற விபவ சங்வற்சரத்து கும்ப நாயற்று ௨௰வ்வ ௨ வசஷத்து தெசமியும்
2. ஆதித்த வாரமும் ஆயிலியத்து நாள் மகதைமண்டலம் ஆறகழ் ஊர் நாயினார் திருக்காமீசுரமுடைய னாயனார் பாண்டியர் னாள் முதல் இந்நாள் வரைக்கும்
3. திருநாளும் நடவாதிருக்கையில் சுக..மி(சுவாமி) நரளோக கண்டந் வங்கிநாராயணந் மறைபுக்கார் காவலந் வல்லாள இராய ஸயங்கரந் சாடிக்காறர் கண்ட-
4. ந் ஸ்ரீமது எறமாஞ்சி துலுக்கணநாயக்கர் நயினார் திருக்காமீசுரமுடைய

நாயனாற்க்கு தேரும் சமைத்து திருநாளும் மாசித் திருநாளாக ஆயிலியத்திலே தேரும்

5. மகத்திலே திருமஞ்சநமும் ஆக கட்டளை பண்ணி திருநாள் நடக்கையிலே தாமக . . நல்லூரில் கைக்கோளந் பெருமாள் மகன் பறையந் பறைஎடுத்து முதலியார் சன்னதியில்

6. னாயனார் ஆதிச்சண்டேசுர நாயநாரும் தானத்தாரும் மாயேசுரரும் ஆக ஆறைனாயக மண்டபத்திலே நிறைவற நிறைந்து குறைவற கூடி இருந்து ஆதிசண்டேசுரனாயனார்

7. திருவாய் மலந்தருளிநபடி இந்த பறையனுக்கு உதி . . . ம்ஆக ஆறகழ்ஊர் நன்செய் நிலத்தில் காளி அம்மை உடைப்புக்கு மேற்கு தியாகணநல்லூர் வய

8. லுக்கு கிழக்கு நன்செய் ரூ ஊருடு ஓரணை ஏர் நடத்த மட்டு புன்செய் மாநி(ல)மும் ஒரு மனையும் ஒரு . . . . க்கும் மானி[ய]மும் திருமஞ்சன வழிக்கு தெற்கு இரண்-

9. மதிருக்கு நடுவு ஒரு தோட்டமும் கோயிலிலே நிற்றம் இருநாழி அருசியில் சோறும் மனையாவது சந்நதி தெருவில் வடசிறகில் ஒரு மனையும் குடுத்தருளி-

10. [இம்மருவாதி] ஆதிசண்டேசுரனாயனார் திருவாய் மலர்ந்தருளிநபடியாலே இந்த சுவந்திரம் உண்டாநது இவந்தகப்பன் பெருமாளும் இவன் வற்கத்தாரும் சந்திறாதித்-

11. த்வரையும்அனுபவித்து கொள்ள கடவர்களாகவும் இவை திருஞாநசம்பந்த பண்டிதர் எழுத்து இவை பலமுதல் க[ங்]காணி பெரியநயினார் எழு[த்]து.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 31/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 35
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: பொ.ஆ.1212
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 435/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/281
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 22
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டப வடசுவர் அடிநிலை.

குறிப்புரை : சோழ அரசன் மூன்றாம் குலோத்துங்கனின் முப்பத்தைந்தாவது ஆட்சியாண்டில் இப்பகுதியில் இருந்த குறுநில ஆட்சியாளர்களிடையே ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையைக் குறிக்கிறது. செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழனான எதிரிலிச்சோழச்சம்புவரையன் ஐயர் பொன்பரப்பின வாணகோவரையன் ஐயர், குலோத்துங்கசோழ வாணகோவரையன் செங்கேணி அம்மையப்பனுடைய மைத்துனன் காடவராயர் ஆகியோர் தனக்கும் தன் தலைமுறையினருக்கும் பகையாகி தப்பான ஏதும் செய்யாமல் இருக்கவேண்டுமெனவும், தானும் தான் உள்ளளவும் அவர்களுக்குத் தப்பான ஏதும் செய்யேன் என்றும் தவறி செய்யின் தங்களுக்கு இன்னாராய் (பகைவராய்) உள்ள மும்மலராயர்களுக்கும், தன்னுடைய பகைவர்களுக்கும் செருப்பும் தம்பலமும் எடுக்கும் கேவலத்துக்கு ஆளானவனாவேன், தன் தந்தைக்குப் பிறந்தவனல்லனாவேன் எனவும் திருக்காமீசுரமுடையார் கோயிலிலே உறுதி கொடுத்ததை உறுதிசெய்துக் கல்வெட்டுவித்ததைக் கூறுகிறது.

Summary : In the north wall of the maṇḍapa in front of the central shirne. A record in the 35th regnal year of the Chōḻa king tirubuvanachakaravarthikaḷ Kulōttuṅgachōḻa dēva (III). Registers a political compact between Seṅgeṇi Ammaiyappaṉ Alagiyasōlācchambuvarāyaṉ alias Etirilisōḻach chambuvarāyaṉ had sought to ensure that Aiyyar Poṉparppiṉa Vāṇakōvarayar, Aiyyar Kulōttuṅgasola Vāṇakōvarayar, and brother in law (machchinar) loocked upto him without doing any wrong to him and himself undertook to reciprocate and do no wrong to them. If ever he failed in honouring this compact and did harm tlo them he could be deemed to be the bearer of the sandels and bettle box of his enemies and not as the son of his father. The compact document was to be inscribed on the walls of the temple of Tirukkāmīśvaramuḍaiyār.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௩௰௫ -வது ஐய்யர்
2. பொன்பரப்பின வாணகோவரயர்க்கும் ஐய்யர் குலோத்துங்க சோழ வாணகோவரயர்க்கும்
3. மைச்சுனனார் காடவராயர்க்கும் செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழனான எதிரிலிச் சோழச் ச-
4. ம்புவராயநேன் ஆறகளூரில் திருக்காமீசரமுடையார் கோயிலிலே தப்பாமைக்கு அ(ப)ரமுறைமை சொல்-
5. லிக் கல்லுவெட்டிக் குடுத்த பரிசாவது எனக்கும் என் த(லைமு)றைக்கும் இவர்கள் விரோதமாயி தப்பன ஒழு-
6. ய்தல் செய்வித்தல் செய்யாதேய் என்னை நோக்க கடவர்களாகவும் இவர்களுக்கு நான் உள்ளதனையு-
7. ம் ஒருநாளும் தப்பாதே இருக்க கடவேனாகவும் தப்பினேனாகில் எங்களுக்கு இன்னாராய் வ-
8. ருகிற மும்மலராயர்களுக்கும் மற்றும் என் சத்துருக்களா யிருப்பார்களுக்கும் செருப்பும் தம்பலமு-
9. ம் எடுத்தே நாகிறேன் பல்லவரையன் சத்தியமேய் இப்படி தப்பிநேநாகில் அப்பாண்-
10. டார்க்கு பிறந்திலேநாகிறேன் இப்படிக்கு கல்லுவெட்டிக் குடுத்தேன் எதிரிலிச் சோழச் சம்-
11. புவராயனேன்.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 32/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 11
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: 13-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 444/1913.
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/290
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 23
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் இரண்டாம் திருச்சுற்று மேலைத் திருவாயில் இடப்புறச் சுவர்.

குறிப்புரை : ஆறகளூருடையார் கோயிலில் உண்ணும் ஆண்டார்கள் பதின்மருக்கு ஆற்றூர் வாரப்பற்று முதல்தர நன்செய் நிலத்தில் நான்குவேலி நிலம் அனைத்தாயங்களுடன் இறையிலியாக அளிக்கப்பட்ட செய்தி கோயில் தானத்தார்க்கு அறிவித்தமை பற்றியது. வழக்கம்போல் கணபதி ஆழ்வானான காடுவெட்டி கையெழுத்து இட்டுள்ளான்.

Summary : In west was of the second prakara of the same temple. Records the royal order addressed to the *tanāṭṭār* of the temple of Tirukkāmīśvaramuḍaiya Nāyanār of Āṛagaḻūr in Āṟṟūrkkūṟṟam intimating the grant of 4 *veli* of wet land of first grade in the vārappṟṟu of Āṟṟūr as tax free (irai ili) including the *ponvary, kasayam, kartigaipachchai*, and such levies as also *alyamañchi* for feeding ten Āṇḍārs in the temple. The land concerned was ordered to be deleted from *puravu* and *vari* (reigisters containing the details of the royal dues from the land under cultivation) The record was attested by Ādittaṉ Gaṇapathi Āḻvaṉ alais Kāḍuveṭṭi of Kāppalūr alias Ulagalandachōḻa nallūr in Muttūr Kūṟṟam in Pāṇḍimaṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செயல் ஆற்றூக் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுரமுடைய நாயனார் கோயில் தானத்தாற்கு இக்-
2. கோயிலில் உண்ணும் ஆண்டார்கள் பேர் பத்துக்கு பதினொன்றாவது ஆடி மாதமுதல் இறையிலியாக ஆற்றூ(ர்) வாரப்பற்று நன்செயில் மு-
3. தல் தரத்திலே நாலுவேலி நிலம் பொன்வரி காசாயம் காத்திகைப்பச்சை உள்ளிட்ட அனைத்தாயங்களும் ஆளமஞ்சி தேவையும் உட்பட இறை இ-
4. லியாக தந்தோம் இப்படிக்கு இவோலை பிடிபாடாக கொண்டு இன்னிலம் புரவிலும் வரியிலும் கழித்து கணக்கிலு[ம்] நிறுத்தி சந்திராதித்தவற் செல்வ-
5. தாக கல்லிலும் செம்பிலும் வெட்டி இந்நிலத்திலே திருச்சூலத்தாபனமும்

பண்ணி இறையிலியாக அனுபவித்து போது இப்படிக்கு பா[ண்]டி மண்-

6. டலத்து முத்தூ(ற்று)க் கூற்றத்து கப்பலூரான உலகளந்த சோழநல்லூர் கணபதி ஆழ்வானான காடுவெட்டி எழுத்து திருவெழுத்து ஸூஓ௸ உ

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 33/2022**

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	15-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	423/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/269
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	24
அரசு	:	---			
அரசன்	:	---			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டபத் தென்சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டு நான்கு துண்டுகளாக வெட்டப்பட்டுள்ளன. இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகக் காணப்படுவதால் ஒரே கல்வெட்டாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இருமடி இராயப்பநாயக்கர் திம்மையநாயக்கர் மகதை மண்டல நாட்டவற்குக் கல்வெட்டிக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. தவறான வரி தண்டலில் ஏற்பட்டுள்ளதை சீர்செய்யக் கல்வெட்டியதாகத் தெரிகிறது.

Summary : In the south base of the central shrine of the same temple. The stone containing the inscription is seen to have been cut into fragments. Only four pieces are available. The beginning of the inscription is lost. From the four pieces it can be understood that this is a pledge given by Irumuḍi Irasappa NāyakarTimmaiya nāyakar to the nāttavar of Magadaimaṇḍalam to put an end to the practice of collecting oppressive levis (adanteṟṟam) and moderate the rate of the levies like *kālvāsi, kaivilai* dāniyam, three kinds of *vartināi, vārappāṟṟu, kaṉkūḷi*, etc.,

கல்வெட்டு :

1. மாதம் ௳ ஸ்ரீமது இருமடி இராயப்ப நாயக்கர் திம்மைய நாயக்கர் மகதைமண்டலம் நாட்டவற்கு கல்வெட்டிக் குடுத்தபடி-
2. யாலே அடந்தேற்றம் ஆகக்கொண்ட கால்வாசி கைய்விலை தானியம் அனுவர்த்தினை பலவும் வற்தினை கொள்ளு-
3. தக்கதாகவும் கற்பித்து ஊர்க்கால்வாசி பூறுவம் அற்ற மரிஆதிமுதல் முதல் காலுக்குப் படிக்கால் கலத்துக்கு குறுணி நானாழி உள்வட்டம் கூட்டா-
4. . . தபடியும் கற்பித்து வாரப்பற்று நெல்லு உள்ளது கொட்டாரக் கூட்டாக அளக்கும்படியும் கற்பித்து காணிப்பற்று நெ-

துண்டு. 2

5. கழித்து வட்டம் கண்கூலிக்கு நுற்றுக்கு ஒரு பணம் கொள்ளத்தக்கதாகவும் கற்பித்து காணிக்கை க-
6. யாதி கழித்து கல்லும் வெட்டிக் குடுத்தோம் இம்மரிஆதிக்கு இந்த வரி உண்டான-
7. யக்கர் ஆணையே தப்பாது ஆன அளவுக்கு இப்படிக்கு இவை இருமடிநாயக்க திம்மைய நாயக்கர் எழுத்து உ

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 34/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	10
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	13-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை:		438/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/284
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	25
அரசு	: ---			
அரசன்	: ---			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் இரண்டாம் திருச்சுற்று முன்புள்ள மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : ஆறகளூர் திருக்காமீசுவரமுடையார் கோயில் வடக்கு வாசல் புறம்பில் இக்கோயில் தானத்தார் குடியமர்த்திய தத்துவாய்க்குடி மக்களை இக்கோயிலில் கண்டியதேவர் எழுந்தளுவித்த குலசேகர ஆளுடையார்க்கு தேவதானக் குடிமக்களாகத் தந்த செய்திக் கூறுகிறது. இதற்கும் உலகளந்தசோழநல்லூர் ஆதித்தன் கணவதி ஆழ்வானான காடுவெட்டி ஒப்பிட்டுள்ளான்.

Summary : In the south wall of the maṇḍapa in the second prakara. The inscription records a royal order addressed to the *tānāṭṭār* of the temple of Tirukkāmīśvaramuḍaiya-nāyanār, the God of Āṛagaḻūr in Āṟṟūrkkūṟṟam, directing that the weavers settled by them out side the northern gate of Āṛagaḻūr may be assigned as the cultivators (kudi makkaḷ) of the *dēvadāṉa* (lands) of the God Kulasēkara-āḻudaiyār consecrated by Kaṇḍiyadēvar in their temple with effect from the date cited. The order was attested by Ādittaṉ Gaṇapathiyaḷvāṉ alais Kāḍuveṭṭi of Kāppalūr alais Ulagalanda chōḻa nallūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆற்றூர்க்கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீஷ்வரமுடைய நாயனார் கோயில்த் தானத்தார்க்கு
2. ஆறகளூர் வடக்கு வாசலுக்குப் புறம்பு தாங்கள் . . . . . ளுவிந்த தந்துவாய்க்குடி மக்களை பத்தாவது ஆனிமாதம் இக்கோயிலில்க் க-
3. ண்டியதேவர் எழுந்தருளுவித்த குலசேகர ஆளுடையார்க்கு தேவதானக் குடிமக்களாகத் தந்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபா-
4. டாகக் கொண்டு தேவதானக் குடிமக்களாக சந்திராதித்தவற் செல்லுவதாகக்

கல்லிலும் செம்பில்லு(ம்) வெட்டிக் கடமை போக க-

5. ற்பித்துக் கொள்க இப்படிக்கு இவை பாண்டிமண்டலத்து முத்தூர்க் கூற்றத்துக் கப்பலூரான உலகளந்சோழநல்லூர் ஆதித்-

6. [த]ன் கணவதி யாழ்வானான [காடுவெட்டி] எழுத்து திருவெழுத்து

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 35/2022***

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	13
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	13 -ஆம் நூற்றாண்டு
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	441/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/287
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	26
அரசு	:	---			
அரசன்	:	---			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் இரண்டாம் திருச்சுற்று முன்புள்ள மண்டப கிழக்கு நுழைவாயில் இடப்புறச் சுவர்.

குறிப்புரை : ஆற்றூர் கூற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீசுவரமுடையார் கோயில் தானத்தார்க்கு அரசன் அனுப்பிய ஆணை. ஆற்றூர் நாட்டவர் தன்னை வளர்த்தெடுத்த பெருமானனார்க்குக் காணியாகக் கொடுத்த தேவியாக்குறுச்சியில் காடுவெட்டித் திருத்திய நன்செய் நிலத்தில் மூவாயிரங்குழி நிலத்தை பொன்வரி உள்ளிட்ட அனைத்தாயங்கள் மற்றும் ஆளமைஞ்சி தேவை உட்பட இக்கோயிலில் உள்ள குலசேகர ஆளுடையார்க்கும் வாழ்வித்த மங்கையார்க்கும் பூசைக்கும் திருப்பணிக்கும் இறையிலியாகத் தந்ததைக் குறிக்கிறது.

Summary : In the east emtrance of the maṇḍapa in the second prakara of the same temple. Records arrayal order addressed to the *tanāṭṭār* of the temple of Tirukkāmīśvaramuḍaiya nāyanār of Āṛagaḻūr in Āṟṟūrkūṟṟam granting 300 *kuḻi* of wet land that would be reclaimed after clearing as tax free *(iriyili)* and including *poṉvari* and all such levies as well as āḷamañji-tēvai maintenance of the deities Kulasēkhara āḷuḍaiyar and Vaḻvittamaṅgai set up in the temple of Tirukkāmīśvaramuḍaiyār nāyanār at Āṛagaḻūr in Aṟṟurkkūṟṟam. The record was attested by Gaṇapathiāḻvāṉ alais Kāḍu-veṭṭi of Kappalūr alias Ulagalandachōḻanallur in Muttūṟṟukkūṟṟam in Pāṇḍimaṇḍalam. The grant was to take effect from the date cited above.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செயல் ஆற்றூர்க்கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீஸ்வரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இக்கோயி-

2. லில் குலசேகர ஆளுடையார்க்கும் வாழ்வித்த மங்கையார்க்கும் பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாக ஆற்றூர் நாட்டவர் எ(ன்)னை வள(ர்)த்த

3. பெருமானுர்க்குக் காணியாகக் குடுத்த தேவியாகுறிச்சி நன்செய் நிலத்திலே பதின்மூன்றாவது புரட்டாதி மாதம் முதல் காடுவெட்டி திருத்தும் நிலத்-
4. திலே மூவாயிரங்குழி பொன்வரி உள்ளிட்ட அனைத்தாயங்களும் அளமைஞ்சி தேவையும் உட்பட இறையிலியாகத் தந்தோம் இப்படிக்கு ச-
5. ந்திராதித்தவரை செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டி இறையிலியாக அனுபவித்துப் போதுக இவை பாண்டிமண்டலத்து முத்தூர்க் கூற்றத்து
6. கப்பலூருரான உலகளந்தசோழநல்லூர் ஆதித்தன் கணபதி ஆழ்வானான காடுவெட்டி எழுத்து திருவெழுத்து [illegible] உ

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 36/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	13-ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	443/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/289
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	27
அரசு	: ---			
அரசன்	: ---			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டப மேற்கு நுழைவாயில் இடப்புறச் சுவர்.

குறிப்புரை : ஆறகளூருடையார் திருக்காமீசுவரமுடையார் கோயில் தானத்தார்க்கு அளிக்கப்பட்ட அரசாணை. தன் பேரால் கட்டின உலகமுழுதுடையார் சந்திக்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நிமந்தங்களுக்கு தானத்தார் அளித்த உடல் (முதல்) கொள்ளுமளவு நெல்லுக்கும் பணத்துக்கும் உடலாக (முதலாக) தம்முடைய பற்றான சனனாத வளநாட்டு நரையூர் கூற்றத்து அலம்பலத்துப் பெரியேரி வாரப்பற்று முதல்தர நன்செய் நிலத்தில் பழைய கணக்குப்படி வன்னெஞ்சன் அளவு கோலால் மூவாயிரத்து ஐந்நூறு குழி நன்செய் நிலமும் ஐயாயிரம் குழி புன்செய் நிலமும் ஆக 8500 குழி நிலத்தை திருநாமத்துக் காணியாகக் கைக்கொண்டு பயிர் செய்ய வேண்டும். குடிகளிடம் அடைத்து அவர்கள் விரும்பும் பயிர் செய்து கொண்டு அதனால் வரும் வருவாயில் தங்களது கொற்றிலக்கைக்குப் (சீவனம்சம்) பாதி போக மீதமுள்ள அனைத்து ஆயங்களும் உட்பட தேவதான இறையிலியாக விடப்பட்டது.

Summary : In the west entrance of the maṇḍapa in front of the central shrine of the same temple. Order of the king to the *tanāṭṭār* of the temple stating that the service Ulagamuḻutuḍaiyāl santhi founded in his name was to be maintained from the 8500 *kuḻi* of land granted at Alambalam in Naṛai-yūrkkūṟṟam a subdivision of Milāḍu alias Jananatha vaḷanāḍu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செயல் ஆறகளூர் உடையார் திருக்காமீஸ்வரமுடை[ய]-
2. லாநாயனார்கோயில்தானத்தார்க்கு நம்பேரால்கட்டினஉலகுமுழுதுடையார் ச-
3. ந்தி அமுதுபடி சாத்தும்படி உள்ளிட்ட நிமந்தங்களுக்கு தாங்கள் இட்ட உடற்கொளப்படி நெல்

4. லுக்கும் பணத்துக்கும் உடலாக நம் பற்றான மிலாடாகிய ஜ[ள]னாத வளநாட்டு நறையூர் கூற்றத்து அலம்பலத்தில் பெ-
5. ரிய ஏரி வாரப்பற்று நன்செய் நிலத்து முதல்தரத்தில் தடிபல சேர பழவொழுகின்படி வன்னெஞ்சன் அளவுகோலால் நஞ்-
6. சை குழி மூவாயிரத்து ஐந்நூறும் புன்சை (குழி) ஐய்யாயிரமும் ஆக நன்சை புஞ்சை குழி எண்ணாயிரத்து ஐநூறு நம்தோப்பு
7. அடங்கலும் இன்த நில(ம்) திருநாமத்துக்காணியாக கைக்கொண்டு தான் வேண்டும் குடிக்கு அடைத்து கார் பசானம் உள்ளிட்-
8. டு தாங்கள் வேண்டும் பயிர்ச் செய்துகொண்டு இன்னிலத்துக்கு கடமை பொன்வரி காசாயம் காத்திகைப்பச்சை மாதிரி
9. சந்தி நல்லெருது நற்பசு ஊர் கணக்கு ஜீவிதங் ஒன்றுபாதி ஆன அமைஞ்சி தேவை எற்சோறு உள்ளிட்ட மற்றும் எற்பேர்ப்பட
10. அனைத்தாயமு உள்ப்பட இழந்து இன்னிலத்தால் வரும் நா உருமை கால் உருமை மற்றும் எப்பேர் பட்ட உரிமைகளும் உட்பட முதலட-
11. ங்கலும் இறையிலி திருநாமத்துக்காணியாக சந்திராதித்தவரையும் செல்வதாக குடுத்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடா-
12. க கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டி திருச்சூலத்தாபனமும் பண்ணிக்கொள்க இவை சிறிநாங்கூருடையான் எழுத்து ஸ்ரீ மாஹேஸ்வர ரக்ஷை.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 37/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	13
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ.1191
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	417/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/263
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	28
அரசு	: சோழர்			
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்			
இடம்	: திருக்காமீசுரமுடையார் கோயில் அர்த்தமண்டபத் தென்சுவர்.			

குறிப்புரை : மலையனுடையான் செம்பை ஆழ்வான் என்பவன் தனக்கு அளிக்கப்பட்ட *சீமாகேசுவரக்காணியான* இலத்திப்பாடி நான்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய் நிலங்களை ஆறகளூருடைய திருக்காமீசுவரமுடையார்க்கு 150 பொன்னுக்கு விற்பனை செய்ததைக் குறிக்கிறது.

Summary : In the south wall of the same temple. Records the sale of he village llattippāḏi with the wet and dry land in as well as the irrigation tanks (ēndal) pertaining with all rights (urimaigaḻ) for a consideration of 135 *poṉ* to the temple of Tirukkāmīśvaramuḍaiya nāyanār the God of Āṛagaḻūr in Āṛṛūrkkūṟṟam by Malaiyanuḍaiyāṉ. In the transaction of the temple was represented by Sri Māhēsvara Kaṉkāṇi, Dēvakaṇmi and kōyilkaṇakkar.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்-
2. க சோழதேவர்க்கு யாண்டு பதின்மூன்றாவது ஆற்றூர் கூற்றத்து
3. ஆறகளூருடையார் திருக்காமீசுரமுடைய நாயனார்க்கு
4. இக் கோயிலில் சீமாகேசுர கண்காணி தேவகந்மி கோ-
5. யிற் கணக்கற்கு மலையநுடையான் செம்பை ஆழ்வாநே-
6. ந் எந் காணியான இலத்திபாடி நாந்கெல்லைக்குள்பட்-
7. ட நன்செய் புன்செய் ஏந்தல்களுமுட்பட இந்நாயனாற்க்கு விற்-
8. று நான் பற்றின பொன் ௱௩௰௫ இப்பொன் நூற்று முப்பத் த-
9. ஞ்சும் பற்றி என்காணியான இலத்திபாடி எற்பேறபட்ட
10. உரிமைகளும் இந்நாயனார்க்கு குடுத்தேந் இக்கோயி இலி-
11. ல் சீமாகேசுரக் கண்காணி தேவகந்மி கோயிற் கணக்க-
12. ற்கு மலையநுடையாந் செம்பை ஆழ்வாநேன் இவை என் எழு-
13. த்து இப்படியறிவேன் வெம்பாருடையான் முப்புளியா
14. ....

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 38/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	11
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	13- ஆம் நூற்றாண்டு
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	442/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/288
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	29
அரசு	:	---			
அரசன்	:	---			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் இரண்டாம் திருச்சுற்று கிழக்குத் திருவாயில் இடப்புறச் சுவர்.

குறிப்புரை : ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடையார்க்கு ஆண்டார் பெருங்கருணையாளர் செய்து வைத்த நந்தவனக் குடிகளுக்கு கொற்றிலக்கைக்கு (சீவனத்துக்கு) ஆற்றூர் வாரப்பற்று நன்செய் நிலத்தில் முதல் தரத்தில் ஒரு வேலி நிலம் பொன்வரி உள்ளிட்ட அனைத்தாயங்களுடன் நந்தவனப்புற இறையிலியாக அளிக்கப்பட்டது எனக் கோயில் தானத்தார்க்கு அறிவித்த ஓலை.

Summary : In the east entrance of the second prakara of the same temple. Records a royal order addressed to the *tānāṭṭār* of the temple of Tirukkāmīś-varamuḍaiya-nāyanār granting one vēli of wet land for the maintenance (jīvidam) of the gardeners. The temple garden was instituted by Aṇḍār Peruṅgaruṇaiyālar to the temple. The record is Attested by Gaṇapathi Āḷvāṉ alias Kāḍuveṭṭi of Kāppalūr alias Ulakaḷanda chōḻa nallūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செயல் ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீஸ்வரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இன்னாயனார்-
2. க்கு சிற்றேரிக்கு கிழக்கு ஆற்றுக்குத் தெற்கு அகரம் இராசநாராயணச் சதுர்வேதி மங்கலத்து எல்லைக்கு வடக்கு காடுவெட்டிகளுக்கு அர ஆண்-
3. டார் பெருங்கருணைஆளர் செய்கிற (செய்)த்து வாய்த்தான் திருநந்தவனஞ் செய்யும்பே(ர்க்)கு சீவனத்துக்கு பதினொன்றாவது ஆவணி மா-
4. தம் முதல் ஆற்றூர் வாரப்பற்று நன்செய் முதற்தரத்திலே வேலி நிலம் பொன்வரி உட்பட அனைத்தாயங்களும் ஆளமைஞ்சு தேவையும் உ-
5. ட்பட திருநந்தவனப்புற இறையிலியாகத் தந்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக்கொண்டு புரவிலும் வரியிலும் கழித்து சந்திரா-
6. தித்தவற் செல்வதாகக் கல்லும் வெட்டி இந்நிலத்தில் திருச்சூலத்தாபனமும் பண்ணிக்கொண்டு திருநந்தவனப்புற இறையிலியாக அனுபவித்து-

7. ப் போது இப்படிக்கு இவை பாண்டிமண்டலத்து முத்தூர்க் கூற்றத்துக் கப்பலூரான உலகளந்த சோழநல்லூர் ஆ[தி]த்தன் கணபதி ஆழ்வானான கா-

8. டுவெட்டி எழுத்து திருவெழுத்து [illegible]

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 39/2022***

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	14
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ.1230
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	415/1913.
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/261
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	30
அரசு	:	சோழர்			
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் உண்ணாழிகை முன்புள்ள மண்டபம் தென்சுவர்.

குறிப்புரை : சோழ அரசன் மூன்றாம் இராசராசனின் பதினான்காம் ஆட்சியாண்டில் தொண்டைமான் தங்கை நாச்சியார் திருக்காமீசுவரமுடையார் கோயில் முதல் திருமாளிகையின் வடமேற்கு மூலையில் தன்னைக் காத்தருளவேண்டி (ஆஸ்ரயமாக) எழுந்தருளச் செய்த காரியான ஈசுவரமுடைய நாயனாற்கு நாள் ஒன்றுக்கு ஆற்றில் திருமஞ்சனக்கலத்துக்கும் திருப்பள்ளித்தாமம் சாத்தியருள பரிசட்டத்துக்கும் ஐந்து சந்திவிளக்குகளுக்கும் சனிப்படி எண்ணைக் காப்புக்கும் பூசைப் பேற்றுக்குமாக மூவரயிரங்காசும், திருவமுது உள்ளிட்ட வெஞ்சனங்கள், மற்றும் சிறப்புநாள் பூசைகளுக்காக பன்னிரண்டாயிரங்காசும் ஆக பதினையாயிரம் நற்காசுகளை திருப்பண்டாரத்திலே ஒடுக்கினாள் (இட்டுவைத்தாள்). இக்காசு கொண்டு இக்கோயில் மாகேசுவரக் கண்காணிசெய்வார், தேவகன்மி, கோயிற் கணக்கர் ஆகியோர் இப்பணிகளை நிலவும் ஞாயிறும் உள்ளவரை நடத்த நடத்திவரவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

Summary : South wall of the maṇḍapa in front of the same temple. A record of the chōḻa king Tribuvanachakravarti Rājarājadēva in his 14th year. Records that Nāchchi the younger sister of Araison Toṇḍaimān endowed 3000 aṉrādu-narkāsu for the daily bathing in the river, flowers, tirupparivaṭṭam, five santhi lamps-oil for Sāturday bath, kāppu and the worship of Nambiyār. She also endowed 12000 aṉrāḍu-narkāsu for food offerings as also for side dishes and for special worship and on special occasions for God Kariyāṉai-Iśvaramuḍaiya-nāyanār set up at the north-western corner of the temple of Tirukkāmīśvaramuḍaiya-nāyanār in Āṛagaḻūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு ௰௪
2. இஷபநாயற்று அபரபக்ஷத்து ஸப்தமி திதி திங்கட்கிழமையும் பெற்ற அவிட்ட-
3. த்துநாள் ஆறகளூருடையார் திருக்காமீஸ்வரமுடைய நாயனார் கோயிற் ஸ்ரீமாஹேஸ்வ-

4. ரக் கண்காணி செய்வார்களுந் தேவர்கன்மி கோயிற்கணக்கரும் இவ்வூரில் அரைசந் தொ-
5. ண்டைமாந் தங்கை நாட்ச்சி பக்கல் உபையங்கொண்ட பரிசாவது இன்னாயினார் கோயிலில் முதற் திரு-
6. மாளிகையில் வடமேலை மூலையில் ஸூஸ்ரீ்யமாக எழுந்தருளின உடையார் காரியான் ஈஸ்வரமுடையநாய(னா)-
7. ற்கு நாள் ஒன்றுக்கு ஆற்றிற் திருமஞ்சனங்கலத்துக்குந் திருப்பள்ளித்தாமம் நானாழிக்குஞ் சாத்தியருளத்திரு-
8. ப்பரிசட்டத்துக்குஞ் சந்தித் திருவிளக்கு ஐஞ்சுக்குஞ் சனிப்படிக்கு எண்ணைக்குங் காப்புக்குந் நா(ச்சி)யியார்க்குப்
9. பூசைப் பேற்றுக்கும் இற்றைநாள் ஒடுக்கின காசு ௩௲ இக்காசு மூவாயிரமுந் திருவமுதுக்கு ஆறை நாயக-
10. ன் நாழியால் அரிசி அறு நாழிக்குங் கறியமுது அறு பலத்துக்கும் உப்பமுது மிளகமுது நெய்யமு-
11. து அடைக்காயமுது உள்ளிட்ட வெஞ்சனத்துக்கும் விஷுவென ஸகூ்ரம முள்ளிட்ட விஸெஷ
12. பூசைக்கும் இற்றைநாள் ஒடுக்கின காசு ௰௨௲ இக்காசு பன்னீராயிரமும் ஆக அன்றாடு
13. நற்காசு ௰௫௲ இக்காசு பதினைய்யாயிரமும் ஒன்றாக்கி உடையார் திருக்காமீஸ்வரமு-
14. டைய நாயனார் சீபண்டாரத்திலே இற்றைநாள் ஒடுக்கினமையில் இன்னாயனார் சீ பண்டா-
15. ரத்து நின்றும் புறப்பட்டு இன்னிமந்தக்கட்டுச் சந்திராதித்தவரை இக்காரியான் ஈஸ்வ-
16. ரமுடைய நாயனாற்குப் பூசை செலுத்தக் கடவதாக இத்தொண்டைமான் தங்கை நா-
17. ச்சிக்கு உபையங் குடுத்துக் கல்வெட்டிக் குடுத்தோஞ் சீமாஹேஸ்வரக் கண்காணி செய்-
18. வார்களுந் தேவகன்மி கோயிற் கணக்கரும் இவனைவோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.
19. இது அழிவு செய்வான் கங்கையிடை குமரி இடை செய்தார் செய்த மஹாபாபங் கொ-
20. ள்வார் ஸ்வஹஸ்து இக்காரியான ஈஸ்வரமுடைய நாயனாற்கு இன்னாச்சி யிட்ட பரிகலமுங் காலும்
21. எடை நூற்றைம்பதின் பலம். ௨

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 40/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 13
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: பொ.ஆ. 1230
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 440/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/286
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 31
அரசு	: சோழர்		
அரசன்	: ---		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் இரண்டாந் திருச்சுற்று கிழக்குத் திருவாயில் வலப்புறச் சுவர்.

குறிப்புரை : ஆறகளூருடையான் இராசராச தேவனான குலோத்துங்கசோழ வாணகோவரையனுக்கும் திருக்கோவலூர் மலையமானுக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் உடன்படிக்கையைக் குறிக்கிறது. கல்வெட்டு துண்டுதுண்டாக உள்ளது. முழுமையான செய்திகளை அறிய இயலவில்லை.

Summary : In the east entrance left of second prakara of the temple. Records a political compact between Āṟagaḷūrudaiya Irājarājadēvaṉ Ponparappinār alias Kulōttuṅgachōḷa-Vāṉakovaraiyan and Kiḷyūr Malaiyamāṉ of Tirukkōvalūr, each of them undertaken to come the aid of the other in times of distress River Āḷviṉaiyaṟu was to be the boundary fo the territories under the control.

கல்வெட்டு :

1. (யாண்டு) கரு ஆவது ஆறகளூருடைய இரா[ச]ரா[ச]தேவன் பொன்பரப்பினாரான குலோத்துங்கசோழ வாணகோவரையற்குத் திருக்கோவலூருடைய கிளியூர் மலையமான்
2. (எ)ங்களில் நாடு நிற்குமிடத்து ஆழ்வினையாற்றுக்குத் தெற்கு இவற்கு நிற்கவும் இவ்வாற்றுக்கு வடக்கு எனக்கு நிற்கக் கடவதாகவும் கிழக்கு நாடு நிற்குமிடத்துக் கல்லியா . .
3. டவதாகவும் எங்களில் இருவோமும் நாங்கள் உள்ளதனையும் பிழையாதே நின்று ராசகாரியஞ் செய்யிலும் வன்னியஞ் செய்யிலுங் கூடவே செய்யக் கடவோமாகவும்…
4. டவோமாகவும் இவற்கு வினையுண்டாகில் என் முதலிகளும் படையும் குதிரையும் புகவிட்டு என்வினையாக ஏறிட்டுக்கொண்டு நோக்க (கடவே) னாகவும் இ……..
5. னாகவும் எனக்கு வினையுண்டாகில் இவரும் தம் முதலிகளும் ப(டையும்பு) குத விட்டுத் தம் வினையாக ஏறட்டுக்கொண்டு நோக்கக் கடவாராகவும் . . . . த்தாலும் நோ…….

6. ழமலையகுலராயர் வினையிடை யாட்டம் என்னுடனே கூட நோக்கித்தர கடவராகவும் என்.......... மென்று சொன்ரை முதல்மையாக்கி பரிகரிக்கக் கட....

7. மையனுக்கு என் பெண்டுகளைக் குடுத்தேனாவேன் இப்படிக்கு ஆறகளூரில் உடையார் திருக்காமீ*ஸ்வர*முடையார் கோயிலிலே கல்வெட்டிக் குடு.........

8. குலராயன் எழுத்து உ

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 41/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	18
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ..1289
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	439/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/285
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	32
அரசு	: பாண்டியர்			
அரசன்	: சுந்தரபாண்டியன்			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் இரண்டாம் திருச்சுற்று தெற்குச் சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டில் பன்னிரண்டு வரிகளிலும் முன்பகுதிகள் சிதைந்துள்ளன. சுந்தரபாண்டியனுடைய பதினெட்டாம் ஆட்சியாண்டில் ஆறகளூர் உடையார் கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் சோற்றித் திருவாண்டாள்சானி உள்ளிட்டார் கோயில் திருவணிகலன்களில் (திருவாபரணங்கள்)கொஞ்சத்தைக் களவாண்டமையால் இவ்வூர் நிலங்கலந்த மாகேசுவரரும் நாயனார் முதலிகளும் (அதிகாரிகள்) கூடி அதற்குத் தண்டமாக முப்பது வட்டப் பூசைக்காணி நாளிலே தேவாண்டைச்சானி நாள் இரண்டரையும் இவள் உளிட்டார் கொண்டுடைய நாள் அரையே அரைக்காலும் ஆக நாள் மூன்றேகால் நாளுக்கு 250 பணம் தண்டம் விதித்தனர். தங்களுக்குப் போதிய வருவாய் இன்றி நலிகையில் இவர்கள் காணியைத் திருஞானபண்டிதர் என்பவர்க்குப் பணம் ஒன்றுக்கு நூறு காசாக இப்பணம் இருநூற்றைம்பதுக்கு இருபத்தையாயிரம் அன்றாடு நற்காசுகளுக்கு விற்று விலையாவணம் செய்ததைக் குறிக்கிறது.

Summary : South wall of the second pragara of the same temple. A record of the Pāṇḍiya king Tiribuvanaccakkarvathikaḷ SundaraPāṇḍya deva in his 18th year. It records the right of worship for 31/8 days of a month which had been owned by a certain lady was ordered to be sold evidently on account of the idefacation of temple jewells by her and her accomplices. The lady was arrested by the temple Māgesvarās and officers who then met in a maṇḍapa and decided 250 paṇams+5000 *sōḷiyakkāśu*) was to be paid by the other worshipers of the temple for distributing among themselves the privilege under sale.

கல்வெட்டு :

1. . . . . ன *திஹுவனச்சகூ*வத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு ய[அ]-ஆவது ஜெஷ நாயற்று வூவ்வூ வசஷத்து வூணெ்ணூயும் வியா[ழ]க்]கிழமை பெற்ற சோதிநாள் மலாடாகிய ஜனனாத வளநாட்டு ஆற்றூர் கூற்றத்து

2. . . . . டய நாயனார் கோயிற் காணியுடைய சிவஙாஹணர் *ஹாரஜ்ஞா*ஜன் ஆண்டான் தனவாசி காட்டின பட்டநும் இவன் தம்பி ஊருடைய பெருமாளாந பன்மா*ஹெஸ்வர* பட்டனும் இந்த *மொகூ*த்து நாயன் தாழி

ஆறைநாயக பட்டனும் இவன் தம்பி

3. . . . . மொதூ தெப்பமழகியான் மருதபட்டனும் காஸ்யபன் திருக்கழிப்பாலை புகலியும் கூதூறு காமன் விரதமுடித்த பட்டனும் இந்த மொதூத்து தாழி கண்ட மாத்தாண்ட ஸூஹூராயனும் இந்த மொதூத்து உடையாந் செய்ய சேவக பட்டன் அண்ணாமலை

4. . . . . ரான பொன்பரப்பிநான் ஐவற்க்கு அரியான் அரசபனும் இவ்வனைவோம் கோயில் காணிவிலை ஸஹூாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது இக்கோயில் ஸெவாசாயுக்காணி உடைய ஷெஸிகன் ஹாரஜூாஜந் ஆட்கொண்ட தேவன்

5. . . . . ந்த பண்டிதற்கு நாங்கள் விற்றுக் குடுத்த காணியாவது இக்கோயில் முப்பது வட்டத்து காணி உடைய நாங்களும் ஆதூாயன் உமையன் ஹாரி தேவாண்டாட் சானி உள்ளிட்டாரும் கோயில் முறை செய்து போதுகிற நாளிலேய் இந்நாயனார் திருவாபரணங்களிலே கொ-

6. . . . . இவ்வூர் நிலங்கலந்த ஊஹெஸ்ரும் நாயனார் முதலிகளும் திருமண்டபத்திலே இருந்து கேட்ட இடத்து இத்திருவாபரணச் சோற்றி தேவாண்டைசானி உள்ளிட்டார் பக்கல் களவாக நிரப்பி இவளையும் இவள் மருமகளையும் சிறையிலே வைத்து இதுக்கு தெண்டமாக இவள் கணியும் இவள் உள்ளிட்டார் காணியும்

7. . . . . விற்று திருப்பணி செய்வதென்று நாயனார் அருளிச்செய்கையில் இவள் காணியான நாள் உ௫யும் இவள் கொண்டுடைய நாள் ௫ ௷ ஆகநாள் ௩௷ளுக்கும் விலை நிச்சயித்த பணம் ௨௱௰ இப்பணம் ௨௱௰ துக்கு இவள் நாளும் இவள் உள்ளுட்டார் நாளும்

8. . . . . வதென்று நலிவு செய்கையில் எங்களுக்கு உற்பத்தி இல்லாமையால் இவள் உள்ளுட்டார் நாள் ௩௷லும் முப்பது வட்டத்தில் விழுக்காட்டிலே நாங்கள் விசிக்கொண்டு எங்களுக்கு கூஊமகமாய் நாங்கள் அனுபவித்து போதுகிற நாள்களிலேய்

9. . . . . கு விற்றுக் குடுத்த நாளாவது ஆறகளூருடையார் திருக்காமீஸ்ர முடைய நாயனார் கோயில் அடியாக கொண்டு இவ்வூர் பலதளி உள்ளுட்ட நாயன்மார் கோயில்களிலும் ஆற்றுரும் ஆற்றூர்நாட்டில் ஊர்களிலும் பலதளி உள்ளுட்டார் நாயன்மார் கோயில்களிலும்

10. ... ... றூர் கோயில்களிலும் மற்றும் எப்பேர்பட்ட வூாவஷிகளிலும் எங்கள் காணியான நாட்களிலே திருஞானசம்பந்த பண்டிதற்கு விற்றுகுடுத்த நாள்களாவது தனவாசி காட்டின பட்டர் உள்ளுட்டார் நாள் . லும் ஆறைநாயகபட்டன் உள்ளுட்டார் நாள் ஐ கூ [கூ]ஷையும்

11. . . . . மாத்தாண்ட ஸூஹூராயன் நாள் வவசுஷை . யும் விரதமுடித்தபட்டன் உள்ளுட்டார் நாள் வசுஷை யும் செய்ய சேவகபட்டன்

உள்ளுட்டார் நாள் வசுவதையும் அரவசபட்ட(ன்) நாள் வசுவதையும் ஆக ௩௯ வாசலுக்கு நாள் ௩௨௰ச இந்த நாள் ௩௯ லுக்கு வரும் மனையும் மனை ஷ்ராவதிகளும் பிடிய்ப்பிடி வாரியும்

12. . . . . வருவனவும் வரவிருந்தநவும் மற்றும் எப்பேறபட்ட உரிமை ஷ்ராவதிகளும் ஸாமூஸ்ங்களும் இற்றை நாளால் இவற்கு விற்றுக் கொள்வதாந எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்பணம் ௨௫௰ இப்பணம் ௨௫௰க்கும் அந்றாடு விலைப்படி காசு பணம் ஒன்றுக்கு

13. சோழிய காசு ௱ ஆக பணம் ௨௫௰க்கு காசு ௨௫௲ இக்காசு இருபத்தையாயிரத்துக்கும் பணம் ௨௫௰ மே விலையாவதாகவும் இதுவே பொருள் மாவறுதி பொருள் செலவோலை ஆவதாகவும் இப்படி விழுக்காட்டாக வந்த நாள் . . . .

14. ௨௫௰ ம் ஆவணக்களரியே காட்டேற்றி கிழிச்செலவறக் கைக்கொண்டு விற்று விலை ஷ்ராணம் பண்ணி கல்வெட்டிக் குடுத்தோம் முப்பது வட்டத்து காணி உடைய ஸாஹ்ணரோம் ஒரு காலாவதும் இரு காலாவதும் முக்காலாவதும்

15. விலைக்குற விற்று பொருளறக் கைக்கொண்டு திருப்பணியிலே ஒடுக்கி செலவற்றபடிக்கு கல்வெட்டிக் குடுத்தோம் முப்பது வட்டத்து காணி உடைய சிவஸாஹ்ணரோம் இத்திருஞானசம்பந்த பண்டிதற்கு இப்படி கல்லுவெட்டுவித்துக் குடுத்தோம்

16. முப்பதுவட்டத்து காணி உடைய இவ்வனைவோம்.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 42/2022***

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	7
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	13-ஆம் நூற்றாண்:
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	421/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/267
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	33
அரசு	:	---			
அரசன்	:	---			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் மண்டபம் தெற்குச்சுவர் அடிநிலை.

குறிப்புரை : ஆட்சியாளர்களுடைய ஆக்களால் (பசுக்கள்) வரும் சேக்களில் (காளைக் கன்றுகளில்) ஆண்டுதோறும் பத்து சேக்களை கோயிற் காளைகளாக (ரிசபம்) விடவும் மீதமுள்ள சேக்களை பொன்பரப்பினான் பெருமாள் திருமதில் உட்பட்ட பல திருப்பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் ஆணையிட்டதைக் குறிக்கிறது. மாட்டுக் கன்றுகளில் ஆண் கன்றுகள் அஃதாவது காளைக்கன்றுகள் சே என அழைக்கப்படும். அதனாற்றான் சிவபெருமானை "சேவிடைநாயனார்" (ஒசூர் சந்திரசூடேசுவர்ர் கோயில்) என்றும் "சேவடைந்த ஊர்தியான்", சேவுடைநம்பி, எனத் தேவாரத் திருமறைகளும் அழைப்பதைக்காணலாம்.

Summary : South wall of the same temple. Registers the order assigning the bull calves to be yield by cows of the cow sheltler every year as follows; ten of the bulls will be released as rishabhas. The rest will be utilized for the repairs and maintenance of the construction of the compound wall called Poṉparappiṉa - perumāl tirumadil of the temple of Tirukkāmīśvaramuḍaiya nāyanār. The order was attested by Vaṇakōvaraiyān and Villavarāyaṉ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு ஏழாவது முதல் நம் ப-
2. சுக்களிற் சேக்களிலே ஆண்டு தோறும் பத்-
3. துச் சே ஈஷபமாக விடவும் நீக்கி நின்ற சே-
4. க்கள் திருக்காமீஸ்வமுடைய நாயனார் கோ-
5. யில் பொன்பரப்பின பெருமாள் திருமதிளு-
6. க்கும் உட்பட்ட திருப்பணிகளுக்குச் சதுராஷிகூ
7. வரையும் குடுத்தோம் வாணகோவரையன்
8. எழுத்து இவை வில்லவராயன் எழுத்து.

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 43/2022**

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	சகம் 1297பொ.ஆ..1375
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	431/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/277
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	34
அரசு	:	விசயநகர்			
அரசன்	:	வீரகம்பண உடையார்			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் முன்மண்டபம் வடச்சுவர்.

குறிப்புரை : ஆறகளூர் தாயிலும்நல்ல சோழீசுவரமுடையார்க்கு குமரந்தை கருவூர்த் தேவன் என்பான் கீழ்மகளூர் மனவனேந்தலிலும், உலகங்காத்த பெருமாளேந்தலிலும் மூவாயிரங்குழி நஞ்சை நிலத்தை அனைத்தாயங்களும் இழக்கத் திருநாமத்துக்காணியாக அளித்ததைக் குறிக்கிறது.

Summary : A record of the Vījayanagara king Vīra Kampaṇṇa-Uḍaiyār son of Vīra Bukkaṇṇa-udayār in 1297. The servants of the temples viz *sri-rudrar, sri-magesvarar, devakaṇmi* and accountant of the temple in the temple of Tirukkāmīśvaramuḍaiya Nāyanār, the God of Āragaḻūr in Ārrūkkūṟṟam in Malāḍu alias Janātha vaḷanāḍu assempled in the Arainâyakan-tiru-maṇḍapam assempled together gave to a certain Eṉṉudaiya-nāyanār, son of Mārāteṉ-uḷḷattiuntār alais Aghora-siva-mudaliyar the work of supervising the different services in the temple and a house for his living.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஊடீராம [ஏ]ஹாஊணெ்டுசுரநு அரியராய விஹாடன் ஹாஷைக்குத் தப்புவராயர் கண்டன் ஸதூஸ்ஸுஊ்ஹாதிபதி ஸ்ரீ அரியண்ண உடையார் குமாரன் ஸ்ரீ வீரகம்பண்ண உடையார் ஷூயிவிராஜூ௸ பண்ணி அருளாநின்ற ஶகாஷூ௸
2. ரூஉஊாகூயஎநு மேல் ராக்ஷஸ வருஷத்து வூஶ்ரீக நாயற்று வூஷூ வக்ஷத்து ஏகாஉஶியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற உரோசணி நாள் மலாடாகிய ஜனநாத வளநாட்டு ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீஸ்வரம் உடைய நாய-
3. னார் திருகோயிலில் ஸ்ரீ ரூஷ்ர் ஸ்ரீ ஊஹெஸ்வரர் தேவகன்மி கோயிற் கணக்கர் இவ்வனைவரோம் ஆறைநாயகன் திருமண்டபத்து நிறைவற நிறைந்து குறைவறக் கூடி எழுந்தருளி இருந்து ஹாரஹூஜ மொசூத்து மாறாதென் உள்ளத்
4. திருந்தாரான அகோரசிவ முதலியார் மகன் என்னுடைய நாயனார்க்கு இத்திருக்கோயிலில் கண்காணிப்பணிகளிலே இன்னாயனார் இவர்க்குக்

காணியாக குடுத்தருளின பலமுதல் கண்காணிப்பணியும் இவர்க்கு மனையாகக் குடுத்தரு-

5. ளின திரும(ை)டவளாகத்துத் தெற்கில் திருவீதியில் ஆண்டிச்சியார் மனையாய் நம்பியார் திருஞானசம்பந்த பண்டிதர் கொண்ட மனைக்கு மேற்கும் உவச்சன் பெரிய உடையான் மனைக்குக் கிழக்கும் ஆக இதற்கு நடுஉட்பட்ட மனை ஒன்றும் மனைப்

6. படப்பையும் மேனோக்கின மரமும் கீழ் நோக்கின கிணறும் மற்றும் உள்ள சகல ப்ராப்திகளும் உரித்தாவதாகவும் இவரும் இவருடைய தம்பிமாரும் அனுபவித்துக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொண்டு சந்த்ராதித்தவரையும் அனுபவித்து விற்றும்

7. ஒற்றி வைத்துங் கொள்ளக் கடவார்களாகவும் இப்படி சம்மதித்துக் குடுத்தோம் என்னுடைய நாயனார்க்கு ஸ்ரீருத்ரர் ஸ்ரீமாஹேஸ்வரர் தேவகன்மிகள் கோயிற்கணக்கர் இவ்வனைவரோம் உ இவை முதலியார் அகோரசிவர் எழுத்து இவை நாயனார்

8. என்னுடைய நாயனார் எழுத்து இவை திருநீற்றுவீரர் எழுத்து இவை தடுத்தாட்கொண்ட நாயனார் எழுத்து இவை திருஞானசம்பந்த பிரமாராயர் எழுத்து இவை வளத்தார் எழுத்து இவை திருவேகம்பமுடையார் எழுத்து இவை இக்கோயில் கணக்கு

9. காணி உடைய நெடுவாசல் உடையான் பிச்சன் திருகாமீசரப்பிரியன் எழுத்து.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 44/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: 13 -ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 436/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/282
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 35
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் முன்மண்டபம் நுழைவுவாயில் இடப்புறம் வாயில் காவலர்(துவாரபாலகர்) சிலையின் பின் பக்கம்.

குறிப்புரை : கல்வெட்டின் பெரும்பகுதி புதிய கட்டுமானத்தில் அகப்பட்டுவிட்டது. திருக்காமீசுவரமுடையார் திருமுன்பு நந்தா விளக்கொன்று எரிக்க இக்கோயில் முப்பதுவட்டத்து காணியுடைய சிவபிராமணர் காவிரிப்பாக்கத்து கவுசிகன் ஒற்றிகொண்டானிடம் இரண்டாயிரம் அன்றாடு நற்காசுகள் பெற்றதையும், மேலும் நந்நா விளக்குக்காக பலரிடமும், சந்திவிளக்குகளுக்காக பலரிடம் 49 மாடுகள் பெற்றதையும் குறிக்கிறது.

Summary : On the wall behind the dvarapalaka image in the maṇḍapa. A record of the chōḻa king Tribhuvanachchakkaravattikaḷ Rājarājadēva. But in at the end. Records the gift of 2000 *kāsu* for one lamp and of 49 cows for seven other lamps to be burnt in the temple of Tirukkāmīśvaramuḍaiya nāyanār and subordinate shrines.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீஇராஜராஜ தேவ . . . [1]
2. துலாநாயற்று சுவாபவக்ஷத்து வசுகூடுயும் திங்கட்கிழமையும் பெற்ற . . . . .
3. டையார் காமீஸ்வரமுடையநாயநார் திருமுன் பெரிய ஒரு திருநுந்தா வி . .
4. ர்க்க கடவோமாக காவிரிப்பாக்கத்து கௌசிகன் ஒற்றிகொண்டான் (ப) . ட்ட . . .
5. ஜேந்திர ஸ்ரீஹராஜர் பக்கல் இக்கோயில் முப்பது வட்டத்து காணி உடைய
6. . . . . . ம் இற்றை நாளால் கைக்கொண்ட அன்றாடு நற்காசு உஆ இக்காசு இரண்டா . . .
7. ந்ராதித்த வரை எரிக்க கடவோமான திருநுந்தா விளக்கு ஒன்றும் . . . .
8. . . . . . . ம் கிடாரையன் பசு ௩௰௨ ம் வாணியன் எடுத்தபாதமுடையா . . .
9. பசு தொண்ணூற்று ஆறுக்கும் உடையார் திருமுன்பு எரிக்கும் திருநு . . . .
10. கூத்தாடுவார் திருமுன்பு எரிக்கும் திருநுந்தா விளக்கு ஒன்றும் சிறு . . . . .

11. டு வேளார் பசு ஏழும் கட்டிமாணி பசு ஏழும் வாதைமான் பசு ஏழும் வா . . . . .
12. நாட்டு வேளான் பசு ஏழும் மறுபடைகண்டன் பசு ஏழும் வன்னி முதே . . . . . .
13. கப் பசு நாற்பத்தொன்பதுக்கும் எரிக்கும் சந்தி விளக்கு ஏழும் ஆக திருநுந் . . . . .
14. க்கு ஏழு . . . . . .

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 45/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	12
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	---
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	437/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/283
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	36
அரசு	:	சோழர்			
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் முன்மண்டபம் நுழைவுவாயில் இடப்புறம் வாயிற் காவலர் சிலைக்குப் பின்புறம்.

குறிப்புரை : இக்கல்வெட்டு பிற்காலக் கட்டுமானத்தில் அகப்பட்டுள்ளது. சோழ அரசன் மூன்றாம் இராசராசன் காலத்தில் தொண்டைமான் தங்கை நாச்சி ஆறகளூர் திருக்காமீசுவரமுடையார் கோயில் பெரிய பேற்று முதலியாற்கு அமுதுபடி அளித்ததைக் குறிக்கிறது. இதே தொண்டைமான் தங்கை நாச்சியார் மூன்றாம் இராசராசன் காலத்தில் கொடை அளிக்கப்பட்ட செய்தி இவ்வூர் கல்வெட்டில் (ஊ.க.எண் 30) வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே இக்கல்வெட்டு மூன்றாம் இராசராச சோழனுடைய காலத்துக் கல்வெட்டு என்பது தெளிவு.

Summary : In the same place. A record in the 12th year of the chōḻa king Rājarāja dēva. The record is built in all around. It records the endowment by Nāchchi, sister of Toṇḍaimān for the food offerings to Periya-pēru mudaliyār in the temple of Tirukkāmīśvaramuḍaiyār at Āṛagaḻūr.

கல்வெட்டு :

1. ஜ தேவற்கு யாண்டு ௰உ வது ஆறகளூர் உடையார் திருக்கா . . . .
2. னார் கோயிலில் பெரியபேறு முதலியாற்கு அமுதுபடி . . . . . .
3. ண்டைமான் தங்கை நாச்சியேன் இன்னாயனார் . . . . . .
4. லில் . . ன்னிட முகவெட்டின நல்லஞானசம்பந்தன் எ . . . . .
5. பதினாறி என்னொபாதி பங்கு இரண்டும் இன்னாயனாற்கு
6. காணியாக கைக்கொண்டு நாள் ஒன்றுக்கு இருநாழி . . . .
7. சன்திராதித்தவரை செல்லக்கடவதாக குடுத்தேன் நாச்சியேன்

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 46/2022**

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: சகம் 1461பொ.ஆ.1539
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 433/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/279
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 37
அரசு	: விசயநகர்		
அரசன்	: அச்சுத்தேவ மகாராயர்		

இடம் : திருக்காமீசுரமுடையார் கோயில் முன்மண்டபம் வடக்குச் சுவர் அடிநிலை.

குறிப்புரை : இக்கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளது. ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் திருக்காமீசுரமுடைய தம்பிரானார் கோயில் ஆறைநாயகர் மண்டபத்தில் பல்வேறு கோயில் அதிகாரம் பெற்றவர்களும் கூடி இருந்து ஆற்றூர் நாட்டுவேளாருக்கு மாடாபத்தியக் காணியும், கோயில் ஊழியமும் வழங்கியதைக் குறிக்கிறது.

Summary : In the same place. A damaged record of the Vijayanagara king Achyuda dēvarāya-Mahrayar in Saga era 1461. The record is mutilated and damaged. It records the grant of *māḍapattya-kāni* and the administration of the temple (*koil ūḻiyam*) along with the rights and previlages attached probably to Āṟṟūr-nāṭṭu-vēḻār, by the several authorities of the temple acting on behalf of the God Tirukkāmīśvaramuḍaia-tampiraṉār of Āṟagaḻūr in Āṟṟūr -kūṟṟam in Magadaimaṇḍalam in Malāḍu alais Jaṉanātha valanāḍu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ௨௱ ௨ஹா௨ணுலேசுரன் அச்சுத்தேவமகாராயர் பிறுதிவி ராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாத்தம் ௲௪௱௬௰௧ ௨ இதன்மேல் செல்லா நின்ற விகாரி ஸ°வசஃஸரத்து கன்னி நாயற்று பூறுவ பக்ஷத்து ஸவ்மியும் சுக்கிரவாரமும் மூல நக்ஷத்ரமும் பெற்றநாள் மலாடாகிய செனநாத வளநாட்டு மகதைமண்டலம்

2. ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் திருக்காமீசுரமுடைய நாயனார் திருக்கோயில் ஆறைனாயக மண்டபத்தில் நிறைவற நிறைந்து குறைவறக்கூடி சண்டேஸ்வரனாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செயல்படிக்கு காணிக்குடி திம்மராசயன் முத்தரை மனுஷன் கோயில் அதிகாரம் கா..... ப்புரம் கோயில் சீபன்௨ா–

3. யேசுரர் சீ ...... தானத்தார் ஆன உ . . வித்த .... திருஞானசம்பந்த பண்டிதரும் பெரியபெருமாள் ஆன கங்காணி ஆண்டாரும் கோயில் கணக்கு திருக்காமீசுரப்பிரியனும் வ. . . . உடையான் அம்பல .... செல்வன்திநாதர் ஆற்றூர் நாட்டு வேளாற்கு மாடாபத்தியக் காணி நாள் முப்பதும் உபயம்

பண்ணிக் குடுத்தபடி இ . . . காணி ஆட்சிக்கு எங்களுக்கு அ-

4. ற்ற இறையிலி சுவந்திரம் பிரமாண்டம் காணி . . . . . . க்கிய மரம் கீழ் நோக்கிய கிணறு கோயில் சுவந்திரம் உண்டானதும் பெற்று கோயில் ஊழியமும் எங்களுக்கு அற்றபடி பண்ணி சன்திராதித்தவரையும் தாமும் தம்மிட வற்கத்தாரும் இந்த மாடாபத்தியக் காபவித்துச் சுகத்திலே இருக்கவும்.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 47/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 7
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: ---
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 455/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/301
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 38
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : சோளீசுவரர் கோயில் வடக்குக் குமுதப்படை.

குறிப்புரை : ஆறகளூர் தாயிலும் நல்ல சோழீசுவரமுடையார்க்கு குமரந்தை கருவூர்தேவன் என்பவன் கீழ்மகளூர் மனவனேந்தலிலும், உலகங்காத்த பெருமாளேந்தலிலும் மூவாயிரம் குழி நஞ்சை நிலத்தை அனைத்தாயங்களும் இழக்கத் திருநாமத்துக் காணியாக அளித்துள்ளான்.

Summary : North wall base of the temple. This records a royal order addressed to Vilāḍarāyar and Puravariyār instructing to note that he had chosen to give up his entilitlement to *po̱nvari, kāsāyam, kāttikaip-pachchai, nallerudu, narp-pasu* and such tax-incomes (ayam) in respect of 3000 *kuḻi* of land in two plots, called ma̱navanental and Ulakānkkātta-perumāl-endal in Kīḻmagalūr granted to God Tayilu(m)nalla-chōḷsvaramuḍaiya nāyanār of Āṟagaḻūr by Kumarandai-kavur-deva̱n. The land concerned was Tirunāmattu-kāni-irai-lli. The order was attested by Vānātharāya̱n and Viluppatarayan.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விலாடராயரும்புரவரியாரும்செய்யக்கடவபடிஆறகளூர்உடையார் தாயிலும்நல்லசோளீஸ்வரமுடையநாயனார்க்குகீழ்மகளூர்மனவனேந்தலிலும் உலகங்காத்த பெருமாளேந்தலிலும் குமரந்தைகயூர்த்தேவன் இந்நாயனாற்கு ஏழாவது
2. திருநாமத்துக்காணியாக குடுத்த நன்செய் நிலத்துக்குழி மூவாயிரமும் திருநாமத்துக்காணி இறைஇலியாக பொன்வரி காசாயம் காத்திகைப்பச்சை நல்லெருது நற்பசு உள்ளிட்ட அனைத்தாயமும் இழக்க திருநாமத்துக்காணி இறைஇலியாக சந்திராதித்தவற் குடுத்தோம்
3. இப்படி கணக்கில் நிறுத்திக் குடுப்பதே உ இவை வாணகோவரையன் னெழுத்து உ இவை விழுப்பாதராயனெழுத்து உ

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 48/2022**

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 9
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: ---
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 454/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/300
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 39
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : சோளீசுவரர் கோயில் வடக்குக் குமுதப்படை.

குறிப்புரை : விலாடராயர்க்கும், புரவுவரியாருக்கும் அரசருடைய கட்டளை. இவர்கள் குறுக்கைபாடி நான்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய், கரைப்புன்செய் நத்தப்புன்செய் , ஏந்தல்பற்று மற்றும் பொன்வரி முதலான வரிகள் , தறியிறை முதலான இறைகள் அனைத்தையும் ஆறகளூர்த் தாயினும் நல்ல சோழீசுரமுடையார்க்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாக (வைப்புநிதியாக) விட்டு கல்லில் பொறித்து திருச்சூலக்கல் நாட்டக் கட்டளையிடப்பட்டுள்ளது.

Summary : In the same place. It records the royal order addressed to Vilāḍarāyar and Puravariyar (offical in change of taxes) intimating the village Kurukkaip-pāḍi viz, levis, *ponvari, kāsāyam, kāttikaip-pachchai, nallerudu, ūsivāsi*, matiru sānthi, and magamai had been assigned as dēvadātnairai-ili for the worship and maintenance of the premises of God Tayilumnall a chōḷś-varamuḍaiya nāyanār. The record was attested by officers of the above inscription no. 38.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விலாடராயரும் புரவரியாரும் செய்யக்கடவபடி குறுக்கைபாடி நான்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய் கரைப்புன்செய் நத்தப்புன்செய் ஏந்தல் பற்று
2. பொன்வரி காசாயம் காத்திகைப்பச்சை நல்லெருது நற்பசு ஊசிவாசி மாதிருசாந்தி உள்ளிட்ட (அனைத்)தாயங்களும் தறிஇறை மனைஇறை செக்கிறை ஆட்டிறைப்பாட்டம்
3. மகண்மையும் உட்பட ஆறகளூர் உடையார் தாயினும் நல்ல சோளீஸ்வர முடைய நாயனார்க்கு ஒ[ன்பதா]வது பங்கூனி மாதத்து எட்டாந்தியதி முதல் பூசைக்கும் திருப்பணி-
4. க்கும் உடலாக தேவதான இறையிலியாக இட்டோம் இப்படி சந்திராதித்தவரையும் செல்வக[டவதா]க கற்றளியிலே கல்லும் வெட்டி ஊர் நான்கெல்லையிலும் திரு-

5. ச்சூலஸ்தாபனமும் பண்ணிக்கொள்ளக் கடவதாகவும் சொன்னோம். இப்படி கணக்கிலும் நிறுத் ... ... ப்பதே இவை வாணகோவரையன் எழுத்து இவை விழுப்பாதரா-

6. யன் எழுத்து.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 49/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: சகம்1441,பொ.ஆ.1519
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 449/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/295
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 40
அரசு	: விசயநகர்		
அரசன்	: கிருட்டிணதேவராயர்		

இடம் : கரிவரதராசப் பெருமாள் கோயில் உண்ணாழிகைக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : மகதைமண்டலத்து மலாடான சனனாத வளநாட்டு ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் பெருமாள் கரியபெருமாளுக்கு தேவியாக்குறிச்சி பண்டைக்(பூர்வம்) கால முதல் திருவிடையாட்டமாக இருந்து வந்தது. அரசருடைய முகவர்களாக (ராசகாரியம்) இருந்தவர்கள் அதனைத் தவறாகப் பயன்படுத்தினர். அதனால் கோயிலார் விசயநகரம் சென்று அரசனிடம் முறையிட்டனர். அமரம் திம்மரசர் அரசனுடைய ஒப்புதல் பெற்று திருவிளையாட்டமான தேவியாக்குறிச்சியை முற்றூட்டாகச் (சர்வமான்யம்) செய்து, இவ்வெம்பெருமான் கோயிலில் பூசை செய்யும் உரிமையை ஆத்ரேய கோத்திரத்து வைகாநச சூத்திரத்து திருமலையப்பர் வேங்கடத்துறைவர் மகன், கரியபெருமாள் பெரியகரியவர் மகன் வென்று மாலையிட்ட பெருமாள் ஆகிய மூவருக்கும் அளித்து பச்சைவடம், குல்லா குதிரைக்குடை கொடுத்துச் சிறப்பு செய்து இவர்கள் நிருவாகத்துக்காக இக்கோயில் திருவிடையாட்டமான கல்லைக்குறிச்சிப்பற்று மற்றும் தேவியாக் குறிச்சி நன்செய்யில் 900 குழி நிலம் அளித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டின் கடைசி வரியில் ஸ்ரீ ஸ்ரீ எனத் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

Summary : In the east wall of the Kariyavaradarājapperumāl temple of the same village. A record of the Vijayanagara king Krishādeva Maharaya in Saga era 1441. Register that three sthanikas of the temple of perumāḷ kariyavar went on a deputation to the king, to Vijayanagara and complained of the injustice done by the authorities *(rayagariyam)* stationed at Dēviyākkuruichchi, a village belonging to the temple. The chief amaram Timmarasar introduced them to the king, got their grievances redressed, presented them each with a garland a head dress, a horse and an umbrella, and granted 900 *kuḷi* of wet land at Po<u>n</u>parappi and at Dēviyākkurchchi, as sarvamā<u>n</u>ya gift.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீமன்மஹாமண்டலேஸ்வர ஹரியராயவிபாடந் பாஷைக்கு தப்புவராயர் கண்டந் மூவராயர் கண்டந் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதாந்

வூெவ்வு ஊக்ஷிண உத்தர வஸ்ரீஉ வகுவமுதஹாதிவதி ராஜாயி ராஜநு ராஜ வரமெஸ்வரநு ஸ்ரீகூரஷ்ண ஔெவ ஊஹாரராயர் வூரயிவிராஜூ‍ஃ பண்ணி அருளாநின்ற ஸகாவூஃ தூசாசயக இதன் மேல் செல்லா நின்ற வூஊதி ஸ‌ஂவகஸரத்து

2. ஊிகுூந நாயற்று வூெவ்வு வக்ஷத்து தூயொஊஸியும் ஸூகூவாரமுஃ பெற்ற சுநூராய நாள் மலாடாகிய ஜநநாய வளநாட்டு ஊகதை மண்டலத்து ஆற்றூர்கூற்றத்து ஆறகளூர் பெருமாள் கரியவற்கு வூெவ்வுஃ நடந்துவருகிற திருவிளையாட்டமாந தேவியாகுறிச்சிக்கு அங்கிருக்கிற ராசகரம் அகிதம் பண்ணுகையில் யிது காரியம்மாக யிங்கே விஜயநகரத்து (யி)க்கோயில் ஷூா நிகர் வருகையில் கூரஷ்ஔெவமஹாராயர் வாசலில் ஸ்ரீமது அமரம் திம்மரசர்

3. ஷூாஊி பாதமும் காண்பித்து திருவிளையாட்டமாந ஔெவியாக் குறிச்சியும் ஸவ்வுமாஞூஃ பண்ணி குடுத்து யிக்கோயில் யிவ் வெம்பெருமான் ஷூா நிகர் அவ்வுநா விஹவ காணிய்யை ஆதூகொத்ரத்து வெவாந ஷூெதூத்து வென்று மாலையிட்ட பெருமாள் வாதூநு திருமலையப்பர் வேங்கடத்துறைவர் கரியபெருமாள் பெரியகரியவர் வாதூநு வென்று மாலையிட்ட பெருமாள் யிம்மூவற்கு பச்சைவடம் குல்லாவும் குடுத்து

4. குதிரை குடையும் குடுத்து நமக்கு ஷூாஊி பாலித்தருளின சீர்மையான கல்லைகுறிச்சிப் பற்று பொன்பரப்பி ஏரிகீழ் நஞ்சை நிலம் மிவ் வெம்பெருமாந் திருவிளையாட்டம் குழித்த யிதில் யிந்த மூன்று நிர்வாகத்துக்கும் ஷூாநஊஞூஃ யிறையிலி ஆக

5. குடுத்த குழி ௩௱ யிந்த முன்னூறு குழியும் திருவிளையாட்டம் தேவியாகுறிச்சி ஏரிகீழ் நஞ்செய் நிலத்தில் மூன்ற நிறுவாகத்துக்கும் ஷூாந ஊஞூஃ யிறையிலியாகக் குடுத்த குழி ௬௱ ஆக துளாயிரமும் ஸவ்வுஊஞூஃ யிறை யிந்த ஸவ்வுஊஞூஃ யிறை

6. யிலி ஆக குடுத்தோம் யிந்த ஸவ்வுஊஞூ யிறையிலி யிவர்களும் யிவர்கள் வாதூ களகாதிகளும் சூவஞூ கூவுகாலஊும் அனுஹவித்துக் கொண்டு வரக் கடவர்கள் ஆகவும் அமரமாந திம்மரசையன் எழுத்து

7. ஸ்ரீ ஸ்ரீ.............உ [1]

---

1. ஸ்ரீ ஸ்ரீ என்பது தெலுங்கு எழுத்தில் உள்ளது

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 50/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	சகம் 1446,பொ.ஆ.1524
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	451/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/297
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	41
அரசு	: விசயநகர்			
அரசன்	: கிருட்டிணதேவராயர்			

இடம் : கரிவரதராசப் பெருமாள் கோயில் உண்ணாழிகை தென்சுவர் குமுதப்படை.

குறிப்புரை : விசயநகர அரசன் கிருட்டிணதேவராயர் காலத்தில் (சகம் 1446 பொ.ஆ. 1524) திருமலைநாயக்கர் செயலரான (காரியத்துக்கு கர்த்தரான) நஞ்செயநாயக்கர் தனக்குத் திருமலைநாயக்கர் கொடுத்தருளிய தென்கரைச் சீர்மையில் நரையூர் கூற்றத்து ராகவேசுவரன் வாய்க்காலில் மேலைவெட்டி நஞ்சை நிலத்தில் ஆயிரங்குழி நிலத்தை கரியபெருமாளுக்கு பூசனை செய்ய அடியார் (பூசிப்பார்) எண்மரை அமர்த்தி அவர்களுடைய திருவமுதுக்கும் (பிரசாதம்) அமுது கட்டளைக்கும் இறையிலியாக அளித்தான்.

Summary : South base of the central shrine in the same temple. A record of the Vijayanagara king Krishnadēva Mahārāya in Saka year 1446. The record gives a genealogy the king from Tammaiyarāya. Registers a grant of eight Emperumānaḍiyār for service in the temple of Kariya perumāḷ and a provision of 1000 *kuḷi* of wet land for their maintenace, by a certain Mirtyuñjaya-Nāyaka for the merit of his master Tirumalai Nāyaka.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ ஊநு ஊஹாஊணூடுெஸ்வுரநு ரராசாதிரராசநு ரராஜவரமெஸ்வுரநு ஸ்ரீஊநு வூெவ்வு ஓக்ஷிண வஸ்ூஉ உத்தூர வகூஸஊூதூாதிவதி தஉஉரராய ஸ்ரீவீரவூரூாவ* நரசாணாயக்க *வீரஹொமவ* சந்ராய *ஸ்ரீகூரூஷ்ணெவ ஊஹாரராயர் வூரயிவிரராஜூூ* பண்ணி அருளாயி நின்ற *ஸகாவூூ சூசாசயிகூ* இதன்மேல் செல்லாநின்ற தாருண *ஸம்வகூஸரத்து* மகரநாயிற்று *ஷகாஉஸியுூ*

2. *ரெவதியும்* பெற்ற *சுமூ* வாரத்து நாள் மலாடாகிய செநநாத வளநாட்டு மகதை மணடலத்துஆற்றூர் கூற்றத்து ஆறகழூ[ர்] பெருமாள் கரிய பெருமாளுக்கு திருமலை நாயக்கர் காரியத்துக்கு கடவராயிரறு[க்கும்] நஞ்செயநாயக்கர் சுவாமி திருமலைநாயக்கர் நமக்குப் பாலித்தருளின தென்கரை சீர்மையில் நரையூர் கூற்றத்து *ராகூவெஸ்வு* ரன் காலில் மேலை வெட்டி நஞ்சை நிலத்தில் திருமலை நாயக்கர்

3. தன்மமாக இவ்வெம்பெருமானுக்கு எட்டுபேர் எம்பெருமானடியாரையும் விட்டு இவர்களுக்கு *வூஸாதத்துக்கு* அமுதுபடிக் கட்டளைக்கும் இவர்களுக்கு இறை[யி]லிக்கும் ஆக சங்கிறம *புணூ* காலத்தில் *தாரா வூெவ்வுமாக*

சறுவமானியமாக விட்ட நிலம் குழி சூ இந்த நிலம் ஆயிரங்குழிக்கும் அணைவரி நீர்வரி காணிக்கை நாட்டு வெச்சம் விலாடம் பழவரி புதுவரி மற்றும் எற்பேற்ப

4. ட்ட சகல பிராப்தியும் நீங்கல[ா]க சறுவமானியமாக கட்டளையிட்டு விட்டபடியாலே இந்த நிறையத்திலே ஆசந்த்ரா தித காலமும் அனுபவித்துவர கடவதாகவும் இந்த தம்மம் யதொருவர் பரிபாலனம் பண்ணினவர்களுக்கு அனந்த புண்யம் பண்ணின ஹலூழ உண்டாகவும் இதுக்கு அகிதம் பண்ணினவர்கள் கங்கை கரையிலே காராம் பசுவை கொன்ற பாவத்திலே போக கடவதாகவும் உ ஸ்ரீஹஸ்தூ சிதம்பர . . . . . (தொடர்ச்சி விடுபட்டுள்ளது.)

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 51/2022**

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	18
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	---
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	453/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/299
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	42
அரசு	:	பாண்டியர்			
அரசன்	:	சடையவர்மன் சுந்தரபாண்டியன்			

இடம் : கரிவரதராசப்பெருமாள் கோயில் கமலமங்கைத் தாயார் முற்றம் (சன்னதி) வடசுவர் குமுதப்படை.

குறிப்புரை : சடையவர்மன் சுந்தரபாண்டியனுடைய பதினெட்டாவது ஆட்சியாண்டில் ஆறகளூரில் உள்ள வயிராவாண ஈசுவரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இட்ட ஆணை. மகதை மண்டலத்துத் தொழுவூர் பெரிய ஏரி வாரப்பற்றில் ஆயிரம் குழி நஞ்சை நிலத்தை வயிராவண ஈசுவரமுடையார்க்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் பொன்வரி காசாயம் மற்றும் அனைத்தாயங்களும் உட்பட தேவதான இறையிலியாக அளித்ததைத் தெரிவிக்கிறது.

Summary : East wall of the same temple. Arecord in the eighteenth year of the Pāṇḍiya king Jadāvarman alais Tirubuvanacchakkaravartikal Sundara-Pāṇḍiya dēva, records gift of 1000 *kuḷi* ḷof land below the tank at Toluvar for worship and repairs in the temple of Vairāvaṇa-Iśvaramuḍaiya - Nāyanār at Āṛagaḻūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய ஷெவற்க்கு யாண்டு பதிநெட்டாவது ஆறகளூர் உடையார் வயிராவண ஈஸ்வரமுடைய நாயனார் கோயிலெ தாநத்தாற்கு மகதமண்டலத்து தொழுவூர் பெரிய ஏரி வாரப்பற்று
2. நன்செய் நிலத்து வ . . . . . ன. . த . . ன்னாயனார் பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாக ஆயிரம் குழி பொன்வரி உள்ளிட்ட காசாயவற்கமும் அனைத்தாயங்களும் உட்பட தேவதான இறையிலியாகத் தன்தோம்
3. இந்நிலம் அரையும் . . . . . . நிலத்தில் . . . . . கைக்கொண்டு இந்தநாள் முதல் சந்திராதித்தவரை செல்வதாக நான்கெல்லையும் திருச்சூலத்தாபனம் பண்ணி கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க
4. இவை வாண(கோவரையன்) எழுத்து இவை திருவெழுத்து ரூ௵ ௨

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 52/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	சகம்1444பொ.ஆ.1522
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	450/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/296
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	43
அரசு	: விசயநகர்			
அரசன்	: கம்மையராயர்			

இடம் : கரிவரதராசப் பெருமாள் கோயில் உண்ணாழிகை கிழக்குச் சுவர்.

குறிப்புரை : நரசாநாயக்கர் திக்குவிசயம் செய்யவேண்டும் என்று அவர் மகன் அம்மணநாயக்கர் ஏற்பாடு செய்தார். அதற்குத் தன்மமாக தம்மைய நாயக்கர் இக்கோயில் அர்ச்சனைக் காணியுடைய பிராமணர்களான ஆத்ரேய கோத்திரத்து வைகானச சூத்திரத்து திருவனந்தாழ்வார் மகன் கரியவற்கும் வென்று மாலையிட்ட பெருமாள் மகன் திருமலையப்பன் உள்ளிட்டார்க்கும் வேங்கடத்துறைவர் மகன் சிறுக்கரியவர் உள்ளிட்டார்க்கும் ஆறகளூர் பிடாகையான சிற்றேரிக் கீழ் இவ்வெம்பெருமான் திருவிடையாட்டமான நன்செய் நிலம் 450 குழியில் இவர்களுக்கு திருவாராதனத்துக்கு 200 குழியும், இக்கோயில் திருவிடையாட்டமான கண்டமாத்தான் புஞ்சை நிலத்திலும், தாதன் ஏரிக்கீழ் ஏந்தலில் திருத்திப்பெறும் குளமும் மானியமாக அளிக்கப்பட்டது.

Summary : In the same place. A record of the Sāḷuva king Tammayarāya son of Sāḷuva Narasiṅgarāya (the founder of the Sāḷuva dynasty) in Saka year 1424. A certain Tammayya-Nāyaka in the name of his master Kumarswāmy Ammaṇa Nāyaka granted land at Sir̤ṟeri, a hamlet of Āṟagaḻūr to three worshipers in the temple of Perumāl Kariyavar who were in the enjoyment of the privilege called archanāvibhavakāṇi for the victory of Narasa-Nāyaka.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்டலேஸ்வரந் அரியராயவிபாடந் பாஷைக்கு தப்புவராய ராயர் கண்டந் மூவராயர் கண்டந் கண்ட நாடு கொண்டு கொண்டநாடு கொடாதா(ந்) பூர்வ்வ தக்ஷிண பஸ்சிம உத்தர சமுத்ராதிபதி கெஜவேட்டை கண்டருளி ஈழமும் திரைகொண்ட
2. இராசயிராஜந் [ராஜ] பரமேஸ்வர ஜகசேகரராமந் ராயர் சாளுவ நரசிங்கராயர் குமாரர் கம்மையராயர் ப்ருதிவிராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் தூசாசயிச இதன்மேல் செல்லாநின்ற ருதிரோத்காரி ஸம்வத்ஸரத்து ஸிம்ஹ நாயற்று பூர்வ்வ பக்ஷத்து தசமியும் ஸோம வாரமும் பெற்ற
3. சோதி நாள் மலாடாகிய ஜனநாய வளநாட்டு மகதை மண்டலத்து ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் பெருமாள் கரியவர் கோயிலுக்கு சுவாமி நரஸாணாயக்கர்

உடையார் திக்கு விஜயம் பண்ணவேணும் என்[றி]வர் குமாரர் சுவாமி அம்மண நாயக்கர் யன்மம் ஆக அம்மண தம்மைய நாயக்கர் இக்கோயில் அஜ்ஞூநா விஹவ காணியுடைய

4. ஆடுதை௵ மொகத்து வெவாநவ ஸூசுதூத்து திருவனந்தாழ்வார் வூசுதூநு கரியவற்கும் வென்று மாலையிட்ட பெருமாள் வூகநு திருமலை அப்பன் உள்ளிட்டாற்கும் வேங்கடத்துறைவார் வூசுதூநு சிறுக்கரியவர் உள்ளிட்டாற்கும் மான்னியம் பண்ணிக் குடுத்தபடி இம்மண்டலத்து இக் கூற்றத்தில் இவ்வூர் பிடாகையான சிற்றேரி

5. ஏரிக்கீழ் நஞ்சை நிலத்திலே இவ்வெம்பெருமான் திருவிடை ஆட்டம் சறுவமானிய இறைஇலி வாரப்பற்று நிலம் சாருமு இதில் இவர்கள் மூன்று பேற்கு திருவாராய நத்துக்கு இறைஇலியாக சேத்த நிலம் ஊ இதுவும் திருவிடைஆட்டம் கண்டமாத்தான் புஞ்சை நிலத்தில் .... வணை ஏற... மானியமும் தாதன் ஏரிகீழ் கொ....க்க ராயநு ஏந்தல் கீழ் நஞ்சை நிலத்திலே திருத்தி பெறும்

6. குளம் இம் மருவாதிக்கு சறுவமானியம் ஆக சநூாதித்தவரையும் அனுபவித்துவரக் கட[வர்]களாகவும் இந்த தன்மத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் மங்கை கரையிலே காராமு பசுவை கொன்ற பாவத்தி[லே] போக கட[வர்]களாகவும் இவை அம்மண நாயக்கர் எழுத்து

7. திருவெழுத்து உ தூஞூமு உ

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 53/2022***

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	13
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	13 -ஆம் நூற்றாண்டு
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	448/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/294
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	44
அரசு	:	பாண்டியர்			
அரசன்	:	சுந்தரபாண்டியன்			

இடம் : கரிவரதராசப் பெருமாள் கோயில் உண்ணாழிகை கிழக்குச் சுவர்.

குறிப்புரை : ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் கரியபெருமாள் கோயில் திருவடிபிடிக்கும் நம்பிமார்க்கும், சிறீவைணவக் கண்காணி செய்வார்களுக்கும், அரசனது ஆணை. அண்ணாழ்விக்கு (அண்ணன்) கிரகணசாந்தி செய்யக் கரியவர் கோயில் சிங்கப்பெருமாளுக்கு (சிங்கர்) அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நாள்வழி நிமந்தங்களுக்கும் திருப்பணிக்கும் உடலாக (முதலீடாக) பொன்பரப்பியான இராசநாராயணநல்லூர் ஏரிக்கீழ் வாரப்பற்று நன்செய் நிலத்து முதல்தரத்தில் ஆயிரங்குழியும் அதனால் வரும் பொன்வரி முதலான அனைத்தாயங்களும் இறையிலி திருநாமத்துக் காணியாக அளிக்கப்பட்டது.

Summary : In the same place. This inscription records a royal order addressed to tiru-vaḍipiḍikkum nambimār and Sri Vaisṉavakkaṇkāṇi cheyvār of the temple of Kariya-Perumāḷ in Āṟagaḻūr in Āṟṟūrkkūṟṟam, intimating them that he has granted as tirunāmattukkāni-irai-ili land to be held directly by the God along with the enititlement to collect and enjoy the proceeds the levies *(āyam)* poṉvari, kāsāyam, karttikaippachchai, *ūsi-vāsi,* maturi-santi, nallerutu, narppasu, vēli-erudu-kāṉikkai, naṭṭu-viniyōkam, āḷamañji-tēvai, 1000 *kuḷi* of first grade wet land in the varapparru under the reservoir in Poṉparappi alais Rāja-nārayaṇa nallur for the food offerings (amudu-padi) and decoration *(satthu-padi)* of the deity Singer in the temple, for propitiation in view of the eclipse in the month of Puraṭṭadi. In the year 13th of the kings elder brother (aṇālvi) Sundrapāṇḍiya dēvear. Attested by Ādittaṉ Gaṉapathi-āḻvāṉ alais Vāṇādarayaṉ of Kappalur alias Ulagalanda chōḻa nallur in Muttu(rru)kkūṟṟam in Pāṇḍimaṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர்க் கரியபெருமாள் கோயிலில் திருவடிபிடிக்கும் நம்பிமார்க்கும் ஸ்ரீவெஷ்ணவக் கண்காணி செய்வார்களுக்கும் இக்கோயில் சிங்கர்க்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நித்த நிமந்தங்களுக்கும்
2. திருப்பணிக்கும் உடலாக அண்ணாழ்வி சுந்தரபாண்டிய தேவர்க்குப் பதின் மூன்றாவது புரட்டாதி மாதத்தில் ௲ஹண ஶாந்தீமாகப் பொன்பரப்பியான

இராசநாராயணநல்லூர் ஏரிகீழ் வாரப்பற்று நன்செய் நிலத்தில் முதல் தரத்தில் தடி சோ ஆயிரங்குழி பொ-

3. ன்வரி காசாயங் காத்திகைப்பச்சை ஊசிவாசி மாதிருசாந்தி நல்லெருது நற்பசு பெலி எருது காணிக்கை நாட்டு வினிஓகம் ஆளமஞ்சி தேவை உட்ப்பட்ட அனைத்தாயங்களும் உட்பட்ட இந்நாள் முதல் திருநாமத்துக் காணி இறைஇலியாகத் தந்தோம் இப்படிக்கு இவ்வோலை

4. பிடிபாடாகக்கொண்டு இந்நிலத்தில் நான்கெல்லையிலும் திருவாழிக் கல்லும் நாட்டிக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொண்டு சந்த்ராதித்தவரையும் திருநாமத்துக்காணி இறையிலியாக அனுபவிக்க இப்படிக்கு இவை பாண்டிமண்டலத்து முத்துக் கூற்றத்துக் கப்பலூர் ஆன உலகள-

5. ந்த சோழநல்லூர் ஆதித்தன் கணவதி ஆழ்வானான வாணாதராயன் எழுத்து திரு எழுத்து [illegible]

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 54/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: ---
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 446/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.XXVIII/292
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 45
அரசு	: வாணர்		
அரசன்	: வாணகோவரையன்		

இடம் : கரிவரதராசப் பெருமாள் கோயில் உண்ணாழிகை வடசுவர்க் குமுதப்படை.

குறிப்புரை : ஆறகளூர் கரியபெருமாள் கோயில் திருவடிபிடிப்பார்க்கும் சிறீபண்டாரிகளுக்கும் சிறீவைணவர்களுக்கும் வாணகோவரையன் அளித்த ஓலை. இக்கோயில் திருநாமத்துக்காணியான காசாரன் பற்றான செயதரச் சதுர்வேதி மங்கலத்துக் கால்வழி காணிப்பற்றாக அளித்த நன்செய் நிலம் 3770.75(மூவாயிரத்தெழு நூற்றெழுபதே முக்கால்) குழியும், கரைப்புன்செய் நிலம் 7115 (ஏழாயிரத்தொரு நூற்றொரு பத்து அஞ்சு) குழியும் அவற்றில் உள்ள 14 இலுப்பை மற்றும் மாமரங்களும் முறையாக அனுபவியாமல் இருந்ததால் அரசனது நான்காம் ஆட்சியாண்டு பங்குனி மாதம் முதல் இவ்வெம்பெருமானுக்குத் திருநாமத்துக் காணியாகக் கொண்டு வீரமாகதன் பெருவிலையாக விற்று பண்டாரத்தில் சேர்த்தனர்.

Summary : North wall of the same temple. Records an order of Vāṇakōvaryan addressed to the tiuvaḍi-pidippar, Sri pandārigaḷ and Sri vaishṉavak-kānikkai ceyvār of the temple of Kariyaperumal of Āṛagaḻūr with regard to the tirunāmattuk-kāni of 3770.75 *kuḷi* of wet land and 7115 *kuḷi* of araip punchey land and 14 iluppai trees and one mango tree, in the kāṇipparṟu adjacent to the channel in Kasaranpaṭṭu alais Jayadharach caruppēdi maṇgalam, a tax free tiruviḍaiyāṭṭam of the above said God allotte in several individual who however were not managing the lands and making magadhmap peruvilai and 33,354 *kāsu* was collected at the rate of 6 *kāsu* (per *kuḷi*) of wet land and 2 *kāsu* per *kuḷi* of karaip-punchey land. These proceeds were taken in to his treasury (charakku) by the chief?

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வாணகோவரையன் ஓலை ஆறகளூரில் கரியபெருமாள் கோயில் திருவடி பிடிப்பாரும் ஸ்ரீபண்டாரிகளும் ஸ்ரீவெஷ்ணவக் கண்காணி செய்வார்களும் கண்-

2. டு இவ்வெம்பெருமான் திருவிடையாட்ட இறையிலி காசாறன்பட்டான செயதரச் சருப்பேதிமங்கலத்து கால்வழி காணிப்பற்று ஏந்தலிலும் கரைப்புன்செயிலு-
3. ம் மாதுயாதித்தன் அனுபவித்த பேர்பெரி செல்வநம்பி பற்று கரைப்புன்செய் குழி ஆயிரத்து முன்னூற்று அறுபத்து ஒன்றேகால் இன்னிலத்து இலுப்பை மாமரமும்
4. நன்செய் குழி எழுநூற்று அறுபத்தாறு ஆட்கொளவந்தான் பெருமாள் பற்று நன்செய் குழி நூறு ஆக நன்செய் குழி எண்ணூற்று எழுபத்தாறு கரைப்புன்-
5. செய் குழி ஆயிரத்து முன்னூற்று அறுபத்து ஒன்றேகால் இலுப்பை மாமரமும் அரங்கன் அனுபவித்த சாபொ தில்லைநாயகநம்பி பற்று நன்செய் குழி நாநூற்று நாற்பத்-
6. தேழரை கரைப்புன்செய் குழி அஞ்ஞூற்று எழுபத்தொன்று சாபோ பெரியநாயக நம்பி பற்றுக் குழி நூற்று முப்பதேகால் ஆக நன்செய் குழி அஞ்ஞூற்று எழுபத்தெழே முக்கால்
7. கரைப்புன்செய் குழி அஞ்ஞூநூற்று எழுபத்தொன்பது தேவப்பெருமாள் அனுபவித்த சாபோ திருக்காமீசுரமுடையான் பற்று நன்செய் குழி இருநூற்று
8. எண்பது கரைபுன்செய் குழி இருநூற்றுத் தொண்ணூறு சாபோ தில்லை நா(ய)க நம்பி பற்று கரைப்புன்செய் குழி எண்பத்துநாலு ஆக நன்செய் குழி இருநூ-
9. ற்று எண்பது கரைப்புன்செய் குழி முன்னூற்று எழுபத்து நாலு விசலூரிலிருக்கும் ஸ்ராஹூணரில் திருக்காமன் அனுபவித்த சாபோ சாந்தனுடையான் ப-
10. ற்று நன்செய் குழி நானூற்றொருபத்து அஞ்சேகால் கரைப்புன்செய் குழி ஆயிரத்தறுநூற்று அறுபத்துநாலேமுக்கால் இன்னிலத்து இலுப்பை மாமரமும் சோதி அ-
11. னுபவித்த சாபோ தில்லைநாயகநம்பி பற்று நன்செய் குழி நூற்றுஅறுபத்தாறு கரைப்புன்செய் குழி எண்ணூற்று ஆறரை சாபொ அணுக்கநம்பி பற்று நன்செய்
12. குழி நூற்றொருபத் தொன்றேகால் சாபோ வண்டுவராபதி பற்று நன்செய் குழி முன்னூற்று முப்பத்து நாலேகால் சாபோ சிங்கப்பெருமாள் பற்று கரைப்பு-
13. ன்செய் குழி தொளாயிரத்து இருபத்து ஏழரை இன்னிலத்து இலுப்பை மாமரமும் நன்செய் குழி அறுநூற்று ஒருபத்து ஒன்றரை கரைப்புன்செய் குழி ஆயிர-
14. த்து எண்ணூற்று இருபத்துநாலு இலுப்பை மாமரமும் உடையான் அனுபவித்த சாபோ பொன்னம்பலநம்பி பற்று நன்செய் குழி நானூற்றொருப-

15. தே கால் கரைப்புன்செய் குழி ஆயிரத்து முன்னூற்றொருபத்திரண்டு ஆக நன்செய் குழி மூவாயிரத்து ஒரு நூற்று எழுபதே முக்கால் கரைப்புன்செய் குழி

16. ஏழாயிரத்து ஒருநூற்று ஒருபத்து அஞ்சு இன்னிலத்து இலப்பை மாமரம் பதினாலும் (மா) ஒன்றும் இந்த காணியாளர் பக்கல் இவர்கள் கொண்டுடையர்களாய் அனுபவியா-

17. மையில் இந்த நன்செய் நிலம் குழி மூவாயிரத் தொருநூற் றெழுபதே முக்கால் கரைப்புன்செய் குழி ஏழாயிரத் தொருநூற் றொருபத்து அஞ்சு இலுப்-

18. பை மரம் பதினாலும் மா ஒன்றும் நாலாவது பங்கூனி மாதத்து பன்னிரண்டாந் தியதி முதல் இவ்வெம்பெருமானுக்குத் திருநாமத்துக்காணியாகக் கொண்டு வீரமா-

19. கதப்பெருவிலையாக ஒன்றுக்குக் காசு ஆறாகிக் காசு பத்தொ[ன்]பதாயிரத் திருபத்து நாலு கரைப்புன்செய்க்கு இலுப்பை மரமும் உட்பட குழிக்குக் காசு இ-

20. ரண்டாகக் காசுபதினாலாயிரத்து இருநூற்று முப்பது ஆகக் காசு முப்பத்து மூவாயிரத்திருநூற்று ஐம்பத்துநாலும் நம் சாக்கில் ஒடுக்கி இந்தக் காணி-

21. ப்பற்று நன்செய் குழி மூவாயிரத்தெழுநூற்றெழுபதே முக்காலும் கரைப் புன்செய் குழி ஏழாயிரத்தொருநூற்றொருபத்து அஞ்சும் இன்னிலத்து இலுப்பைமரம் பதினாலும் மா ஒன்றும் இவ்வெம்பெருமானு-

22. க்கு . . . . . சந்திராதித்தவரையும் திருநாமத்துக்காணியாக விலையும் ஒற்றியுஞ் செய்யக்கடவதாகச் சொன்னோம் இப்படி செய்வதே இவை வாணகோவரையர் எழுத்து தாயிலு நல்ல ஸூரராயர் எழுத்து உ

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 55/2022**

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	சகம்1454.பொ.ஆ.1532.
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	452/1913
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/298
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	46
அரசு	: விசயநகர்			
அரசன்	: அச்சுதத்தேவராயர்			

இடம் : கரயவரதராசப் பெருமாள் கோயில் மண்டபத்தின் வடசுவர்க் குமுதப்படை.

குறிப்புரை : ஆறகளூர் கரியபெருமாள் கோயிலில் குகையூர் கைக்கோளத் தடிவெங்கி மகன் கண்ணன் கோயிலுக்குத் தேர் எடுத்தருளியமைக்காக இக்கோயிலில் சேனைமுதலியாழ்வாரும் சிரீகாரியம் செய்வார் கோயில் அதிகாரம் சிரீ தானத்தாரும் இக்கோயில் படிமண்டபத்திலே(சோபான) கூடி இருந்து சேனைமுதலியார் கூறியபடி இந்தக் கண்ணனுக்கு காணியாட்சியாக ஒருமனையும், ஒருதறியும், தியாகண நல்லூரில் கொல்லை ஒன்றும், பொன்பரப்பி திருவிடையாட்டம் நன்செய் நிலத்தில் 50(?)குழியும் கோயிலில் நித்தம் நாழி அமுதுக்கும் (பிரசாதம்) இவனுக்கும் இவன் தம்பி சின்னானுக்கும் இவன் மரபினருக்கும் (வர்க்கத்தார்) பயன்பெற (அனுபவிக்க) அளித்தனர்.

Summary : North base of the maṇḍapa in the same temple. This inscription records the resolution of the Senai mudali āḻvār and the Sri tānāṭṭār, having authority on account of their management of the temple, of the Kariyape-rumāl having met in the sōpāṉa maṇḍapam in front of the shrine of the God to grant *kāṇiyatchi* consisting of a house site, a loom, 50 *kuḷi* of land out of the tiruviḍaiāṭṭam land of the God in Poṉparappi and one nail of food offered to God daily, to Kannan and his brother and to the former's progeny, in view of he former having instituted a car festival. Kaṇṇaṉ was a kaikkōḷaṉ. This kāniatchi was capable of being sold and mortgaed.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஹஸ்தி ஸ்ரீ மந் மஹாமண்டலேஸ்வரந் ஹரியராயவிபாடந் பாஷைக்கு தப்புவராய கண்டந் மூவ நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் துலுக்கதல விபாடன் துலுக்கமோகாந் தவிழ்த்தான் எம்மண்டலமும் திறை கொண்டருளிய அச்யுததேவ மகாராயர் பிறுதுவிராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் ருசாருயச இதன்மேல் செல்லாநின்ற நந்தன சங்வற்ஸரத்து கும்ப நாயற்று பூறுவப(க்ஷ)த்-
2. திறுதிகையும் சோமவாரமும் பெற்ற உத்திரட்டாதி நக்ஷத்ரத்து நாள் மலாடாகிய செனனாத வளநாட்டு மகதைமண்டலத்து வேறு பிறிந்த

ஆற்றூர்க்கூற்றத்து ஆறகளூர் கரியபெருமாள் சன்னதியில்க் குகையூர் கைய்க்கோள தடிவெங்கி மகன் கண்ணன் தேற்[ர்] எடுக்கையில் பெருமாள் கரியபெருமாள் சன்னதியில் சேனைமுதலி ஆழ்வாரும் ஸ்ரீகாரியம் செய்வார் கோயில்அதிகாரம் ஸ்ரீ தானத்தாரும் ஆக சோபான மண்டபத்தில் நிறைவற நிறைந்து குறைவறக் கூடி இருந்து சேனைமுதலியார் திருவாய் (மலர்ந்த)-

3. ருளினபடி ஆக இந்த கண்ணனுக்கு காணி ஆட்சி ஆக பண்ணி குடுத்தபடி கோயிலுக்கு தெற்கு தாதன் மனைக்கு கிழக்கு முதலியாள் மனைக்கு மேற்கு ஒரு மனையும் ஒரு தறி மானியம் தியாகண நல்ஊரிலே பெரிய பிடாரி இறையிலிக்கு கிழக்கு வாய்க்காலுக்கு வடக்கு தெற்கு கொல்லை ஒன்றும் பொன்பரப்பி திருவிளைஆட்டம் நஞ்சை நிலத்தில் பொன்பரப்பி தேவதானத்துக்கு வடக்கு சூக்கூ ௬௫௵[ர்] கோயில் தினமானம் நாழிப்பிறசாதமும் இ மருவாதி சேனைமுதலி ஆழ்வார் திருவாயி மலந்தரு … ….

4. யாலே இந்த சுவந்திரம் உண்டான மருவாதியும் இவன் தம்பி சின்னனும் இவன் வற்கத்தாரும் அனுபவித்து விற்று ஒற்றி வய்த்துக்கொள்ள கடைவராகவும் உ மலைமண்பட[1] பெருமாள் எழுத்து கரிய பெருமாள் எழுத்து வென்று மாலையிட்ட பெருமாள் எழுத்து போரேற்றுப்பிள்ளை எழுத்து உ

---

1. மலை மண்டலப் பெருமாள் என இருக்க வேண்டும்

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 56/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	சகம் 1444பொ.ஆ.1522.
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	445/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/291
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	47
அரசு	:	விசயநகர்			
அரசன்	:	தன்மராயர்			

இடம் : கரிவரதராசப் பெருமாள் கோயில் உண்ணாழிகை வடசுவர் அடிநிலை.

குறிப்புரை : சாளுவ அரசன் நரசிங்கராயர் திக்குவிசயம் செய்ய வேண்டுமென்று அவர் மகன் அம்மணநாயக்கர் மலாடாகிய சனநாதவளநாட்டு மகதை மண்டலத்தில் இருந்து வேறாகப் பிரிந்த ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் பெருமாள் கரியவர்க்கு புதிதாக கைக்கோளர் அடிமைக்காணி கொடுத்தனர். அவர்கள் கொடுத்த அடிமையான செழியகோன்பிள்ளை மகள் சேவுகநாச்சியை இக்கோயில் தானத்தார், கரியவர் திருமலையப்பன், சிறுக்கரியவர் மூவரையும் முன்னிலையாகக் கொண்டு எம்பெருமானடியாளாகப் பணியமர்த்தி அவளுக்குப் படித்தரமாக நித்தம்(நாள்தோறும்) நாழி அரிசிச்சோறும், மடைவிளாகத்தில் ஒரு மனையும், இக்கோயில் திருவிடையாட்ட முற்றூட்டான (சர்வமானியம்) தேவியாக்குறிச்சி ஏரிக்கீழ் நஞ்சைநிலத்தில் அறுபது குழியும் கண்டமாத்தான் புஞ்சை நிலத்தில் 200 குழியும் ஒருதறி தானியமும் அளித்தனர். இக்கல்வெட்டு ஊ.க.எண் 43 உடன் தொடர்புடையது. கல்வெட்டின் வாசகம் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படியாக இல்லை.

Summary : In the north wall base of the temple. The inscription records that the *tānāṭṭār* of the temple of Kariyavar appropriated the *adimaikkāṇi* given by the *Kaikkōlar* and gave away one female as he adyal of the God in view of the compaign of conquest being undertaken by Narasa nāyakkar. The remuneration (*patittaram*)_ to he from the said temple one nail of cooked rice daily and a house-site in the *maḍai-viḷakam*) apparently to facilitate these payments to the donor allotted an tiru-viḍai-yattam charuvamaṉiyam 60 *kuḷi* of wet land irriagated by Deviyārkurichichi and 300 *kuḷi* of dry-crop land in Kaṇḍāmattaṉ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ உரு உஹாஉணூமெஸ்வரரு ஹரியராயவிஹாடரு ஹாஷெக்குத்தவூ்வராயர் கூணூரு ஊ்வராயர் கூணூரு கூணூ நாடு் கொண்டு கொண்டநாடு கொடாதாரு வூவூ உக்ஷிண வஸ்ரீஉ உத்தர சதுஃஉஊதுாதிவதி மெஜவேட்டை கண்டருளிய ஈழந்திறை கொண்ட ராஜாதிராஜ பரமே ஸ்வரரு ஜம
2. தேகராயந் ராயர் சாளுவ நரசிங்கராயர் குமாரர் தன்மராயர் வூரயிவிராஜூஉ பண்ணி அருளா நின்ற ஸகாவூஉ சூசாசயிச இதன்மேற் செல்லா நின்ற துன்மதி

ஸம்வத்ஸரத்து ஸிம்ஹநாயற்று ஊஓவூ வக்ஷத்து ஜஸஉியும் சோமவாரமும் பெற்ற அத்தத்து நாள் மலாடாகிய ஜன[நா]த வளநாட்டு மகதைமண்டலம் வேறு பிறிந்த ஆற்றுக் கூற்றத்து ஆறகழூர் பெருமாள் கரி(ய)வற்கு

3. சுவாமி நரசாநாயக்கர் திக்குவிஜையம் பண்ணவேணும் என்று அம்மணநாயக்கர் கரியவர் கோயில் தானத்தார் கரியவர்த் திருமலை அப்பன் சிறுக்கரியவர் மூவரையும் முன்னட்டுக்கொண்டு நவமாக கைக்கோளற் குடுத்த அடிமை காணியுங் குடுத்து முதலடைப்பு செழிகோன்பிள்ளையான் மகள் சேவுகநாச்சியை எம்பெருமாநடி(யா)ளாக யிடுவித்துப் படித்தரம் நிற்றம் நாழி அரிசி சாதமும் மடைவிளாகத்திலே

4. ஒரு மனையும் திருவிடைஆட்டம் சறுவமானியம் ஆக தேவியாகுறுச்சி ஏரிகீழ் நஞ்சை நிலத்திலே அறுபது குழியும் திருவிடைஆட்டம் சறுமான இறை(இ)லி கண்டமாத்தாந் புஞ்சை நிலத்தில் இருநூறு குழியும் ஒரு தறி மானியமும் குடுத்தபடியாலே இந்த கல்வெட்டுப்படி சந்திறாதித்யவரையும் நடக்க கடவதாகவும் இதுக்கு அஹிதம் பண்ணிநவன் ஗ங்கைகரைலே காராம் பசுவை

5. கொன்ற பாவத்திலே போக கடைவர்களாகவும்

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 57/2022**

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	---
ஊர்	:	ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	:	447/1913
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.XXVIII/293
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	48
அரசு	:	---			
அரசன்	:	---			

இடம் : கரிவரதராசப் பெருமாள் கோயில் உண்ணாழிகை வடசுவர்.

குறிப்புரை : ஆறகளூர் கரியபெருமாள் கோயிலுக்கு இராசராசவிண்ணகர் என்று பெயர். இக்கோயில் சிறீ விமானத்தை வாணகோவரையன் மனைவியும் குழூருடையான் இரணன் மகளுமான புண்ணியவாட்டியார் எடுப்பித்தார். அவர் குலம் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என வாழ்த்துக் கூறப்பட்டுள்ளது.

Summary : South base of the maṇḍapa in front of the Kariyavaradarājaperumāḷ. This inscription records that Punniyavattiyār, the wife of Rājarāja Vaṇakōvarai-yan and daughter of Kuḻuruḍaiyān Iraṇaṉ Kōvalarāyaṉ, carried out repairs in the *sri-vimaṉam* and temple of Irājarājaviāṇṇagar i/e. temple of Sri Perumāḷ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இராசராச விண்ணகர் இக் கரியியபெருமாள் கோயில் ஸ்ரீ-
2. விமாநம் திருக்கற்றளித் திருப்பணி செய்வித்தாள் இராசராசன் வாணகோ
3. வரையன் தேவியார் புண்ணியவாட்டியார் இது இவர் தன்மம் ந-
4. ன்றாக இவர் குழுருடையான் இரணன் கோவலராயன்
5. மகளார் இவ்வംக்ஷு நித்தமாக ஸ்வஸ்திஸ்ரீ.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 58/2022***

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	---
ஊர்	:	ஆறகளூர்.	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	:	தமிழ்.	ஊ.க. எண்	:	49
அரசு	:	---			
அரசன்	:	---			

இடம் : கோட்டைக்கரை அருகில் உள்ள கலியன் என்பவருடைய நிலத்தில் உள்ள கல் .

குறிப்புரை : பொருள் - கல்வெட்டின் மேல் பகுதியில் அமர்ந்த நிலையில் இருகைகளில் மலர் ஏந்திய ஒரு யக்சியின் உருவம் புடைப்புச்சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. அதோடு கண்ணாடி, ஏர்க்கொழு, குறடு சுத்தியல்(?) முதலியன பொறிக்கப்பட்டுள்ளன. இருகுத்துவிளக்குகளும் அவற்றுக்கிடையில் முக்காலியின் மீது நிறைகுடமும் வைக்கப்பட்டுள்ளன. பொன்பரப்பின பெருமாள் ஜினாலயம் என்ற பெயரில் நாற்பத்தெண்ணாயிரப்பெரும்பள்ளி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

Summary : On a stone in the field of Kaliyan̲ near Kōṭṭaikkarai. This inscription records the construction of a Jain temple named Pon̲parappin̲a-perumāḷ Sri Jinalayam alais Nāṟppatteṇāyirap-per umpaḷḷi in late characters.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இந்த
2. ஸ்ரீகோயில் பொன்
3. பரப்பின பெருமாள்
4. ஜினாலயமான
5. நாற்பத்தெண்ணா-
6. யிரப் பெரும்பள்ளி
7. நாற்பத்தெண்ணா-
8. யிரவர் ரகைஷ.

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 59/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 10
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்று ஆண்டு	: 13- ஆம் நூற்றாண்டு
ஊர்	: ஆறகளூர்	இ.க.ஆண்டறிக்கை	: 58/1888
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க.எண்	: 1
அரசு	: வாணகோவரையர்		
அரசன்	: மகதேசன்		

இடம் : ஆறகளூர் காமீசுவரமுடையார் கோயில் முன்புறத் தரையில் பாவப்பட்டிருந்த கல். (தற்பொழுது சேலம் அருங்காட்சியகத்தில் உள்ளது.)

குறிப்புரை : கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆறகளூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வாணகோவரையர் மரபில் வந்த மகதேசன் என்பவன் ஆறகளூரில் இருந்து காஞ்சிபுரத்துக்கு ஒரு பெருவழி அமைத்துள்ளான். அப்பெருவழி எவ்வளவு தொலைவு என்பதைக் குறிக்கும் காதக்கல் இதுவாகும். எத்தனைக்காதம் என்பதைக் குறிக்க மகதேசன் பெருவழி காஞ்சிபுரத்துக்குக் காதம் என எழுதி அது எத்தனைக் காதம் என்பதை சிறுசிறு குழிகளாகக் குழித்து வைத்துள்ளான். கல்லின் இறுதிப்பகுதி உடைந்துவிட்டமையால் எத்தனைக் காதம் என்பதை அறிய இயலவில்லை. இவ்வாறு காதத்தை எண்ணோடு குழியிட்டும் குறிப்பிடும் வழக்கம் உள்ளதைத் தகடூருக்கருகில் கிடைத்துள்ள அதியமான் பெருவழிக் காதக்கற்களில் காதம் 27, 29ஐக் குறிக்க காதம் என்ற சொல்லுக்குப் பின் எண்ணால் எழுதி படிப்பறிவில்லார்க்குப் புரியும் வகையில் பத்து என்னும் எண்ணைக் குறிக்க பெரிய குழிகள் இரண்டையும் சிறிய (ஒற்றை) எண்களைக் குறிக்க ஏழு, மற்றும் ஒன்பது எண்ணிக்கையில் சிறுசிறு குழிகளாக ஏழு, ஒன்பது குழிகளைக் குழித்துக் காண்பித்துள்ளதை நோக்கி அறியலாம். .

Summary : On a slab stone Paved in the floor of the Yirukkamisvamudaiyar temple. (now it is in the Govt. museum at salem). End of the stone was broken. Mentions a highway in the name of Magadesan, and the distance to Kānjipuram showed by samll pits.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. மகதேசந்
3. பெருவழி
4. காஞ்சிபு
5. ரம்.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 60/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	---
ஊர்	:	பெரியேரி	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	:	தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	:	1
அரசு	:	---			
அரசன்	:	---			

இடம் : வண்ணான்குளம் நடராசன் என்பவருடைய தோட்டத்தில் உள்ள பலகைக்கல்.

குறிப்புரை : கல்வெட்டின் தலைப்பில் வலதுபுறம் பெரிய சூலதேவருருவும் நடுவில் குத்து விளக்கொன்றும் இடதுபுறம் வலப்புறத்தை விடச் சிறிய சூலவடிவில் நடுவில் நின்ற நிலையில் ஒருதெய்வ உருவமும் அதன் அடிநிலையில்(பீடத்தில்) நின்ற நிலையில் காளையா? எலியா? என இனங்காண இயலா ஒரு உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டின் உட்பகுதியில் எழுத்துகளுக்கிடையே ஒரு எலி உருவம் புடைப்புச் சிற்பமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆறகளூரில் நிவாவாற்று வடகரையில் உள்ள சொன்ன வண்ணஞ் செய்யும் பிள்ளையார் கோயிலில் பூசித்துவரும் தில்லை மூவாயிரநம்பிக்கு, இக்கோயில் அமுதுபடிக்கும் கோயில் திருவாசலில் தண்ணீர் வைக்கவும் குலசேகரன் பெரிய ஏரிக்கு வடக்கில் காடுவெட்டிப் பயிர்செய்யும் நஞ்சைநிலம் இரண்டாயிரங் குழியைத் தேவதான இறையிலியாகக் கொடுத்த ஆணையையும் அதை நிறைவேற்றிய பாண்டி மண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து கப்பலூரான உலகளந்த சோழநல்லூர் கணவதி ஆழ்வானான காடுவெட்டியையும் குறிப்பிடுகின்றனர். இன்று வெள்ளாறு, சுவேதநதி, வசிட்டநதி எனப் பலபட வழங்கிவரும் ஆற்றின் உண்மையான பெயர் நிவாஆறு என்பது இக் கல்வெட்டாலும் இவ்வாற்றுப் போக்கில் உள்ள பல ஊர்களின் கல்வெட்டுகளாலும் உறுதி செய்யப்படுகிறது.

Summary : On a slap in the lake called Vaṉṉāṉkuḷam It is a royal order issued to Āṇḍār Udappirppaḷagiyāṉ alias Tiḻai-mūvāyrira nambi of Choṉṉavaṉṉam ceyum pillaiyār temple in the northern bank of river Niva at Āṛagaḷ, gifted 2000 *kuḻi* of wet land with all its taxes as dēvadāṉa irai-ili for the food offerings and maintain a water shed in front of the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆறகளூரில் நிவா-
2. வாற்றுக்கு வடகரையில் சொன்ன
3. வண்ணஞ் செய்வார்யும்பிள்ளைய-
4. ரர் கோயிலில் ஆண்டார் (உட)-

5. ப்பிறப்பழகியானான தில்லை மூ-
6. வாயிரநம்பிக்கு ......யனார்-
7. க்கு அமுதுபடிக்கும் இத்திருவா(சலில்)தண்-
8. ணீர் வைக்கவும் குலசேகரன் பெரியஏரி ஆற்-
9. று வாய்க்காலுக்கு வடக்கும் இவ்வூர்
10. வடக்கு மேற்கும் தேவதான இறையிலியாக-
11. க் காடுவெட்டி பயிற்செய்து போதரும் நன்-
12. செய் குழி யிரண்டாயிரத்துக்குப் பொன்வரி உ-
13. ள்ளிட்ட அனைத்தாயமும் உட்பட சந்நிதராதித்-
14. தவற் தேவதான இறையிலியாக செய்வதா-
15. கக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக்கொள்க
16. இப்படிக்கு இவை பாண்டிமண்டல[த்து] முத்தூற்றுக்
17. கூற்றத்து கப்பலூரான உலகளந்தசோழ
18. நல்லூர் ஆதித்தன் கணவதி ஆழ்வானான காடுவெட்டி எழுத்து.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 61/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: 13 -ஆம் நூற்றாண்டு
ஊர்	: பெரியேரி	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 2
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : வண்ணான்குளம் நடராசன் தோட்டத்திலுள்ள 2-ஆவது பலகைக்கல்.

குறிப்புரை : கல்வெட்டின் தலைப்பகுதியில் வலப்புறம் மேலே தவம் செய்யும் அடியார் ஒருவர் அமர்ந்த நிலையிலும் அதன்கீழ் முக்காலி மீது வைக்கப்பட்டுள்ள ஒருபானையும் நடுவில் ஒரு பெரியசூலதேவரும் இடப்பக்கம் சிறியசூலதேவரும் பொறிக்கப்பட்டுள்ளனர். ஆறகளூர் நிவாவாற்று வடகரையில் அமைந்துள்ள பிள்ளையார் சொன்னவண்ணஞ்செய்வார் கோயில் ஆண்டார் உடப்பிறப்பழகியான் இப்பிள்ளையார் கோயில் அமுதுபடிக்கும், தான் வைக்கின்ற தண்ணீர் பந்தலுக்கும் தேவதான இறையிலியாக பெரியேரி நீர்நிலத்தில் இரண்டுமா அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. மேல்கல்வெட்டில் கூறப்பட்ட கணவதி ஆழ்வானே இதனையும் நிறைவேற்றியுள்ளான்.

Summary : In the same place. A royal order issued to the Āṉḍār Uḍappirppaḻagiyan alias Tilai-muvayir nambi of choṉṉavaṉṉam ceyum piḷḷāiyār temple in the northern bank of river Niva at Āṛagaḷ, gifted tw ma of wet land as irai-ili including all taxes for the food offerings and for maintain a watershed.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீஅருளிச்செயல் ஆறகளூர்
2. நிவாவாற்றுக்கு வடகரையில் பிள்ளையார்
3. சொன்னவண்ணஞ்செய்வார் கோயில் ஆண்டார் உடப்-
4. பிறப்பழகியான் தில்லை மூவாயிரநம்பிக்கு
5. இப்பிள்ளையாற்கு அமுதுபடிக்கும் இக்கோயி-
6. லில் தான்வைக்கிற தண்ணீர்பன்தலுக்கு தேவ-
7. தான இறையிலியாக பெரிய ஏரியான குலசேக-
8. ரந் பெரிய ஏரியில் கடமைப்பற்று நன்செய்நில-
9. த்தில் ஒன்பதாவது தன்காணியில் காடுவெட்டித்
10. திருத்தின நிலத்திலே இரண்டுமா (நீர்) நில அனைத்தாயங்-

11. களும் உட்படப் பதினொன்றாவது ஆவணி மாதமுத-
12. ல் இறையிலியாகத்தந்தோம்இப்படிக்கு இஓலை
13. பிடிபாடாகக் கொண்டு தனக்கும் தன்வற்கத்தார்க்-
14. கும் சந்திராதித்தவரையும் காணியாகக் கல்லிலு-
15. ம் செம்பிலும் வெட்டிக்கொள்க இப்படிக்கு இவை
16. பாண்டிமண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து-
17. க்கப்பலூரான உலகளந்த சோழனல்லூர் ஆ-
18. தித்தன் கணவதிஆழ்வானான காடுவெட்டி எ
19. ழுத்து உ.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 62/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	20-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	வேப்பம்பூண்டி	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	1
அரசு	:	---			
அரசன்	:	---			

இடம் : பிள்ளையார் கோயில் அருகில் உள்ள பலகைக் கல்-1.

குறிப்புரை : வெங்கடேச ஐயன் என்பவர் வைத்த கல்வெட்டு குறித்து குறிப்பிடுகிறது.

Summary : A slap near the Piḷḷaiyār temple. Records that a certain Vengadesa iyan erected a stone for Alāgiya Maṇavāḷa swamigal in the Jananātha-perumāḷ temple at Sōmāri. In late characters.

கல்வெட்டு :

1. ஸ்ரீ ராமஜெய-
2. பிறமாயி
3. ஆடிமாத சோ-
4. மாரி ஜனநாத
5. பெருமாள்
6. கோயில் அழகிய
7. மணவாளன்
8. ராமானுஜ சு-
9. வாமிகள் ஜெ-
10. யம் கல் வெ-
11. ச்சது வெங்-
12. கடேசய்-
13. யன்.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 63/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	19-ஆம் நூற்றாண்டு
ஊர்	: வேப்பம்பூண்டி	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	2
அரசு	: ---			
அரசன்	: ---			

இடம் : கோயில் திருப்பணிகளுக்கு வேப்பம்பூண்டி என்ற கிராமத்தை அளித்த செய்தி

குறிப்புரை : ---

Summary : Another slap near the same temple. One Mutteya-Mudaliyar gifted the village Veppampundi to the god at Kanchipuram for repairs (tiruppani) of the tample.

கல்வெட்டு :

1. பார்த்திப வருஷம்
2. தைமாதம் வை-
3. முத்தேய மு-
4. தலியார் உபயம்
5. நாத காஞ்சிபுரம் …
6. … த்தார் சுவாமிக்-
7. கு திருப்பணிகளுக்கு
8. வேப்பம்பூண்டி
9. கிறாமம் உத்தம ச்.
10. சகாமாய் நடத்த வே…
11. .. கடவதாகவும் இந்த
12. தன்மத்துக்கு யா-
13. தொருவர் அகு-
14. தம் பண்ணினால்
15. கெங்கை கரை-
16. யிலே காராம் பசு-
17. வைக் கொன்ற பா-

18. வத்திலே போகக்
19. கடவோராகவும்
20. ௨

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 64/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	சகம்1446/பொ.ஆ.1524
ஊர்	:	நரசிங்கபுரம்	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	:	தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	:	1
அரசு	:	விசயநகர்			
அரசன்	:	கிருட்டிணதேவராயர்			

இடம் : சிவன் கோயில் உண்ணாழிகை வடச்சுவர் குமுதம்

குறிப்புரை : விஜயநகர அரசன் கிருட்டிண தேவராயன் காலத்தில் இரட்டியப்ப நாயக்கர் நரசிங்கபுரம் பொன்பரப்பின சோழீசுவரம் உடையாருக்கு இரட்டியப்ப நல்லூர் பெரியேரி எல்லை கீழ் நஞ்சை நில தேவதானமாக அளித்ததைக் குறிக்கிறது.

Summary : Nort base of the siva temple. Perforated inscription. A record of the Vijayanagara king Krishṇadēva mahārāyar in Saka year 1446. Records the gift of land to the temple of Tambirānār Ponparappina chōḷśvaramuḍaiya Nāyanār in Narasiṅgapuram for offerings.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹா பிரதாப ஊஷெஸ்ரூ ஸ்ரீவீரபிறதாப க்ஷெவ ஊஹாராயர் பிறுதுவி இராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாற்தம் ௲சாசயசு இதன்மேல் செல்லா நின்ற
2. தாரண சம்பத்சரத்து மகர நாயற்று மூன்றாம் மத்தியல் உள்ளன சேர்க்க இரட்டியப்ப நாயக்கர் நரசிங்கபுரம் தம்பிரானார் பொன்பரப்பின சோளீஸ்வரமுடைய நயினாற்கு ஸாவ தேவதானமாகச் சேறுந்த் இரட்டியப்பந்
3. ஈரணை ஏற்குழி இரண்டுபடி அம்ருதுபடிக்கும் சோறும் வெள்ளாழ ..... ண்டாரத்துக்கும் நன்செய் குழி வாரபுஞ்செய் ஈரணை ஏற்குழி .... (இ) ரண்டுபடி அம்ருதை . .
4. த .... ற்கு நன்சய் குழி .... ஏற் குழி .... ஈரணை ஏற் குழி இருநாழிஅமுதுபடி பிரசாதமும் மெய்காவல் பெறுவனுக்கு நன்செய் ஈரணை [ஏற்] குழிப் புன்செய்

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 65/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: சகம் 1446 பொ.ஆ.1524
ஊர்	: நரசிங்கபுரம்	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 2
அரசு	: விசயநகர்		
அரசன்	: கிருட்டிணதேவராயர்		

இடம் : சிவன் கோயில் உண்ணாழிகை மேற்குச் சுவர் குமுதம்

குறிப்புரை : நரசிங்கபுரம் தம்பிரானந் பொன்பரப்பின சோழீஸ்வரமுடைய நாயனாற்கு அபிஷேகத்துக்கும், பூசைக்கும் சுவதேவதானமாக நிலத்தை மானமாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

Summary : West base of the same temple. A record of the Vijayanagara king Krishṇadēvarmaharayar in the Saka year 1446. Records the gift of wet land to the god Tambiraṉār Poṉparappiṉa choḷisvaramuḍaiya Nāyanār at Narasīṅgapuram by the agent of the king Iraṭṭyappa Nayakkar.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஶ்ரீ மஹாப்ரதாப மஹாமண்டலேஸ்வரந் வீரப்தாப கிருஷ்ண தேவமகாராயர் பிறுதிவீராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாற்தம் ௲௪௱௪௰௬ இதன்மேல் செல்லாநின்ற தாரணசம்வத்சரத்து மகரநாயற்று அபர பக்ஷத்து அமாவாசையும் ஆதித்தயவாரமும் பெற்ற திருவோண (நாள்) அய்யன் காரியத்துக்கு
2. கடவர் இரட்டியப்ப நாயக்கர் நரசிங்கபுரம் தம்பிரானார் பொன்பரப்பின சோளீசுரமுடைய நாயனாற்கு சுவதேவதானமாகச் சேற்ந்த இரட்டியப்ப நல்லூர் எல்லையிலும் பெரியேரி கீழ் நன்செயிலும் காணியபிஷேகத்து பூசைக்கும் தானமாகக் குடுத்தோம் . . . . .
3. ட்பிறசாதமும் கோயிற் கணக்கு இருயார்க்கு நன்செய் குழி வாரப் புன்செய் ஈரணை ஏற்குழி இரண்டுபடிஅம்முதுபடி பிறசாதமும் பல . . . . கண்காணி . . . . . .
4. னைறரை எற்கும் ஒன்றரைப் ப . . . . . யொயிணர காணம் . . . . . புன்செய் ஒன்றரை ஏற்கும்

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 66/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: ---
ஊர்	: திட்டைச்சேரி	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 1
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : திட்டைச்சேரிச் சிற்றோடைக்கருகில் உள்ள சூலக்கல்.

குறிப்புரை : திருமஞ்சனம் அழகிய தம்பிரானார் என்பவர்க்கு கொடுக்கப்பட்ட நிலத்தின் எல்லையைக் குறிக்கும் எல்லைக்கல்லாக இருக்க வேண்டும். கல்லில் முத்தலைவேல் (சூலம்) பொறிக்கப்பட்டு அதன் மேல் முனையின் வலப்புறம் ஞாயிறும் (சூரியன்) இடப்புறம் நிலவும் பொறிக்கப்பட்டுள்ளன.

Summary : In the trident stone near the streem. Mentions the village Tittaicceri is the native village of Tirumanjanamalagiyar.

கல்வெட்டு :

1. திருமஞ்-
2. சனம் அ-
3. ழகிய த-
4. ம்பிரானார்
5. ஊர் தி -
6. ட்டைச்சேரி

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 67/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	.6-ஆம் நூற்றாண்டு
ஊர்	: செந்தாரப்பட்டி	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	: வட்டெழுத்து	ஊ.க. எண்	:	1
அரசு	: ---			
அரசன்	: ---			

இடம் : ஊர் நிருவாக அலுவலர் இராமனுசரெட்டியார் தோட்டம்.

குறிப்புரை : நீலகண்ட அரைசர் மகன் அல்லது வழியினான பொய்த்தலையார் சேவகன் எருமைகொள்ளிச் செல்வன் என்பவன் தங்களது ஆதிதொட்டி மேல் படை வந்தபொழுது அவர்களோடு பொருது மாண்டான். தொட்டி என்பது சிற்றூரை குறிக்கும். குறிஞ்சி, முல்லை நில ஊர்களில் சில தொட்டி எனப் பெயர் பெறும். ஊரெலாம் பட்டிதொட்டி எனும் தனிப்பாடலால் இதனை அறியலாம். அத்தொட்டிகளில்(ஊர்களில்) ஒன்று ஆதிதொட்டி எனப் பெயர் பெற்றிருந்துள்ளது. மருக, மருமகன் எனவரும் சொற்கள் அக்குடி வழியில் (மரபில்) வரும் மகனை அல்லது வழிவந்தவரைக் குறிக்கும் என்பதைக் கழகப்பாடல்கள் காட்டும். எறிந்து என்பது போரிட்டு எனப் பொருள்படும். வீரனின் உருவம் வலக்கையில் கொடுவாள், இடக்கையில் வில், அரையில் அரையாடை, தலையில் முடித்த குஞ்சி. நேர்முகமாகச் செதுக்கப்பட்டுள்ளது. எழுத்துகள் வீரனின் வலப்பக்கம் தொடங்கி மாலைபோல் சுற்றி மீண்டும் வலப்பக்கத்தில் வந்து பின் கிடையாக நான்கு வரிகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. கல்லின் இடப்புறம் சில எழுத்துகள் உடைந்துள்ளன.

Summary : Hero stone in the Rāmānuja reṭṭiyar's gārden. Records the death of a hero named Erumai-koḻḻi-selvaṉ the servant of Poyttalaiyār the descendant of Nīlakandaraisar while the army came upon the Āthittoṭṭi.

கல்வெட்டு :

1. நீலகண்டரைசர் மருமக்கள் பொய்த்தலை ஆ-
2. ர் சேவக னாதிதொ(ட்டிமேற் படை) வந்த ஞான்று
3. எறிந்து
4. பட்டானெரு-
5. மை கொள்-
6. ளி செல்வன்.

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 68/2022**

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	8-ஆம் நூற்றாண்டு
ஊர்	: செந்தாரப்பட்டி	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	: வட்டெழுத்து	ஊ.க. எண்	:	2
அரசு	: ---			
அரசன்	: ---			

இடம் : ஊர் நிருவாக அலுவலர் இராமனுசரெட்டியார் தோட்டம்.

குறிப்புரை : நீலகண்டரைசருடைய மருமகன் பொய்த்தலையார் சேவகன் கோழிவடுகன் என்பவன் ஆதிதொட்டிமேல் படை வந்த பொழுது அப்படையோடு பொருதுமாண்டான் என்பதைக் குறிக்கிறது. நடுகல்லில் வீரனுடைய உருவம் இடக்கையில் வில்லேந்தி வலக்கையில் குறுவாளைப்பிடித்து போர்க்குப் பாய்ந்து செல்லும் கோலத்தில் உள்ளது. இடையில் கீழ்ப்பாய்ச்சிட்டுக் கட்டிய அரையாடை, அரையாடைமேல் துண்டுக்கச்சை. உச்சியில் கொண்டையிட்டுப் பின் தொங்கும் சடை. வீரனின் முன்புறம் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

Summary : Another hero stone in the same place. Records the death of a hero named Kōḻi-vādukaṉ the servant of Poyttalaiyār the descendant of Nīlakaṇḍaraisar while the army came upon the Āthittoṭṭi.

கல்வெட்டு :

1. நீலகண்டரைசர் மருமக்கள் பொய்த்தலை ஆர்-
2. சேவகன் ஆதிதொட்டிமேற் படைவந்த ஞான்-
3. று எறிந்துபட்டான் கோ-
4. ழி வடுகன்.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 69/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	8-ஆம் நூற்றாண்டு
ஊர்	: செந்தாரப்பட்டி	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	: வட்டெழுத்து	ஊ.க. எண்	:	3
அரசு	: ---			
அரசன்	: ---			

இடம் : ஊர் நிருவாக அலுவலர் இராமனுசரெட்டியார் தோட்டம்.

குறிப்புரை : நீலகண்டரைசரின் மகன் பொய்த்தலையார் சேவகன் பொங்கில் விண்ணன் என்பவன்தங்களதுஆதிதொட்டிமேல்பகைவர்படைகொண்டுவந்தபொழுது அவரொடு போரிட்டு மாண்டான் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது. வீரன் இடக்கையில் வில்லை ஏந்தி வலக்கையில் குறுவாள் பிடித்து இடக்காலை முன்வைத்து வலக்காலைப் பின்வைத்து போர்க்கோலத்தில் நிற்கிறான். இடையில் கீழ்ப்பாய்ச்சிக் கட்டிய அரையாடை. அரையாடை மேல் வழுவாமல் இருக்க துண்டைக் கச்சையாகக் கட்டியுள்ளான். அதன் முனை முன்புறம் தொங்கலாக அலங்கரிக்கிறது. தலையின் உச்சியில் முடித்த குஞ்சி. உருவத்தைச் சுற்றி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. வீரனின் உருவம் முதிர்ந்த தோற்றத்தில் காணப்படுகிறது.

Summary : Another hero stone in the same place. Records the death of a hero named Poṅgil-viṇṇaṉ the servant of Poyttalaiyār the descendant of Nīlakaṇḍaraisar when he fought aginst the army who came on Āthithoṭṭi.

கல்வெட்டு :

1. நீலகண்டரைசர் மருமக்கள் பொய்த்தலைஆர் சேவகன் ஆதிதொட்டிமேல்
2. படை வந்த ஞன்று எறி-
3. ந்து பட்டான் பொ-
4. ஙகில் விண்ணன்.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 70/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: 6-ஆம் நூற்றாண்டு
ஊர்	: செந்தாரப்பட்டி	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: வட்டெழுத்து	ஊ.க. எண்	: 4
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : ஊர் நிருவாக அலுவலர் இராமனுசரெட்டியார் தோட்டம்.

குறிப்புரை : நீலகண்டரைசர் மகன் பொய்த்தலையார் சேவகன் சாகாடநக்கன் என்பவன் கஞ்சப்புழை என்ற இடத்தில் பகைவர் படை வந்தபொழுது அப்படையோடு பொருது மாண்டான். இக்கல்லில் வீரனின் உருவம் வலக்காலை முன்வைத்து இடக்காலைப் பின்வைத்து இடதுகையில் வில்லும் வலது கையில் குறுவாளும் கொண்டு நிற்கின்றான். இடையில் அரையாடை. தலையில் குஞ்சமிட்டு நிமிர்ந்த பார்வை அமைதியில் செதுக்கப்பட்டுள்ளது. எழுத்துகள் இடமிருந்து வலமாக உருவத்தைச் சுற்றி பொறிக்கப்பட்டுள்ளன.

Summary : Another hero stone in the same place. Records the death of a hero named Sākāḏa-Nakkaṉ the servant of Poyttalaiyar the descendant of Nīlakaṇḍaraisar while the army came upon the Āthithoṭṭi.

கல்வெட்டு :

1. நீலகண்டரைசர் மருமக்கள் பொய்த்தலைஆர் சேவகன் க(ஞ்)ச்-
2. ச புழையுட் படைவந்த ஞான் றெறிந்து பட்டான்
3. சாகாட நக்கன்.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 71/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	6-ஆம் நூற்றாண்டு.
ஊர்	: செந்தாரப்பட்டி	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	: வட்டெழுத்து	ஊ.க. எண்	:	5
அரசு	: ---			
அரசன்	: ---			

இடம் : ஊர் நிருவாக அலுவலர் இராமனுசரெட்டியார் தோட்டம்..

குறிப்புரை : நீலகண்டரைசர் மகன் பொய்த்தலையார் சேவகன் வண்ண நக்கன் என்பவன் ஆதித்தொட்டிமேல் பகைப்படை வந்த பொழுது அவருடன் பொருது பட்டான். நடுகல்லில் வீரன் இடக்காலை முன்னிட்டு வலக்காலை பின்னிட்டு இடையில் குறுவாள் செருகி வலக்கையில் வளைந்த ஒரு வாளேந்தி போர்க்கோலம் கொண்டுள்ளான். கீழ்ப்பாய்ச்சிட்டுக் கட்டிய அரையாடை, ஆடைக் கச்சையில் கட்டாரி அல்லது குறுவாள். தலையில் தலைப்பாகை, வடிந்துவீழ்காதுகள். எழுத்துகள் வீரனின் வலப்பக்கம் தொடங்கி இடப்பக்கம் வரை பொறிக்கப்பட்டுள்ளன. இவை வெட்டப்பட்ட கல் முக்கோண வடிவில் உள்ளது.

Summary : Another hero stone in the same place. Records the death of a hero named Vaṉṇa-Nakkaṉ the servant of Poyttalaiyar the desendant of Nīlakaṇḍaraisar while the army came upon the Āthithoṭṭi.

கல்வெட்டு :

1. நீலகண்டரை-
2. சர் மருமக்கள்
3. பொய்த்தலைஆர் சேவகன் ஆதிதொட்டிமேற் படைவந்த ஞான்று
4. எறிந்து பட்டான் வண்ண நக்கன்

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 72/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	:	20-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	துலுக்கனூர்	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	:	வட்டெழுத்து	ஊ.க. எண்	:	1
அரசு	:	---			
அரசன்	:	---			
இடம்	:	தெற்குக்காடு மாரியம்மன் கோயில்.			

குறிப்புரை : மாலக்கவுண்டர் என்பவர் மாரியம்மன் கோயிலுக்கு அளித்த கொடை(உபயம்) பற்றிக் கூறுகிறது. அவர் எதைக் கொடையாக அளித்தார் என்பது தெரியவில்லை.

Summary : In the Mariyamman̲ temple of Terkkukkādu at Tlukkanūr. Records the gift of something (not specified) to the goddess by Malagouṇḍar in the year 1902 A.D.

கல்வெட்டு :

1. ஸ்ரீ மாலக்கவுண்டர்
2. உபயம் 1902.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 73/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: ---
ஊர்	: தியாகனூர்	இ.க.ஆண்டறிக்கை	:---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 1
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : பெருமாள் கோயில் முகமண்டபம் வட சுவர் அடிநிலை (அதிட்டானம்).

குறிப்புரை : ஆறகளூர் மலைமண்டலப் பெருமாளுக்கு திருவாராதனமும் திருப்பணியும் நடத்துவதுற்கு உடலாக (மூலச்சொத்து) தொழுவூர் வாரப்பற்றில் ஆயிரங்குழி நிலம் பொன்வரி உட்பட அனைத்தாயங்களும் திருவிடையாட்ட இறையிலியாக அளிக்கப்பட்டதை இக்கோயில் ஶ்ரீவைஷ்ணவர்களுக்கு அறிவிக்கும் அரசனது ஓலை.

Summary : North wall base of the maṇḍapam in the Perumāḷ temple at Tiyāganūr. It is a royal order issued to the Sri vaishṇavās (*preists*) of the Perumāl̲ temple at Āṛagaḻūr, conveying the grant of 1000 *kuḷi* of wet land inclusive of all taxes in the Magadaimanḍalam as Tiruviḍaiyaṭṭa-irai-ili for conducting rituals and services to the god. In characters of about the 16th century A.D.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஶ்ரீ அருளிச்செயல் ஆறகளூர் மலைமண்டலப் பெருமான் கோயிற் திருப்பதி ஶ்ரீவைஷ்ணவற்கு இந்நாயனாற்கு திருவாராதனமும் திருப்பணிக்கு-
2. ம் உடலாக மக[த]மண்டலத்துத் தொழுவூர் வாரப்பற்று நன்செய் நிலத்திலே பதினெட்டாவது பசானம் முதல் பெற ஆயிரங்குழி பொ-
3. ன்வரிஉள்ளிட்ட அனைத்தாயங்களும் உட்படத் திருவிடையாட்ட இறைஇலியாகத் தந்தோம் இந்நிலங்கைக்கொண்டு இந்நாயனாற்குத் திருவா-
4. ராதனமும் திருப்பணியும் நடத்தவும் இப்படிக்கு திருவிடையாட்ட இறையிலியாக செல்வதாக கல்லிலும் செம்பிலும்
5. வெட்டிக்கொள்க குழி ஆயிரத்துக்கும் இவை வாணகோவரையன் எழுத்து ௲

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 74/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: ---
ஊர்	: தியாகனூர்	இ.க.ஆண்டறிக்கை	:---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்-கிரந்தம்:	ஊ.க. எண்	: 2
அரசு	: சோழர்		
அரசன்	: கோனேரின்மை கொண்டான்.		

இடம் : பெருமாள் கோயில் முகமண்டபம் வட சுவர் அடிநிலை (அதிட்டானம்).

குறிப்புரை : கோனேரின்மைகொண்டான் பெருமான் வில்லவராயற்கு அளித்த ஆணை (ஓலை). ஆற்றூர் நாட்டுப் பழம் பற்றிலுள்ள கற்பூண்டியை வாணகோவரையர் ஓலைப்படி தர்மக்காணியாக அனுபவிக்கப்பட்டு வந்துள்ளது. அதை முன்னாளில் விக்ரமபாண்டியர் ஆறகளூர் மலைமண்டலப்பெருமாளுக்குகொடுத்தஊராகஇருக்கும்என்றுஅக்கோயில் நம்பிமார் கூறினர். ஆதலால் மாமடி (மாமா) யின் பத்தொன்பதாவது ஆட்சியாண்டு ஐப்பசி மாதம் முதல் திருவிடையாட்டமாக கொடுத்ததை முன்னாளில் நடந்தபடி எல்லைக்கும் (கல்நடுதல்), அனுபோத்திற்கும் ஊறுவராமல் (கோணாதபடி) தமக்கு அறியும்படி விளக்கினமையால் நான்கெல்லைக்குட்பட்ட நிலங்களைக் காணியாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

Summary : North wall of the front maṇḍapa in the same temple. It is the order of Tribuvaṇachchakkaravarthi Kōnēriṇmaikoṇḍāṉ to Perumāḷ villavarayan the minister of the king. According to that order (*olai*) of Vāṇakōvaraiyar the village Kaṟppūṇḍi in Āṟṟūr nāḍu was enjoyed as Dharmakkkāni. But he came to be informed by the priest of the temple the village was given to Āṟagaḻūr Malaimanḍalapperumāḷ as tiruviḍaiāṭṭam by Vikramapāṇḍiya-dēvar. So there for it should be given as it was.?

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்தி கோனேரின்மைகொண்டான் . . வாயூருடையான் மந்திரிப் பெருமான் வில்லவராயற்கு ஆற்றூர் நாட்டு பழம்பற்றில் கற்பூண்டி வாணகோவரையர் ஓலைப்படிக்கு தர்மகாணி ஆக அனுபவித்துப் போந்த இத்தை முன்னாளிலே கரியசியா விக்கிரமபா-
2. ண்டியதேவர் ஆறகளூர் எம்பெருமாந் மலைமண்டலப் பெருமாளுக்குக் குடுத்த ஊராயிருக்கும் என்று இக்கோயில் நம்பிமார் சொந்நபடியாலே மாமடிக்கு பத்தொன்பதாவது அற்பசி மாதமுதல் திருவிடையாட்டமாகக் குடுத்த

3. அளவுக்கு முந்நாளில் இவ்வூரில் கல்நாட்டுதல் அனுபோகம் உண்டாக்க கோணாதபடி நமக்கேற விளங்கி இரண்டாவது தை மாதமுதல் இவ்வூர் [நா]ன்கெல்லைக்கு உட்ப்பட்ட நன்செயும் இரைப்புன்செயும் பொட்டைப்புன்செயும் க-
4. ரை[ப்]புன்செயும் நத்தமும் ந[த்]தப்புன்செயும் தமக்குக் காணியாகத் தந்தோம் இந்த முதல் கைக்காண்டு நாட்டில் காணிப்பற்றும் வந்த கடமை முதல் ஸ்ரீபண்டாரத்தே செலவாக்கிப் போதவும் இவ்வூர்க்கு கற்பூர விலை-
5. க்கு (அ)றையிலே நூற்று ஐம்பது பணம் செலவாக்கி கோயில் பண்டாரத்தே திருவாபரணக் (திருவாராதனக்) கணக்கு செலவாக்கவும் இவ்வூர் [ப]ணம்தம்முடையவற்கத்தார்க்கும் விலையு வரியும் செல்வதாக சந்ராதித்யவரையும் அனுபவித்துப் (போதுக)

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 75/2022**

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஆத்தூர்	வரலாற்றுஆண்டு	: 13- ஆம் நூற்றாண்டு
ஊர்	: தியாகனூர்	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 3
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : பெருமாள் கோயில் உண்ணாழிகை மேற்குச் சுவர் பட்டிகை .

குறிப்புரை : மலைமண்டலப் பெருமாள் கோயில் ஸ்ரீவைஷ்ணவர்க்கும், திருவடிபிடிப் பார்க்கும் கொடுக்கப்பட்ட ஓலை. கல்லைக்குறிச்சி ஆளும்பிள்ளை ஏந்தலில் திருநாமத்துக்காணியாய் கடமை இறுத்துவரும் நன்செய்குழி ஆயிரத்துக்கும், நாற்பாற் கெல்லையில் திருநாமத்துக் காணி வரிசையில் பாதக்காணிக்கை மாவேந்தலுக்கும் அளித்துவரும் கடமை முதலான அனைத்தாயங்களையும் அமுதுபடி, சாத்துப்படி, திருப்பணி முதலானவற்றுக்கு முதலாக (உடலாக) இறையிலியாகக் கொடுத்ததைக் குறிக்கிறது. .

Summary : On the west wall base of the same temple. It records a royal order to the Nambimārs and the Srīvaishṇavak-kaṇkāṇis that the tirunāmaṭṭukkāni in Āḷumpiḷḷai ēntal in Kallaikkuṛichchi here after to be given for the food offerings and the maintenance of the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆறக்களூர் மலைமண்டலப் பெருமாள் கோயிலில் திருவடிப்பிடிக்கும் நம்பிமார்க்கும் ஸ்ரீ வை
2. ஷ்ணவக் கண்காணிகளுக்கும் இந்நாயனாற்கு கல்லைக்குறுச்சி ஆளும் பிள்ளை ஏந்தலில் திருநாமத்துக் காணியாய் கடமை இ
3. றுத்துவரும் நன்செய் குழி ஆயிரத்துக்கும் [நாற்]பாற்றெல்லையில் திருநாமத்துக் காணியாய் வாசையிலிப் பாதக்கடமை இறுக்
4. கும் மாவேந்தலுக்கும் இறுக்கும் கடமை பொன்வரி காசாயங் காத்திகைப்பச்சை ஊசிவாசி மாதா(மதிரு)சாந்தி நல்லெருது ந
5. ற்பசு நாட்டு வினிஓகம் காணிக்கை உட்பட்ட அனைத்தாயங்களும் உட்பட்டப் பதினைஞ்சாவது பசானம்முதல் இந்நாய
6. னாற்கு அமுதுபடி சாத்துப்படிக்கும் திருப்பணிக்கும் உடலாக இறையிலியாகக் குடுத்தோம் இப்படிக்கு (இவ்வோலை) பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரை செல்லக் கல்லிலும் செம்பிலும் இறையிலியாக வெட்டி . . . . (இறுதிப்பகுதி கிடைக்கவில்லை)

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 76/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: 4-ஆம் நூற்றாண்டு
ஊர்	: அம்மன்கோயில்பட்டி	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 1
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : உப்பாற்று வடகரைத் தேப்பாழிச் சுனைப்பாறை

குறிப்புரை : கோகூர் கிழார் பரம்பன் மகன் வியக்கன் போபன் கணதேவன் ஏற்படுத்திய சுனையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. சுனை என்பது கற்களுக்கிடையில் அல்லது பாறை இடுக்குகளில் இருந்து சுரக்கும் நீரைக் குறிக்கும். அச்சுனை நீரைச் சேர்த்துவைக்கும் குழி அல்லது பள்ளத்திற்கு ஆகு பெயராய் அந்த சுனைநீர்க் குழிக்கும் அமைந்துள்ளது. இந்த சுனை நீரைத்தேக்கிவைக்கும் குழியை அல்லது பள்ளத்தைத் தோண்டி வைத்தவன் வியக்கன் கணதேவன் ஆவான். தொட்ட சுனை அஃதாவது தோண்டப்பட்ட சுனை – தொட்ட சுனை என்பது இங்கு தொட சுனை என வந்துள்ளது. தொடுதல் என்றால் தோண்டுதல் எனப் பொருள்படும். தோண்டப்படும் கேணியை (கிணற்றை)த் "தொட்டனைத் தூறும் மணற்கேணி" என்பார் வள்ளுவர். குளம் தோண்டுவதை "குளம் தொட்டு வளம்பெருக்கி" எனப் பட்டினப்பாலை கூறும். பள்ளமாகத் தோண்டி அமைக்கப்படும் முத்திரையைத் "தொடுபொறி" எனக் கழக இலக்கியங்கள் கூறும். இக்கல்வெட்டு கொங்குப் பகுதியில் குறிப்பாகச் சேலம் மாவட்டத்தில் கிடைத்த தொன்மையான கல்வெட்டு என்ற பெருமைக்குரியது.

Summary : A rock out through called Tēppāḻippārai above the spring Tēppāḻi. Refers the excavation of a spring near which there cord is engraved by Viyakkaṉ Kōpaṉ Kaṇadēvaṉ, propbably the son of Parambaṉ the kiḻār of Kōkūr. In characters of 4th century A.D.

கல்வெட்டு :

1. பரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்கன்
2. கோபன் கணதேவன் தொ(ட்)ட சுனை.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 77/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	26
வட்டம்	:	ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ.1239
ஊர்	:	கருப்பூர்	இ.க.ஆண்டறிக்கை	:	246/1991-92
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	1
அரசு	:	சோழர்			
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : கைலாசநாதர் கோயில் உண்ணாழிகை மேற்குச் சுவர்க் குமுதம்.

குறிப்புரை : சோழ அரசன் மூன்றாம் இராசராசன் காலத்தில் சேலம் சூழ்ந்த சேரநாட்டுப் பொன்பரப்பிப் பொன்பரப்பீசுவரமுடையார் கோயிலில் உள்ள சேரமான் பெருமாள் திருக்காவணத்தில் சிரீ ருத்திரர், சிரீ மாகேசுவரர், வீரபத்திரர், தருமக்காரர், தக்கம்வெட்டிகள் பொற்கோயில் கைக்கோளர் மற்றும் பிறரும் கூடி கருப்பூர் உடையார் உய்யக்கொண்ட நாயனார்க்கு கருப்பூரில் உள்ள ஆட்டுக்கிடை ஒன்றுக்கு கால் ஆண்டுக்கு ஒரு மூடும் (மூடு=குட்டிபோடாத இளம் பிருவை) ஒரு குளக நெய்யும் அளிக்க வேண்டும் என தீர்மானம் செய்தனர். கோயில் வளாகத்தில் யாரேனும் ஆடு கொன்றார் உண்டானால் அவர்கள் சிவத்துரோகம் செய்தாரும் அர்ச்னையை மறுத்தாரும் பட்டதுன்பம் படுவார்கள். இவை தவறின் பெருமாகேசுவரர்களுக்குச் சோறிட்டு வருவார்களாகவும் பணித்தனர். கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளதால் முழுமையான செய்திகளைப் பெற இயலவில்லை.

Summary : On the west wall of the Kailāsanātha temple. Begins with the order of Chandēsvaraṉ, the accountant of the Siva temple. It records the meeting of the temple priests, officials, pilgrims and others at the pavilion of Sēramāṉ Peruml̤ Tirukkāvaṇam at Poṉparappiṉa Īsvaramuḍaiyār temple at Ponparppi and passed a resolution. According to which that no sheep is to be slaughtered and also specifies the measure of ghee to be supplied from every sheep.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சண்டேச்சுவரனோலை சாகரஞ்சூழ் வையத்துக் கண்டீச்சுவரன் கருமமாராய்க பண்டே அறஞ்செய்தான் செய்தா னறங்காத்தான் பாதந் திறம்பாமற் சென்னிமேல் வைத்து ஆதி தண்டி திரிபுவனச்-
2. சக்கரவத்திகள் ஸ்ரீஇராசராசதேவற்கு யாண்டு உ௰௬ தாவது சேலஞ் சுற்றிய சேரநாட்டுப் பொன்பரப்பியில் நாயனார் பொன்பரப்பீச்சுவரமுடைய நா(யனார்) கோயிலில் சேரமான் பெருமாள் திருக்கா-
3. ணத்து சிரீருத்திரரும் சிரீ மாகேச்சுவரரும் பலமண்டலத்து தேசாந்திரத்தரும் வீரபத்திரரும் தக்கம் வெட்டிகளுங் குடலபிரிகளு முவச்செகிகள் நம்பியடிகளுந் தொண்டும் பிச்சம் பெற்றாருங் கவரிப்பிணாப் பிள்ளை-

4. களும் பொற்கொ(யில்) கைக்கோளரும் மற்றும் இம் மாற்கத்துக்குக் கடவாருந் நிறைவற நிறைந்து குறைவறக்கூடி இந்நாட்டுக் கருப்பூரில் உடையார் உய்யக்கொண்ட நாயனாற்கு அறங்குடுத்த பரிசாவது இக் கருப்-

5. பூரில் ஆட்டுக்கிடை கால் ஆட்டைக்கு ஒரு மூடும் ஒரு குளக நெய்யும் குடுப்பதாகவும் இவர்களாட்டு வளாகத்து ஆடு கொன்றாருண்டாகில் சிவத்துரோகிகள் பட்டதும் சிரீயர்ச்சினை சொக்க நாயனாராணையு ம-

6. றுத்தார் பட்டதும் படுவார்களாகவு [மி]வைக்குத் தப்புவார் பெருமாகேச்சுவரர்க்குச் சோறிட்டு வருவார்களாகவும் இப்படி அருளால் நாற்பத்தெண்ணாயிர சிரீகரணத்தா னெழுத்து நன்றாக...

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 78/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	14
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ.1268
ஊர்	: கருப்பூர்	இ.க.ஆண்டறிக்கை	:	247/1991-92
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	2
அரசு	: போசளர்			
அரசன்	: வீரராமநாதன்			

இடம் : கைலாசநாதர் கோயில் உண்ணாழிகை தெற்குச் சுவர்க் குமுதம்.

குறிப்புரை : போசள அரசன் வீரராமநாதன் காலத்தில் குளமுக்கில் உள்ள பரமன்குருகாவியன் என்பான் நாயனார் உய்யக்கொண்ட நாயனார்க்கு திருநுந்தாவிளக்கொன்றுக்கு நிலம் அளித்ததைக் குறிக்கிறது. கல்வெட்டின் இறுதி ஓம்படைப் பகுதி கிடைக்கவில்லை.

Summary : On the west wall of the same temple. Record of the Hoysāḷa king Vira-Rāmanatha in his 14th year. Registered the gift of land by Paramaṉ Karūkāvi for burning a perpetual lamp to the god Uyyrakkoṇḍa-nāyanār at Karuppūr in Sela-nāḍu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீசக்கரவத்திகள் ஸ்ரீஹொஜல வீரராமநாத தேவற்கு யாண்டு பதினாலாவது சேலநாட்டில் கருப்பூரில் நாயனார் உய்யக்கொண்ட நாயனார்க்கு குளமூக்கில் பரமன் குருகாவியேன் நாயனார்க்குத் தி[ரு]-
2. நந்தா விளக்குக்கு விட்ட பட்டிகறை யொன்றும் இந்த திருநந்தா விளக்குச் சந்த்ராதித்தவரை செல்லக்கடவது இந்த . . . . . .

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 79/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	-
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	18-ஆம் நூற்றாண்டு
ஊர்	: கருப்பூர்	இ.க.ஆண்டறிக்கை	:	248-1991-92
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	3
அரசு	: ---			
அரசன்	: ---			

இடம் : கைலாசநாதர் கோயில் உண்ணாழிகை அருகில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : கைலாசநாதர் கோயிலில் நகரத்து ஆவுடைச் செட்டியாரும் அவரைச் சார்ந்தாரும் செய்த ஒரு கட்டடத் திருப்பணியைக் குறிக்கிறது. ஆவுடைச் செட்டி என்பது அவுடைச் செட்டி என பிழைபட எழுதப்பட்டுள்ளது.

Summary : One stone slab erected in the same temple. Record that the Kailāsanātha temple was built by Āvudai cheṭṭi and others of the nagaratar community.

கல்வெட்டு :

1. வலசை ஸ்ரீ கருப்பூர்
2. [ை]கயிலாசநாதர் கோவில்
3. நகரத்து ஆவுடை செட்டி
4. உள்பட்டார் கட்டின
5. பேர்

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 80/2022**

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: 6-ஆம் நூற்றாண்டு
ஊர்	: கேதுநாய்க்கன்பட்டிப்புதூர்	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: வட்டெழுத்து	ஊ.க. எண்	: 1
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : பெரியேரி மதகுக்கருகில் புதைந்து கிடந்த நடுகல்.

குறிப்புரை : நடுகல்லின் இடப்புறம் எழுத்துகளும் வலப்புறம் வீரனின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்தின் முதல்வரி சிதைந்துவிட்டது. வீரன் இடக்காலை முன்னும் வலக்காலைப் பின்னும் வைத்து இடக்கையில் வில்லேந்தி வலக்கையில் வாளை ஓங்கிப் பாய்கின்ற நிலையில் உள்ளான். தலையில் துண்டு, இடையில் கீழ்ப்பாய்ச்சிக்கட்டிய அரையாடை. ஆடையின் மேல் இறுக்கிக்கட்டிய கச்சைத் துண்டின் நுனி பின்புறம் வீசிப் பறக்கிறது. கல்வெட்டின் மேற்பகுதி சிதைந்துள்ளதால் அரசன் பெயர் தெரியவில்லை. அரசன் தாயனூர் நாடாளா நிற்க அவனது எட்டாவது ஆட்சியாண்டில் கொங்கிளவரசர் மக்கள் பொற்சாத்தனார் என்பவர் தாயனூர்மேல் தொறுக்(ஆநிரை)கொள்ள வந்தபொழுது அவரை எறிந்து தொறுமீட்டு வழுதியரையன் என்பான் பட்டான். அவனுக்காக இக்கல் எடுக்கப்பட்டுள்ளது.

Summary : On a hero stone set up on the bank bund, Sakkilicci ēri. Beginning lost. Records the death of a hero named Valutiyārayan̲ while rescue in the cattle raid at Tāyan̲ūr.

கல்வெட்டு :

1.. . . . .
2. . . . . . டாவது தாய-
3. னூர் நாடாள பொன்னந்-
4. தியார் சேவகர் தாயனூராள்-
5. வோர் கொங்கிளவரசர் ம-
6. க்கள் பொற்சாத்தனார் தா-
7. யனூர்மேல் வந்த ஞான்று
8. எரிந்து தொறு மீட்டுப்
9. பட்டான் வழுதியரய
10. ன் பத்(திர)ன் கல்.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 81/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: 6-ஆம் நூற்றாண்டு
ஊர்	: கேதுநாயக்கன்பட்டிப்புதூர்	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: வட்டெழுத்து	ஊ.க. எண்	: 2
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : பெரியேரி மதகுக்கருகில் புதைந்து கிடந்த நடுகல்.

குறிப்புரை : கங்கவரசர் மேல்நாடாளுகின்ற பொழுது தாயனூர் நாட்டைக் காரிப் பெருமா(ஆ)ள கோயிற்றமர் குலமாணிக்க இளவரையர் மகன் கடத்தூர் மேல்படை வந்த பொழுது குத்திப்பட்டான். இதில் காரிப்பெருமா என்பதற்கு அடுத்துவரும் எழுத்துகள் புரியவில்லை. திரு பூங்குன்றனார் பெருமாந்தனார் என வாசித்துள்ளார். அதே போல் கடைசிச் சொல்லும் புரிபடவில்லை. எதிர்கால வாசிப்பில் இவை தெரிய வரலாம். கல்லில் வீரனுடைய உருவம் இடக்கையில் வில்லேந்தி வலக்கையில் குறுவாள் பிடித்து நிற்கிறது. இடையில் அரையாடை. தலையில் தலைப்பாகை அணிந்து நேர்பார்த்து நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. வீரனுடைய உடலில் அம்பு பாய்ந்துள்ளதும் காட்டப்பட்டுள்ளது.

Summary : Another hero stone. At the time of Gaṅgavaraisar and Karippe-rumāl were ruling Mel-nāḍu and Tāyan̲ūr. respectively, the Ganga army made a campaign on Kaḍattūr. In that campaign the prince of Kulamāṇikka Iḷavaraiyar was dabbed and passed away.

கல்வெட்டு :

1. கங்கவரச(ர்) மேல் நாடாளா நிற்க தா-
2. யன்னூர் நாடு காரிபெருமா . . ள அ-
3.(வ)ர் கொயிற்றமர் குலமாணிக்க இ-
4. ளவரையர் மகன் கடத்(தூ)ர் மேற்-
5. கங்கப்படை வந்த ஞான்-
6. று குத்திப்பட்டான் க(ல்லி) . . னை.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 82/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	14
வட்டம்	:	ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ. 1230
ஊர்	:	கோட்டைமேட்டுப்பட்டி	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	1
அரசு	:	சோழர்			
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			
இடம்	:	சாலை ஓரமுள்ள கல் .			

குறிப்புரை : வீரசோழமண்டலத்துப் பூவாணியநாட்டு வலிவாட்கையான எழுகரைநாட்டு இடங்கைமாசேனை அத்தாணி நல்சாலியர் முதலாக வணியர் உட்பட இடங்கை தொண்ணூற்று நியாயத்தார் வழங்கிய நிலம் அல்லது ஊர்பற்றிய செய்தி. கல்வெட்டு சிதைந்துள்ளதால் யாருக்கு எதற்காகக் கொடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

Summary : A stone slab on the road side. The end portion of the lines of the inscription is mutilated. A record in the 14th of the chōḻa king Rājarāja (3rd). Seems to records the gift of land by the madaliyar Aṭṭāṇi Nalsāliyar and other of the ldaṅgai māsēṉai and Iḍaṅgai toṉṉuūṟṟu-oṟupadu of Valivātkai alias Ēḻukarainādu in Poovāṇiya nāḍu in Virachōḻamaṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ராஜராஜ
2. (தே)வற்கு யாண்டு ௰ச . . . பதி-
3. நாலாவது வீரசோழ மண்டலத் -
4. துப் பூவாணிய நாட்டு வலிவாட்-
5. கையான எழுகரைநாட்டு இடங்-
6. கை மாசேனை அத்தாணி நல்
7. சாலியர் முதலாக வாணிய . . .
8. . . . இடங்கை தொண்ணூ -
9. ற்றொறுபது நியாயத்து .
10. இவ்வூர் அஞ்சிலொந்று (நா)-
11. ற்பால் கீழ் நோ(க்கியகி)-
12. ணறும் குடுத்தோம் . .
13. . . ரோம் இத்தன் . . . . .
14. தலாக இடங்கை . . . .

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 83/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	19-ஆம் நூற்றாண்டு
ஊர்	: செட்டிப்பட்டி	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	:	1
அரசு	: ---			
அரசன்	: ---			

இடம் : செட்டிப்பட்டிப் பாறையிலுள்ள கல்வெட்டு.

குறிப்புரை : இக்கல்வெட்டில் வெறும் பெயர் மட்டும் உள்ளது. எதற்காக இக் கல்வெட்டு வெட்டப்பட்டது என்ற விவரம் இல்லை. கொங்கு நாட்டில் குலப்பெயர்கள் பெரிதும் இயற்கைப்பொருள்களையே அடையாளமாகக் கொண்டிருக்கும். இங்கு தனிப்பட்ட ஆளின் பெயரால் குலப்(கோத்திரம்) பெயர் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

Summary : On a boulder at Cheṭṭippaṭṭi. Mentions certain Nāgappaṉ son of Koḷanda gavundan. In about late character.

கல்வெட்டு :

1. சவுமிய ஸ்ரீ ஆவணி மீ
2. திம்மகவுண்டன் கோத்தரம்
3. கொளந்தைகவுண்டன் கொம[ா]ரன்
4. நாகப்பன்.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 84/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 17
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: பொ.ஆ.1272
ஊர்	: பெரியசோரகை	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 1
அரசு	: போசளர்		
அரசன்	: வீரராமநாதன்		

இடம் : சிவன் கோயில் தெற்குச் சுவர்க் குமுதம்.

குறிப்புரை : வடபூவாணிய நாட்டுச் சோறகை முதலிகளில் ஆந்தை இளமன் முதலி என்பவர் நாயனார் பிராநீச்வரமுடையாற்குத் திருக்கற்றளி செய்துள்ளான். இந்நாயனாற்கு சாத்துப்படி அமுதுபடிக்கு திருப்பணிகளுக்கு முதலாக (உடலாக) இவ்வூர் முதலிகள் தெற்குவாசல் சிற்றேரிக்கீழ் திருநாமத்துக் காணியாக நூற்றைம்பது குழியும், சோறகையில் ஊரேரிச்சமுத்திரம் என்று பெயர்பெற்ற ஏரியில் நன்செய்யாக இருநூறு குழியும் நெட்டம்மன்பட்(டி) என்று பெயர்பெற்ற இடத்தில் புன்செய் நிலமும் அளித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டின் இடையில் சில சொற்கள் சிதைந்துள்ளன. அவை ஆவணத்தில் வந்துள்ள கல்வெட்டோடு ஒப்பிட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. அப்பகுதிகள் அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ளன.

Summary : On the south wall base of the Siva temple. A record in he 17th year of the Hoysāḷa king Vīra Rāmanātha dēvar. Records the stone construction of the Pirānīsvaramuḍaiya Nāyanār temple at Sorakai in Vaḍapoovāniyanāḍu in king alias Vīra Chōḻa manḍalam and gift of land for food offering and other services in the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஷகூஞுஊவனச் சக்கரவத்திகள் ஹொசள வீர இராமனாத தேவற்கு யாண்டு யஎ ஆவது கொங்கான வீரசோழ மண்டலத்து வடபூவாணியநாட்டுச் சோறகையில் முதலிகளில் ஆந்தை இளமன்முதலியேன் இன்னாயனார் பிராநீச்சிரமுடைய நாயநாற்குத் திருக்கற்றளி(த்) திருப்பணி செய்வித்தேன்
2. இளமன்முதலியேன் இன்னாயனாற்கு அமுதுபடி சாத்துப்படி திருப்பணிக்கும் உடலாக........... ஏரிக்கீழ் நஞ்செய் நிலம் திருநாமத்துக்காணியாக விட்ட குழி இருநூற்றைம்பதும் சோறகையில் ஊரேரிச்சமுத்திர மென்று பேர்பட்ட ஏரியில் நன்செயாக ஏரிகீழ் விட்ட குழி இருநூறும் புன்செய் நெ-
3. ட்டம்மன்பட்டி கொல்லையில் நாற்பாலெல்லைக்கு ...... ங்கிழக்கெல்லை புளியமடைக்கு மேற்கும் மேற்பாற் கெல்லை செருவிடை யிட்டேற்கு கிழக்கும்

வடக்கெல்லை ஆரியூர் இட்டேற்கு தெற்கும் தெற்கெல்லை இரண்டாவது செருவிடை இட்டேற்கு வடக்கும் இக்கொல்லைக்கு இதெல்லையாகவும்

4. இத்தன்மஞ் சோறகையில் நாயனார் பிராநீச்சரமுடையாற்கு [திரு நந்தவான (த்). . . திருத்தோப்புக்கு] கிழக்கெல்லை கழனியான வேளார் தோட்டத்துக்கு மேற்கும் தெற்கெல்லை கழனிக்கு வடக்கும் மேற்கெல்லை அகழிக்கு கிழக்கும் வடக்கெல்லை குளாயர் கிணற்றுக்குத் தெற்கும் இத்தோப்புக்கு இதெல்லையாகவும் இன்னாயனாற்கு திருநாமத்துக் காணியாக விட்டோம் இச்சோறகையில் ஊரவரும் முதலிகளும்.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 85/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: கலி 4646 பொ.ஆ.1545
ஊர்	: தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	: 27/1900
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: VII/27
எழுத்து	: தமிழ்	ஊ.க. எண்	: 1
அரசு	: விசயநகர்		
அரசன்	: சதாசிவராயர்		

இடம் : இளமீசுவரர் கோயில் முன்மண்டப கிழக்குச்சுவர் நுழைவு வாயிலின் இடப்புறம்.

குறிப்புரை : கலியாண்டு 4646-இல் (பொ.ஆ.1545) விசயநகர அரசன் சதாசிவ ராயனின் காரியகர்த்தரான தண்பொறுப்பையனுக்கு கொங்கான வடபூவாணியநாட்டு தாரமங்கலத்து முதலிகள் வணங்காமுடி முதலியார், நல்லுடையப்பர், கோட்டைமுதலியார், இம்மடிகட்டிமுதலியார் ஆகியோர் ஒப்பப்பையன் தம்பி திப்பப்பையனைக்கொண்டு இந் நாட்டு இராமகூடலை வணங்காமுடிசமுத்திரம் என்று பெயர் மாற்றி அக்காரமாக விட்டதைக் குறிக்கிறது. இம் முதலிகளில் வணங்காமுடி முதலியருக்கு மஸ்தக் குடோரி மகுடசூடாமணி வண்ணத் தடுக்கும் வாடாமாலையும் புலிக்கொடியும் உள்ள வணங்காமுடி என்ற விருதுகள் கொடுக்கப்பட்டுள்ளதால் இவர் அப்பகுதி ஆட்சித் தலைமை பூண்டவராகக் காணப்படுகிறார்.

Summary : A record of the Vijayanagarā king Sadasivadēva-māharāyar in Kali era 4646. Registered the gift of a village Rāmakūḍal after renamed as Vaṇaṅgamuḍisamudram as agragāra.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விஜயாக்ஷப்யய கலியுக ஸம்வத்ஸரஜ சதுகாசயிசு இதன்மேற் செல்லாநின்-
2. ற பிலவங்க வருஷஜ ஆவணி மீஉயிசு உ வூவபக்ஷத்து ஏகாதேசியு முத்திராடமுஞ் சுக்-
3. கிற வாரமும் பெற்ற நாள் ஸ்ரீமன்மஹாராஜாதிராஜ ராஜபரமேஸ்வர ஸ்ரீவீரப்ரதாப சதாசி-
4. வ தெவமஹாராயர் ப்ரதிவிராஜ்யம் பண்ணியருளுகையில் அவர் காரியத்துக்குக் கற்த்தரான தண்பொ-
5. றுப்பையனுக்கு முள்வாய் சூழ்ந்த குன்றத்தூர்த் துற்கஞ் செல்லும் நாளிற் கொங்கான வீரசோழ
6. மண்டலத்து வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து வெள்ளாழர் நீலங்கிழார் மஸ்தக்கு கிடாரி ம-

7. குட சூடாமணி வண்ணத் தடுக்கும் வாடாதமாலையும் புலிக்கொடியுமுள்ள வணங்காமுடி முதலியார் ந-
8. ல்லுடை அப்பர் கோட்டைமுதலியார் இம்மடி கட்டிமுதலியார் இன்னாட்டு ராமகூடலுக்கு ஒப்-
9. (ப)ப்பையன் தம்பி திப்பப்பையனைக்கொண்டு புணூ காலத்தில் காவேரிக் கரையில் தாரைவாற்பி-
10. த்து யஊ ஸாதனத்துக்குத் தளத்துக் கரணிக்கர் கையெழுத்தும் எழுதிவிச்சுக் கொண்டு வண-
11. ங்காமுடிசமுத்திரமென்னும் நாமதேயம்பண்ணி அக்கிறாரம் விட்டேன் இதுக்கெல்லை கிழ-
12. க்கு வணங்காமுடிசமுத்திர மென்னுங் குளமறிதியாகவுந் தெற்குப் பிள்ளாக்-கவுண்டன்[1.]

1. கல்வெட்டு இதோடு நின்றுவிட்டது.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 86/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	16-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	2
அரசு	:	---			
அரசன்	:	கட்டிமுதலி			

இடம் : இளமீசுவரர் கோயில் முன்மண்டபம் கிழக்குச்சுவர்.

குறிப்புரை : உலகிலுள்ள பொருள்கள் யாவும் பற்பல எண்ணிக்கையில் உள்ளன. சூரியர்கள் (ஆதித்தியர்) பன்னிருவர், ஈசர் பதினொருவர், திசைகள் பத்து, கங்கை ஒன்பது, மலைகள் எட்டு, கடல் ஏழு, ஆரல் மீன் (கார்த்திகை நட்சத்திரம்) ஆறு, காமவேளின் கணைகள் ஐந்து, மறைகள் நான்கு, சுடர் மூன்று, சாதி இரண்டு , ஆனால் கட்டிமுதலியின் சொல் (வார்த்தை) என்றும் மாறாது ஒன்றே ஒன்று மட்டுமே எனப் புகழ்ந்து கூறும் பாடல் கல்வெட்டு..

Summary : On the East wall of the Iḷamīśvara temple. Records the words of Kaṭṭimudali is never failed.

கல்வெட்டு :

1. செங்கதிர் பன்னிரண் டீசர்பதினொன்று திக்குப்
2. பத்து கங்கையு மொன்பது வெற்பெட்டெழு
3. கடல் கார்த்திகையா றை[ஞ்]கணை நான்மறை மு[ற்]சு-
4. டர் சாதியவை யிரண்டு மங்கை வரோ[தை]யன்
5. கட்டிமுதலிதன் வார்த்தை யொன்றே வ

செங்கதிர் பன்னிரண் டீசர்பதி னொன்று திக்குப்பத்து
கங்கையு மொன்பது வெற்பெட் டெழுகடல் கார்த்திகையா
றைங்கணை நான்மறை முச்சுடர் சாதியவை யிரண்டு
மங்கை வரோதயன் கட்டிமுதலி வார்த்தை யொன்றே வ

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 87/2022***

மாவட்டம்	: சேலம்		ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஓமலூர்		வரலாற்றுஆண்டு	: கலி.4640 பொ.ஆ.1539.
ஊர்	: தாரமங்கலம்		இ.க.ஆண்டறிக்கை	: 28/1900
மொழி	: தமிழ்		முன்பதிப்பு	: தெ.இ.க.VII.-28
எழுத்து	: தமிழ்-கிரந்தம்		ஊ.க. எண்	: 3
அரசு	: விசயநகர்			
அரசன்	: அச்சுதராயர்			

இடம் : இளமீசுவரர் கோயில் முன்மண்டபம் கிழக்குச்சுவர்.

குறிப்புரை : அச்சுதராயர் காலத்தில் (பொ.ஆ.1539) வணங்காமுடி முதலியார் நல்லுடையப்பர் கோட்டைமுதலியார் இம்மடி கட்டிமுதலியார் காவேரிப்பட்டி என்ற ஊரை கோட்டைசமுத்திரம் என்று பெயரிட்டு அக்கிறகாரமாக அளித்த செய்தியைக் குறிக்கிறது.

Summary : On the east wall of the front maṇḍapa in the same temple. A record of the Vijayanagara king Achyudarāya in Kali era 4640. Records the gift of the village Kāvērippaṭṭi in Poovāṇiyanāḍu as agragara after renaming it as Kōṭṭai- samudaram by the Kattimudaliyārs of a Tramaṅgalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விஜயாசுஷபாயய கலியும வருஷ௳ சதுகூாசய இதன்மேற் செல்லா நின்ற சாறுவ(ரி) வருஷ௳
2. சித்திரை மீ க உ ஸ்ரீவீரவுதாப அச்சுதஷெவ ஊஹாராயர் வுழ்விராஜூம் பண்ணியருளுகையில் அவர் வாயில்
3. கும்மளண்ணகளுக்கு குன்றத்தூர் துற்கஞ்செல்லு நாளில் கொங்கான வீரசோழ மண்டலத்து வடபூ-
4. வாணிய நாட்டுத் தாரமங்கலம் வெள்ளாழர் நீலங்கிழார் ஊஷ்க குடோரி மகுடசூடாமணி வண்ணத் தடுக்-
5. கும் வாடாமாலையும் புலிக்கொடியும் உள்ள வணங்காமுடி முதலியார் நல்லுடையப்பர் கோட்டை
6. முதலியார் இம்மடி கட்டிமுதலியார் இன்னாட்டு காவேரிப்பட்டியைக் கோட்டைசமுத்திர மென்னும் நா-
7. மதேயம் பண்ணி அக்கிறாரம் விட்டேன் யிதுக்கெல்லை கிழக்குப் புலிக்கல் தெற்குச் சிற்றாறு

8. மேற்கு காவேரி வடக்கு கலிவிடங்கந் தெற்கு ஏரி யறுதியாகவு முண்டான சகல ஸ்வாமியமுஞ் சந்திராதித்தி-

9. யவரை நடக்கக் கடவதாகவும் யித்தரூமத்தை நடத்தினவன் தன்னிட வங்கிஷ பரம்பரையாகச் செய்த பா[1]

1.தொடர்ந்து எழுத்துகள் கிடைக்கவில்லை.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 88/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: ---
ஊர்	: தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	: 22/1900
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.7-22
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 4
அரசு	: சோழர்		
அரசன்	: கோனேரின்மை கொண்டான்		

இடம் : இளமீசுவரர் கோயில் தெற்குச்சுவர்க் குமுதப்படை.

குறிப்புரை : கோனேரின்மைகொண்டானின் ஆறாவது ஆட்சியாண்டில் பூவாணிய நாட்டுத் தாரமங்கலத்தில் நல்லுடையப்பர் வைத்த ஸ்ரீலக்ஷ்மணச் சதுர்வேதி மங்கலத்துப் பட்டர்களுக்கு பல ஏரிகளால் நீர்பாயும் நிலங்களை அனைத்தாயங்களுடன் இறையிலியாகத் தானம் அளித்ததைக் குறிக்கிறது..

Summary : On the south wall of the maṇḍapa in front of the Iḷamīśvara temple. A record in the sixth year of the king Kōnēriṉmai-koṇdān records the gift of wet lands in various villages to the Brāhmaṇās of Sri Laksmaṇā-chadurvedimaṅgalam in Poovāṇiya nāḍu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் கோனேரின்மேல் கொண்டான் கொங்கான வீரசோழமண்டலத்து வடபூவாணிய நாட்டு தாரமங்கலத்தில் நல்லுடையப்பர் வைத்த அகரம் ஸ்ரீ லக்ஷ்மண சதுர்வேதிமங்கலத்து பட்டர்களுக்கு இ[வ்]வூரில் காரை[க்]குளத்தால் நீர்பாயும் நிலங்கள் உள்ளவையும் செயப்பெருமா ளேரியாலும் பெருமாகாமிண்டனேரியா-
2. ல் நீர்பாயும் கஞ்சே மலைநாயனார் தேவதானமான ஏரிக்கு மேற்க்கு உள்ள நிலமும் கண்ண[ந்]தை ஏரியால் நீர்பாயும் தண்ணாயக்கன் ஏரிக்கு வடக்குள்ள நிலமும் கீழைப் பொய்கரையால் நீர்பாயும் நிலமும் இந்நாட்டு களக்குளத்தில் நான்கெல்லை யுழ்ப்பட்ட நன்சை புன்சை நத்தம் ஊருணி உழ்பட்ட இவையும் சேமப்பள்ளி ஏரி உழ்ப்பட்ட குளங்களால் நீர்பாயும் நிலமு
3. முள்ள இவையும் காரிமங்கலத்தில் தங்கள் குடியிருப்பு நத்தமான வா[ஸ்து] வும் வாஸ்துஶேஷமும் ஆறாவது ஆடிமாத[ம்]முதல் [த]ங்களுக்கு முதலடங்க ஸர்வமான இறையிலியாக தந்தது இன்னிலங்களால் வரும் நெல்கடமை காசுகட(மை) . . . . யம் பஞ்சுபீலி சந்துவிக்கிரகம் வாசல்வினியோகம் காணிக்கை காத்திகைப்பச்சை ஆடிப்பூரப்பச்சை பிள்ளையார் நோன்புத்தேவை ஆனைச் சா-

4.லை குதிரைப்பந்தி கருஆழ்த்தாழ்வு தச்சுத்தாழ்வு தறிஇறை செக்கிறை தட்டொலி தட்டார்ப்பாட்டம் பாசிப்பாட்டம் ஒழுக்குநீர் மீன்பாட்டம் தோலொட்டு ஏர்வரி இனவரி வாசல்வரி ஆள்வரி நல்லெருது நல்ப்பசு காணம் உள்ளபட்ட இவையும் வரியிலார் கணக்கிலும் கழிக்கும்படி சொல்லிவிட்டோம் இன்னாள் முதல் தாங்கள் கைக்கொண்டு காரும் பசானமும் ஒருபூவும் மறுவும் வம்புங் கடை-

5. ய்பூவும் கமுகும் தெங்கு வாழை கொழுந்து மஞ்சள் இஞ்சி கருணை கரும்பு செங்கழுநீர் உட்பட்ட வான்பயிரும் மாப் பலா இலுப்பை புளி உழ்பட்ட பல மரங்களும் புல்லு வரகு தினை சாமை இறுங்கு ஆவணக்குப் பருத்தி வழுதிலை பூசணி எள்ளுக் கொள்ளு பயறு அவரை துவரை உழ்ப்பட்ட புன்பயிரும் தங்கள் செதும் செய்வித்துங் கொள்ளுவாராகச் சொல்லிவிட்டோம்

6. இப்படிக்கு இ(வ்)வோலை பிடிபாடாக கொண்டு அதிகாரகணக்கிலும் நாட்டுக் கணக்கிலும் கழிப்பித்து கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக்கொண்டு சந்த்ராதித்யவத் செல்ல அனுபவித்துப் போதுக இவை துஞ்சலூருடையான் எழுத்து இயாண்டு ஆறாவது நாள் முப்பத்து நாலு உ [illegible] இவை பல்லவராயர் எழுத்து உ

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 89/2022*

மாவட்டம்	: சேலம்		ஆட்சியாண்டு	: 27
வட்டம்	: ஓமலூர்		வரலாற்றுஆண்டு	: பொ.ஆ.1277
ஊர்	: தாரமங்கலம்		இ.க.ஆண்டறிக்கை	: 30/1900
மொழி	: தமிழ்		முன்பதிப்பு	: தெ.இ.க.7-30
எழுத்து	: தமிழ்-கிரந்தம்		ஊ.க. எண்	: 5
அரசு	: பாண்டியர்			
அரசன்	: சுந்தரபாண்டியன்			

இடம் : இளமீசுவரர் கோயில்மேற்குச்சுவர் குமுதப்படை.

குறிப்புரை : பாண்டிய அரசன் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் உடல் நலனுக்காகவும் கண்டிய தேவர் வாளுக்கும் தோளுக்கும் நலம் பயக்கவும் வேண்டி கண்டியதேவரும் பூவாணிய நாட்டவரும் பூவாணிய நாட்டுக் கோனகப்பள்ளி என்னும் ஊரிலுள்ள நஞ்சை புஞ்சை நிலங்களை அனைத்து உடைமைகளுடன் இளமீசுவரமுடைய நாயனாற்கு இறையிலியாக அளித்ததைக் குறிக்கிறது.

Summary : On the west wall of the central shrine of the Ilamīśvara temple. A record in the 27th year of the Pāṇḍiya king Tribuvaṉa cakkaravarttikaḷ Sri Sundara Pāṇḍiya dēva. Records the gift of a village Konagappaḷḷi by Kandiyadevar lord of Vada Poovaṉiya Nāḍu for Iḷamīśvaramuḍaiya-Nāyanār and for the health of the king.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ உகூ [மெய்க்]கீத்திக்குமேல் கோச்சடபன்மரான த்ரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு உயஎ வது தைமாதம் முதற்றியதி கொங்கான வீரசோழமண்டலத்து வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து உடையார் இளமீஸ்வரமுடைய நாயனார்க்கு இந்நாடுடைய தே

2. வர் கண்டியதேவரும் இந்த நாட்டவரும் பெருமாள் திருமேனிக்கும் தேவர் கண்டியதேவர் வாளுக்குந் தோளுக்கும் நன்றாக இற்றை நாளில் உதகபூர்வமாக ஸர்வமாந்யமான இறையிலியாகக் குடுத்த ஊராவது இந்நாட்டுக் கோனகப்பள்ளி நன்செய் புன்செய் நாற்பாலெல்லையும் மேனோக்கின மரங்களும் கீணோக்கின கிணறுகளும்

3. மற்றும் இவ்வூரில் எப்பேற்பட்ட ஸஉஷூவர்யாஷிகளும் உட்பட இற்றைநாளில் சந்த்ராதித்தவரை செல்லக்[கடவதாக] உதகபூறுவமாகக் குடுத்தோம் உடையார் இளமீஸ்வரமுடைய னாயனார்க்கு இக்கண்டியதேவரும் இப்பூவாணிய நாட்டவரும்.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 90/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: கலி 4642.பொ.ஆ.1531
ஊர்	: தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	: 21/1900
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.VII/21
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 6
அரசு	: விசயநகர்		
அரசன்	: அச்சுததேவராயர்		

இடம் : இளமீசுவரர் கோயில் தெற்குச்சுவர் குமுதப்படை.

குறிப்புரை : விசயநகர அரசன் அச்சுததேவராயர் காலத்தில் கொங்கான வீரசோழ மண்டலத்துப் பூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து வெள்ளாளர் நீலங்கிழார் வணங்காமுடி முதலியார், நல்லுடையப்பர் கோட்டைமுதலியார் நல்லுடையப்பர், இம்மடிகட்டிமுதலியார் ஆகியோர் சிதம்பரத்தில் சிற்றம்பலமுடையார் (அன்னாயனார்) கோயிலுக்குத் தெற்கில் மூன்றாம் தெருவில் செங்கழுநீர்ப்பிள்ளையார் திருமுற்றத்துத் தென்சிறகில் நிலம் விலைகொண்டு வணங்காமுடி என்னும் பெயரால் ஒரு மடம் கட்டிவைத்தனர். அம்மடத்துக்கு வடபூவாணிய நாட்டு படைவீட்டு நன்செய் புன்நெய் நாற்பால் எல்லைக்குட்பட்ட அனைத்தாயங்களையும் தானமாக அளித்ததைக் குறிக்கிறது.

Summary : On the south wall of the maṇḍapa in front of the Ilamīśsvarar temple. A record of the Vijayanagara king Achutaraya in Kaliyuga 4642. Records the building of a matha at chidambaram by a native to Taramangalam and registers the grant of the proceeds of certain taxes for the maintenance of the matha.

கல்வெட்டு :

1. உ ஶ்ரீஹஸ்தூ

2. ஸ்வஸ்திஸ்ரீ விஜயாப்யுதய கலியுக வருஷம் சதுஸ்ரசயஉ இதன்மேல் செல்லா நின்ற பிலவ வருஷம் சித்திரை மீ௳ க உ ஸ்ரீமன் ராஜாயிராஜ பரமேஶ்வர ஸ்ரீ அச்சுதஷெவ மஹாராயர் விஜயநகர ஸிஂஹாஸனத்தில் இருந்து ராச்சியம் பண்ணி அருளாநின்ற காலத்து அவர் ஊழியம் இராமப்பனாயக்கற்குக் குன்றத்துர் துற்கம் செல்லு மன்னாளில் கொங்கான வீரசோழ மண்டலத்து வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலம்

3. வெள்ளாழர் நீலங்கிழார் மஷூக குடோரி மகுட சூடாமணி வண்ணத்தடுக்கும் வாடாமாலையும் புலிக்கொடியும் யுள்ள வணங்காமுடி முதலியார் நல்லுடையப்பர் கோட்டைமுதலியார் இம்மடி கட்டிமுதலியார் சிதம்பரத்தில் அன்னாயனார் திருக்கோயிலுக்குத் தெற்கு மூன்றாம் திருவீதியில்

செங்கழுநீர்ப் பிள்ளையார் சன்னதிப்புரத்துத் தென்சிறகில் நிலம் ட ஊாக்குக் கொண்டு வணங்காமுடி என்னும் மடங்கட்டி

4. விச்சு அம்மடத்தில் உஹெஷ்பூர பூஜை நடக்கும்படிக்கு இன்னாட்டுப் படைவீட்டு நன்செய் புன்செய் நாற்பா[ற்]கெல்லைக் குட்பட்ட சகல ஸ்வாஜூமும் விட்டு எங்கள் காணியான எழுகரைநாட்டுக்குள்ளாக நடக்கு முபைய மாற்கத்தில் நான்குதிசை அன்பத்தாறு தேசப்பலரால் யஜூ சாதனமும் எழுதிவிச்சுக்கொண்டு மகமையுங் கட்டிவிச்சுக் குடுத்த விபரம் பிடவைக் கட்டுக்கு க-க்கு ட வஃபாக்கு மிளகு கால்நடை க-க்கு ய ட ஹ எள்ளுப்பொதி க-க்கு டபஉ நூல்

5. பஞ்சு பருத்தி ஆவணக்குமுத்துத் தவசப்பொதி கால்நடைக்கு டப சேவுக்கு டபஉ முத்துப் பவளம் பனிநீர்ச்செம்பு சந்தனங் கஸ்தூரிகற்பூரம் பட்டுநூல் இரசகுடுக்கை வெள்ளாட்டி தண்டிகைக் கொம்பு சல்லி சவரம் [கி]ச்சிலிக் கட்டு இவைக்கெல்லாம் கூடின தீர்வையில் ட யக்கு ட ரு மற்று முள்ள பயிற்கு மிவூகாரந் தீர்ந்து சநூாதிஜூவரை நடக்கும்படியுங் கட்டுப் பண்ணிக் குடுத்தேன் இத்தஜூத்தை விலக்கினவன் புணூ

6. காலத்தில் மங்கை கரையில் ஸூஹூணனை வதைத்தவன் பாவங் கொள்ளக்கடவன் உ இவை செல்லப்பெருமாள் எழுத்து உ

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 91/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 13
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: பொ.ஆ.1263
ஊர்	: தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	: 24/1900
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.VII/24
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 7
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சுந்தர பாண்டியன்		

இடம் : இளமீசுவரர் கோயில் மண்டபத்தின் வடக்குச் சுவர்.

குறிப்புரை : வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து முதலிகளில் கடுந்தர்க்கமுதலி, சாத்தர்முதலி உடையப்பன், சூரியதேவர் பெரியமுதலி, ஆனைக்குட்டி சிலம்பாண்டை, உடையப்பன் ஆனையர், பிள்ளைமுதலியார், சிறுஉடையான், இளமாண்டை ஆகியோர் நீரணி இளையான் நல்லுடையப்பர் தங்கள் முதலியார் பெயரால் அகரப்பட்டர்களுக்கு நீர்வார்த்துக்கொடுத்த இவ்வூர் காரைக்குளம் உடைகுளமாய் பாழாய் கிடக்கிறபடியால் அதனை மணலொழுக்கி அடைத்து, நிலம் திருத்தி அனைத்துப் பயிர்களுடன் தாம் வேண்டும் பயிர் செய்துக்கொள்ள அகரத்துப் பட்டர்களுக்கு அளித்ததைக் குறிக்கிறது.

Summary : On the north wall of the maṇḍapa in the same temple. A record in the 13th year of the Pāṇḍya king Jadāvarmaṉ Sundara-Pāṇḍya devar. Records the gift of a tank to certain Brāhmaṇās by the Mudalis of Taramangalam among whom is a person named Ilamandai.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடபன்மரான த்ரிபுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு பதி(ன்)மூன்றாவது ஸிம்ஹ நாயற்று ௨௰௩ வக்ஷத்து த்ரயோதஸியும் திங்கள்கிழமையும் பெற்ற உத்திராடத்து நாள் கொங்கான வீரசோழமண்டலத்து வடபூவாணிய நாட்டு
2. தாரமங்கலத்து முதலிகளில் கடுந்தர்க்க முதலியும் சாத்தர்முதலி உடையப்பனும் சூரியதேவர் பெரியமுதலியும். ஆனைக்குட்டி சிலம்பாண்டையும், உடையப்பன் ஆனையாரும், பிள்ளைமுதலியார் முதலியும் சிறு உடையான் முதலியும் மேல்படி இளமாண்டையும் இ-
3. வனைவோம் இவ்வூர் நீரணி இளையான் நல்லுடையப்பர் தங்கள் முதலியார் பேரால் வைக்கிற அகரப்பட்டர்களுக்கு நாங்கள் உதக ௨௰௩ யஜ்ஞ ஊாந-வநூரணம் பண்ணிக்குடுத்த பரிசாவது இவூர் காரைகுளம் உடைகுளமாய்ப் பாழேகிடக்கிற குளம் உடைப்புக்கு முன்பே மணலொழுக்கி குளமும் அடை-

4. த்து இக்குளத்தால் நீர் காட்டி கொள்ளலாம் நிலம் திருத்தி இன்னிலமும் இக்குளத்தில் நீர்க்கோவையும் மேனோக்கின மரமு கீணோக்கின கிணறும் உட்ப்பட உஃக வ௵வ்லு யஜூ ஃாந வ்ராஃணமாகக் குடுத்தோம் இவ்வகரத்தில் ஸட்டர்களுக்கு இவனைவோம் இப்படி குடுத்த இந்நிலம் தான் வேண்டும் அனைத்து பயிர்களும் செய்து

5. கொண்டு வேண்டும் பலவ்ருக்ஷங்களும் வைத்துகொண்டு வநீ்ராஃதிரூவகஃ செல்ல ஸூஃாந இறையிலியாக அனுஸவிக்க கடவர்களாகவும் இது இவர்களுக்கு ஃாநயஊநவிக்ர்யங்களுக்கு உரித்தாவதாகவும் இப்படி சம்மதித்து உஃகவ௵வ்லு யஜூஃாந வ்ராஃணம் பண்ணிக்குடுத்தோம் இவகரப்பட்டர்களுக்கு இவனைவோம்

6. இப்படிக்கு இவை சிறு உடையான் முதலி எழுத்து இப்படிக்கு இவை பிள்ளைமுதலியார் மகன் முதலி எழுத்து இப்படிக்கு இவை சாத்தர்முதலி உடையப்பன் எழுத்து இப்படிக்கு இவை சிறு உடையான் இளமாண்டை எழுத்து இப்படிக்கு இவை ஆனையார் எழுத்து இப்படிக்கு இவை ஆனைக்குட்டி சிலம்பாண்டை எழுத்து இப்படிக்க இ-

7. வை கடுந்தர்க்க முதலியார் எழுத்து இப்படிக்கு இவை பெரியமுதலியார் கைமாட்டாங்கானமைக்கு தாரமங்கலத்து தட்டான் திருக்கைவேல் எழுத்து உ

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 92/2022**

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	20
வட்டம்	:	ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ.1274
ஊர்	:	தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	:	29/1900
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.7-29
எழுத்து	:	தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	:	8
அரசு	:	போசளர்			
அரசன்	:	வீரராமநாதன்			

இடம் : இளமீசுவரர் கோயில் மேற்குச்சுவர் குமுதப்படை. .

குறிப்புரை : போசள வீரராமநாதனுடைய இருபதாம் ஆட்சியாண்டில் வடபூவாணிய நாட்டுத்தாரமங்கலத்து உடையார் இளமீசுவரமுடைய நாயனார்க்கு இவ்வூர் முதலிகளில் நீருணி இளமன் பெரிய உடையாண்டை, இளையபெருமாள் சிறு உடையாண்டை, சூரியதேவர், சாத்தாழ்வார், இளையபெருமாள், சிலம்பாண்டைமுதலி ஆகியோர் தங்கள் காணியான சிற்றேரிக்கீழ் அத்தித் தூம்பால் நீர்பாயும் நிலங்களை இறையிலியாக அளித்ததைக் குறிக்கிறது.

Summary : On the west wall of the central shrine in the same temple. a record in the 20th of the Hoysāla king Vīrarāmanātha dēvar. Records the gift of land by several Mudalis among whom was a certain Iḷamaṇ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸமஸ்த சக்ரவத்திகள் ஸ்ரீ போசள வீரராமநாத தேவர்க்கு யாண்டு உ௰வது சித்திரை மாஸம் முதற்றியதி கொங்கான வீரசோழமண்டலத்து வடபூவாணியநாட்டுத் தாரமங்கல-
2. த்து உடையார் இளமீஸ்வரமுடையநாயனார்க்கு இத்தாரமங்கலத்து முதலிகளில் நீருணி பெரிய இளமன் பெரிய உடையாண்டையும் சிறு உடையாண்டையும் சூரியதேவரும் இளைய-
3. பெருமாளும் சாத்தாழ்வாரும் சிலம்பாண்டைமுதலியும் இவ்வனைவோமும் எங்கள் காணியான வலிவாட்கையில் சிற்றேரிக்கீழ் அத்தித் தூம்பால் நீர்பாயும் நிலத்து பூதானகரதான இறையிலியாக உத-
4. கபூர்வமாக குடுத்த நிலமாவது இவ்வலிவாட்கையில் உடையார் ஸ்ரீகைலாஸமுடையனாயனார் தேவதானத்துக்குத் தெற்குத் தடி பலகுழி நானூறு இக்குழி நானூறும் சந்திராதித்வரை செல்லக் கடவதாக உதகபூ-
5. ர்வமாக குடுத்தோம் இவ்வனைவோமும் உ

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 93/2022***

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	20
வட்டம்	:	ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ.1274
ஊர்	:	தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	:	26/1900
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.VII/26
எழுத்து	:	தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	:	9
அரசு	:	போசளர்			
அரசன்	:	வீரராமநாதன்			

இடம் : இளமீசுவரர் கோயில் வடக்குச்சுவர் குமுதப்படை.

குறிப்புரை : போசள அரசன் வீரராமநாதனுடைய இருபதாம் ஆட்சியாண்டில் தாரமங்கலத்து ஊரவரும் முதலிகளும் இளமீசுவரமுடையார்க்கு ஊரேரிக்கீழ் ஐந்நூறு குழி நன்செய்நிலம் தேவதானமாக விட்டதைக் குறிக்கிறது.

Summary : On the north wall of the maṇḍapa in the same temple. A record in the 20th year of the Hoysāḷa Vīrarāmanātha dēvar. Records the gift of land by the villagers and Mudalis of Tāramaṅgalam to the God Iḷamīśvara-muḍaiya-nāyanār.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸாவ்வ ஹூஉ சக்ரவத்திகள் ஸ்ரீ போசள வீரராமநாத தேவர்க்கு யாண்டு உ௰ வது சித்திரை மீ முதற்றியதி கொங்கான வீரசோமண்ட[ல]த்து வ-
2. டபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து உடையார் இளமீஸ்வரமுடைய நாயனார்க்கு இத்தாரமங்கலத்து ஊரவரும் முதலிகளும் தேவதானமாக விட்ட நிலமாவது இ-
3. வ்வூர் ஊரேரிக் கீழ் நன்செய் நிலத்து உடையார் ஸ்ரீ கையிலாஸமுடையநாயனார் தேவதானத்துக்குக் கிழக்கும் தெற்கும் ஆன நிலம் தடிபல குழி ஐஞ்னூறும் சந்ராதித்தவ
4. ர செ[ல்]ல[க்] கடவதாக உதக ஸூவ்வமாக குடுத்தோம் உடையார் இளமீஸ்வரமுடைய நாயநார்க்கு ஊரவரும் முதலிகளும்.

த.நா.அ.தொல்லியல் துறை **தொடர் எண் : 94/2022**

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	:	14
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ.1264
ஊர்	: தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	:	23/1900
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.VII/23
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	:	10
அரசு	: பாண்டியர்			
அரசன்	: சுந்தரபாண்டியன்			

இடம் : இளமீசுவரர் கோயில் மண்டபத்தின் தெற்குச் சுவர்.

குறிப்புரை : கொங்கான வீரசோழமண்டலத்து வடபூவாணிய நாட்டு தாரமங்கலத்து ஊரவர் தாரமங்கலத்து முதலிகளில் நீருணி இளையான் நல்லுடையப்பர் தங்களுடைய முதலியார் பெயரால் ஏற்படுத்திய இளையபெருமாள் அகரமான . . . . சதுர்வேதிமங்கலத்துப் பட்டர்களுக்கு வடபூவாணிய நாட்டு அமரகுன்றிப்பற்றில் செய்யபெருமாள் ஏரியால் நீர்பாயும் நிலங்களை இறையிலி முற்றூட்டாக அளித்ததைக் குறிக்கிறது.

Summary : On the south wall of the maṇḍapa in front of the Iḷamīśvara. A record in the 14th year of the Pāṇḍya king Saḍaiyavarmaṉ Sundara Pāṇḍya dēva. Records the gift of a tank to be Brāhmaṇās of Iḷayaperumāḷ Agaram alias Lakshmana chaturvedimangalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு பதினாலாவதுக் கெதிராவது ஐஷஹ நாயற்று . . . . . . தீங்கட் கிழமையும் பெற்ற பூசத்துநாள் கொங்கான வீரசோழமண்டலத்து பூவாணிய
2. னாட்டு தாரமங்கலத்து முதலிகளில் நீருணி இளையான் நல்ல உடையப்பர் தங்கள் முதலியார் பேரால் வைக்கிற இளையபெருமாள் அகரமான . . . . த்து ஹட்டர்களுக்கு உஃகூ வுாவூ யஃபூ ஊனமாக குடுத்த குளமாவது இன்னாட்டு அமரகுன்றிபற்றில் செய்யபெரு-
3. மாள் ஏரி என்று பேர்கூறப்பட்ட இக்குளத்தால் நீர்பாயும் நஞ்சை நிலத்துக்கு பெருநான்கெல்லையாவது கீழ்பாற்கெல்லை கஞ்சமலைநாயனார் தேவானமான . . . . க்கு மேற்கும் உடைகுளமும் உட்பட்ட நிலமும் தென்பாற்கெல்லை இக்குளத்தால் நீர்பாயும் எல்லை
4. அறுதியாகவும் மேல்பார்க்கெல்லை இக்குளத்து நீர்கோவை அறுதியாகவும் வடபார்க்கெல்லை இக்குளத்தால் நீர்பாயும் எல்லை யறிதியாகவும் இப்படி

இன்னான்கெல்லைக்குட்பட் . . . . . . ம் உடைகுளமுமிதில் மேனோக்கின மரமும் கீணோக்கின கிணறும் மற்று மெப்பேறப்பட்ட ஸஃஷ வ்ராவ்ஷிகளும் உட்-

5. பட ஸவ்வுஊநிய இறையிலியாக உஃகூ வுஃவ்வு யஃூ ஊநஊகக் குடுத்தோம் இவ்வகரத்து ஹட்டர்களுக்கு யிப்பபடி குடுத்த குளம் இன்னாள் முதல் கைக்கொண்டு உடைகுளங்களும் அடைத்து காடுவெட்டி திருத்தி தான்வேண்டுமனைத்துப் பயிர்களும் செய்துகொண்டு சநூ்ராஃிதூவரை செல்ல கல்லிலும் செம்பி-

6. லும் வெட்டி அனுபவிக்க கடவார்களாகவும் இது இவர்களுக்கு ஊநாயஊந-விகூ்யங்களுக்கும் உரித்தாவதாகவும் இது இவர்களுக்கு ஸவ்வுஊநூ இறையிலியாவதாகவும் இப்படி சம்மதித்து யஃூஊநவ்ஊணம் பண்ணிக்குடுத்தோம் ஸ்ரீ ஒகூணவுதுஃவெ்வுகி மங்கலத்து ஹட்டர்களுக்கு பூவாணியநாட்டு நாட்டவரோம் வ

7. இப்படிக்கு இவை அமரகுன்றியில் முதலிகளில் கடுந்தர்க்கமுதலியார் எழுத்து இப்படிக்கு இவை தாரமங்கலத்து முதலிகளில் ஆனையார் எழுத்து இப்படிக்கு இவை செம்மணிகூடல் முதலிகளில் ஆளப்பிறந்தார் முதலியார் எழுத்து இப்படிக்கு இவை கணபதிநல்லூர் முதலிகளில் பிள்ளையப்பன் எழுத்து

8. இப்படிக்கு இவை செட்டிமாங்குறிச்சியில் முதலிகளில் இளமாண்டை சொக்கனாயன் எழுத்து இப்படிக்கு இவை முப்பவ்வை சமுத்திரத்தில் குடியன் ஆண்டபிள்ளையப்பன் எழுத்து இப்படிக்கு இவை முப்பசமுத்திரத்தில் முதலிகளில் குடியன் நக்கன் முதலி எழுத்து இப்படிக்கு இவை மாறமங்கலத்தில் முதலிகளில் சுவடன்

9. செய்யான் காமுண்டன் எழுத்து இப்படிக்கு இவை வெள்ளறைபள்ளியில் முதலிகளில் சாகாடன் இளமன் பெருமாள்க்காமுண்டன் கைமாட்டாங்கானமைக்கு திருவெள்ளறையுடையான் பங்கயச்செல்வியான் உலகன் எழுத்து வ

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 95/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: 6
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: பொ.ஆ.1256
ஊர்	: தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	: 25/1900
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.VII/25
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 11
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சுந்தரபாண்டியன்		

இடம் : இளமீசுவரர் கோயில் மண்டபத்தின் வடக்குச் சுவர்.

குறிப்புரை : பாண்டிய அரசன் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டில் கொங்கான வீரசோழமண்டலத்துத் தாரமங்கலத்து முதலிகளில் நீருணி இளையான் நல்லுடையப்பன் தங்கள் பெற்றோர் (பிதாக்கள்) பெயரால் அமைத்த இலக்சுமணச் சதுர்வேதிமங்கலத்துப் பட்டர்களுக்கு இந்நாட்டவர் இந்நாட்டுக் காரக்குளத்து நான்கெல்லைகளுக்குட்பட்ட புன்செய், நத்தம், சாமக்குளத்து ஏரி உட்பட பல ஏரிகளால் நீர்பாயும் நிலங்கள் ஆகியவற்றை தேவதான, திருவிடையாட்ட நிலங்கள் நீங்கலாக 1500 நற்பணத்துக்கு விற்றுக் கொடுத்ததைக் குறிக்கிறது. .

Summary : On the north wall of the mandapa in the same temple. A record in the sixth year of the Pāṇḍya king Saḍaiyavarmaṉ Sundra Pāṇḍiyia dēvar. Registers the sale of land to the Bhatters of Lakshmana caturvēdimaṅgalam founded by Iḷiyaṉ Nallauḍaiyappaṉ, one of the Mudalis of Taramaṅgalam, in the name of his father.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடபன்மரான த்ரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௬ வது ஆறாவது கற்கடக நாயற்று
2. பூர்வ்வபக்ஷத்து ஷஷ்டியும் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரத்துநாள் கொங்கான வீரசோழமண்டலத்து பூவாணியநாட்டுத் தாரமங்கலத்து முதலிகளில் நீருணி இளையான் நல்லஉடையப்பன் தங்கள் பிதாக்கள் பேர்வைத்த இளையபெருமாள் ஸ்ரீலக்ஷ்மண சதுர்வ்வேதி மங்கலத்து பட்டர்களுக்கு இந்நாட்டு நாட்டவரோம்
3. விற்றுக்குடுத்த இந்நாட்டுக் காரக்குளம் நான்கெல்லைக் குட்பட்ட புன்செயும் நத்தமும் சேமப்பள்ளி ஏரி உள்ளிட்ட ஏரிகளால் நீர்பாயும் நஞ்சையும் இவ்வூர்ப்பற்றில் நீர்நிலை மரநிலை உள்ளிட்ட ஸமஸ்தப்ராதிகளும் உப்பட்டவையிற்றில் தேவதாநம் திருவிடையாட்டம் உள்ளிட்ட நிலம் நீங்கலாக இவ்வூர் விற்றுக்குடுத்தோம் ஸ்ரீ-

4. ஞக்ஷஊண வூதுஂவெூஶி மங்கலத்து அகரப்பட்டர்களுக்கு இந்நாட்டு நாட்டவரோம் இப்படி விற்றுக்குடுத்த இவ்வூர்க்கு விற்றுக்குடுத்து

5. கொள்வதாக எம்மிலிசைந்த விலைப்பொரு ளன்றாடு நற்பணம் சூருா இப்பணம் ஆயிரத்தஞ்ஞுற்றுக்கும் விலைக்குற விற்றுப் பொருளூற

6. கைக்கொண்டு உஃகூ வஂவூுமாக விற்று விலை வூஊணம் பண்ணிக் குடுத்தோம் இவ்வகரத்துப்பட்டர்களுக்கு இந்நாட்டு நாட்டவரோம்.

7. இப்படி விற்றுக்குடுத்த இவ்வூர் இன்னாள் முதல் இவர்கள் கைக்கொண்டு தாங்கள் வேண்டும் அனைத்து பயிரும் செய்-[1]

---

1. கல்வெட்டு இத்துடன் நின்றுவிட்டது.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 96/2022*

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: 16 ஆம் நூற்றாண்டு
ஊர்	: தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	: 31/1900
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க.VII/31
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 12
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : இளமீசுவரர் கோயில் உண்ணாழிகை வடக்குச் சுவர்.

குறிப்புரை : கௌடசூடாமணி வடவாளகுலே(ந்திர)ன் என்பவர் தாரமங்கலத்து இளமீசுவரமுடைய நாயனார் கோயிலில் தன்னுடைய தந்தையார் பெயரால் சோமநாததேவரை எழுந்தருளச் செய்துள்ளார். அக்கால் இவர் தந்தையார் இந்நாயனார்க்கு திருநாமத்துக்காணியான நீர்வார்த்துக்கொடுத்த இவ்வூரில் பெரிய ஏரிக்கீழ் சிறுதூம்படி நிலங்களை தாரமங்கலத்து வெள்ளாளரில் நல்லுடையப்பர் முதலான ஆறுமுதலிகளும் குரு-தக்சினையாக நீர்வார்த்துக் கொடுத்துள்ளனர்.

Summary : On the north wall of the same temple. Mentions a certai Srikaṇḍadē-va, who bore the bridus Magudachuḍamaṇi and Vidyasamudram and records a gift of land made to his father as gurudakshna by the six viel̤l̤alas of Tāramangalam, of whom Nalla-Udayappar was one.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மௌ ஃஃஃஃணி வஃவாஃகுலெ . . . ன் விஃாஃஃஃ ஸ்ரீகண்டதெவர் பூவாணியநாட்டு தாரமங்கலத்து இளமீஸ்வரமுடைய னாயினார் கோயில் ஸ்தானத்தார்க்கு நம்முடைய மாதாக்கள் ஆய் தங்கள் கோயிலிலே அப்பாவுடைய
2. ஶிவநாஃத்தாலே நாயனார் ஸொஃநாததெவரெழுந்தருவித்த கையில் இன்னாயினார்க்கு இவர் திருநாமத்துக்காணியாக முன்னாள் உதகம் பண்ணிக்குடுத்த இவ்வூரில் பெரிய ஏரிக்கீழ் சிறு தூம்படியில் இவ்வூரில் வெள்ளாழரில் நல்லஉடை-
3. யப்பர் உள்ளுட்ட ஆறு முதலிகளும் அப்பாவுக்கு ஃஃதக்ஷிணெயாக உதக ஃஃஃஃஃ இறையிலியாக குடுத்த நஞ்சை நிலம் கு-
4. (ரு). காயவைக்கீழ் விமபம சதகாளஇ[1]

1.இது ஏதோ ஒருவகை எண் போல உள்ளது.

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 97/2022***

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	16-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	:	---
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	---
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	13
அரசு	:	---			
அரசன்	:	---			

இடம் : இளமீசுவரர் கோயில் நந்தி சிலைக்கருகில் தரையில் உள்ள கல்.

குறிப்புரை : இக்கல்வெட்டின் எழுத்துகள் சிதைந்து வாசிக்க இயலாவண்ணம் உள்ளன.

Summary : A slab stone erected near the maṇḍapa. A damaged record in late characters mentions Iḷamīśvaram and Kali year.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஶ்ரீ கலியுக
2. வரு செல்லாநின்(ற)
3. தையி மீ தேதி ய கு
4. இளமேசுரமுடைய
5. ......

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 98/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	---
வட்டம்	:	ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	16-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	:	19/1900
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.VII/19
எழுத்து	:	தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	:	14
அரசு	:	---			
அரசன்	:	வீரவசந்தராயர்			

இடம் : கைலாசநாதர் கோயில் மண்டபத்தின் வடக்குச் சுவர்.

குறிப்புரை : விசயநகர அரசன் வசந்தராயர் காலத்தில் வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து இளம்நயினார் முதலியார் தன் காணியான திருத்தோன்பட்டியை இளம்சமுத்திரம் எனப் பெயர் மாற்றி கைலாசமுடைய நாயனார்க்கும் இளமீசுவரமுடைய நாயனார்க்கும் இறையிலியாக அளித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டில் கலிஆண்டு பிழைபட உள்ளது. இது சக ஆண்டாக இருக்கலாம்.

Summary : On the north wall of the maṇḍapa in front of the Kailasanāthar temple in the same village. A record of Vīravasantharayar in kali 4009. (mistake for Saga 1409). Records the grant of the village of Tirttonpatti to the temples of Kailśamudāiya-nāyanār and Iḷamīśvaramudaya-nāyanār after renamed it as Iḷamsamutram.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஊஹாஊணுவெஷ்ஙஙு அரியராய விபாடன் பாஷெக்கு[த்] தப்புவரா-
2. யர் கணூஙு மூவராயர் கண்டன் கணூ னாடு கொண்டு கொண்ட னாடு
3. கொடாதான் இலங்காபுரியுந் திரைகொண்டு வென்றருளிய
4. ஸ்ரீவீரவஸ[ந்]தராயர் வுரியிவிராஜ்ஜ பண்ணி அருளாநின்ற காலத்தில் கலியுக
5. ஶகாஸ்ஷ சதுயிகூ[1]க்குமேல் வீரவஸந்தராயர் நயினாற்கு ஆண்டு மூன்றா-
6. வதி[ல்] விப ஷூ காற்[த்]திகை மீ கொங்கான வீரசோழமண்டலத்தில் வட
7. பூவாணிய நாட்டு தாரமங்கலத்தில் வெள்ளாழரில் நீலங்கிழார் மஷ்க
8. குடோரி மகுடசூடாமணி மன்னர் வணங்கிலும் வணங்காத முடியான்
9. முதலியார் நல்லுடையப்பர் வண்ணமுதலியார் இம்முடி இளம்நயினா முதலியார் என்-

10. னுடையதான தாரமங்கலத்தில் நல்லபள்ளியான திருத்தோன்பட்டியை அப்பேர்
11. மாற்றி இளம்சமுத்திரமென்று[ம்] பேர் நாட்டி உடையார் ஸ்ரீகைலாஸமுடைய
12. நயினாற்கும் இளமீசுரமுடைய நயினாற்கும் இறையிலி தேவதானமாக விட்டு
13. தன்மசாதனமாக குடுத்தோம் இளம்சமுத்திரத்தில் நஞ்சை புஞ்சை நாற்பாங்கெல்
14. லை. . . . . மேநோக்கின மரமும் கீழ்ணோக்கின கிணறும் ...மீன்படு (பள்ளமும் தேன்படு பொதும்பும்) . . . .
15. .... க்கை மனை .... க்கை ....ம....ப்பெ... பல....
16. யமும் குடுத்தோம் .... கல............
17. முதலிய ......ரேன் .... இத்தன்மத்தை அழித்தவன்
18. கெங்கைக் கரையிலே ....
19. பசுவைக் கொன்ற பாவத்திலே போகக் ..
20. . கடவர்கள் ஸஹஸ்ர மண்டபத்தில் எழுத்து
21. இருந்தபடி

1. ஆண்டு தவறானது. சகம் 1490 ஆக இருக்க வேண்டும்.

த.நா.அ.தொல்லியல் துறை *தொடர் எண் : 99/2022*

மாவட்டம்	:	சேலம்	ஆட்சியாண்டு	:	14
வட்டம்	:	ஓமலூர்	வரலாற்றுஆண்டு	:	பொ.ஆ.1268
ஊர்	:	தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	:	20/1900
மொழி	:	தமிழ்	முன்பதிப்பு	:	தெ.இ.க.VII/20
எழுத்து	:	தமிழ்	ஊ.க. எண்	:	15
அரசு	:	போசளர்			
அரசன்	:	இராமநாதன்			

இடம் : கைலாசநாதர் கோயில் மண்டபத்தின் வடக்குச் சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டு முன்பு பழைய மண்டபத்தில் வெட்டப்பட்டிருந்துள்ளது. அம்மண்டபம் பழுதுற பின்னாளில் கட்டப்பட்ட புது மண்டபத்தின் வடசுவரில் வெட்டப்பட்டுள்ளது. இம்மண்டபம் பொ.ஆ. 16-ஆம் நூற்றாண்டில் கட்டிமுதலியாரால் கட்டப்பட்டிருக்கவேண்டும். இவ்வூர் கல்வெட்டு எண் 1614-இல் வரும் செய்தியால் அறியலாம். போசள அரசன் வீரராமநாதன் தாரமங்கலத்து உடையார் கைலாயமுடையநாயனார்க்கு இறையிலி தேவதானமாக நிலங்களை விட்டுள்ளார். அவற்றை பங்குளத்திலிருக்கும் பொப்பைய கண்ணாக்கர் மக்களான இராகுத்தராய அருளாளக்கண்ணாக்கர், பேய்க்கடி கண்ணாக்கர், தெத்தைய கண்ணாக்கர் ஆகியோர் செயல்படுத்தியதைக் குறிக்கிறது. கண்ணாக்கர் என்பது தண்ணாக்கர் என்பதன் திரிபாக இருக்கலாம். தண்ணாக்கர் தண்டநாயர்.

Summary : On the north wall of the same maṇḍapa. A damaged record in the 14th year of the Hoysāḷa king Ramanāthadēvar. Records the gift of irai-ili-devadāṉa land to the Kailasamudaiyar temple in Tāramaṅgalam in Vaḍapoovaniya nāḍu by the sons of Koppaiya-kaṇṇākkar.

கல்வெட்டு :

1. முன்னாள் பழையமண்டபத்தில் எழுதி இருந்தபடி
2. ஸ்வஸ்திஸ்ரீ இராமனாத தேவற்கு ஆண்டு ௰௪ ஆவது வடபூவா-
3. ணியநாட்டு பங்குளத்திலிருக்கும் கொப்பயக் கண்ணா[க்]கர்
4. மக்களில் இராகுத்தராய அருளாளக் கண்ணாக்கரும் பே-
5. ய்க்கடிக் கண்ணாக்கரும் தெத்தயக் கண்ணாக்கரும்
6. பூவாணியனாட்டுத் தாரமங்கலத்து உடையார் ஸ்ரீகை-
7. லாயமுடைய நயினாற்கு இராமநாததேவர் இறையிலி
8. தேவதானமாக விட்டருளின ...... னாட்டுவனாதி நஞ்சை
9. புஞ்சை நாற்பாங்கெல்லையும் மேல்நோக்கின மரமு-

10. ங் கீழ்னோக்கின கிணறும் மற்றுமெப்பேற்பட்டனவும்

11. இறையிலி தேவதான ……….. இத்த-

12. ன்மத்தை அழித்தான் கெ(ங்கை கரையிலே) காராம் ப-

13. சுவைக் கொன்ற ……………….

14. ……………….கடவராவும். ஶ்ரீஹீஸ்ரூ

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 100/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: . 16-ஆம் நூற்றாண்டு
ஊர்	: தாரமங்கலம்	இ.க.ஆண்டறிக்கை	: ---
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: ---
எழுத்து	: தமிழ்-கிரந்தம்	ஊ.க. எண்	: 16
அரசு	: ---		
அரசன்	: ---		

இடம் : கைலாசநாதர் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : சின்னசீயாளமுதலியாரின்மகன் இம்மடிகட்டி முதலியார் சிவகாமி உடனாய கைலாயநாதர் கோயில் உண்ணாழிகை (கர்ப்ப கிருகம்), அர்த்தமண்டபம், சுகானாதி மண்டபம் ஆகியவற்றைக்கட்டி அங்கு கணபதி, துர்க்கை, பிரம்மா, லிங்கோத்பவர், தட்சிணாமூர்த்தி, சண்டேசுவரர் ஆகியோரை எழுந்தருளிவித்தார் என்பதைக் குறிக்கிறது.

Summary : On the north wall of the same temple. Records the reconstruction of the Kailāsamudaiyar temple and setup several images by Immaḍikaṭṭi Mudaliyar of the Vanaṅgāmuḍi Mudaliyar community.

கல்வெட்டு :

1. மஸ்஥ ககுடோரி மகுடசூடாமணி மன்னர் வணங்கிலும் வணங்காத
2. முடியார் முதலியார் நல்லுடையப்பர் அஸ்஥ நக்ஷத்தரத்தில் . . . ராசியில் உ-
3. ஃயஊன சின்னச் சீயால முதலியாருடைய குமாரர் பூரட்டாதி நக்ஷத்திரஃ த-
4. னுர் ராசியும் உஃயஊன இம்முடி கட்டிமுலியார் நம்முடைய குல ஸ்வாஊயா
5. ராகிய கைலாச நாயஸ்வாஊயார் காரியத்துக்குக் கற்தரான ஆதிச-
6. ண்ஜைஃஸ்வர நயினார் அருளிச்செய்தபடி உண்டாக்கிய திருப்ப[ணி]
7. விபரம் ஷிவகாமி அம்மை ஸஹெதரான ஸ்ரீகைலாஸநாய
8. ஸ்வாஊயாருக்கு திருக்கோவில் மஹாமூஹஃ சுத்தஊண்ஜவஃ வ
9. ஸுவாநாயி ஊஹாஊண்ஜவஃ மணபதி ஊஹைந ஸ்ருஹஷெவர்
10. ஸிம்மொகஸவ ஃக்ஷிணாமூற்தி வண்டீஃஸ்வரர் வ்ருஷஸகொளம்
11. சிகரம் யிதுமுதலான திருப்பணி சகலமும் உண்டாக்கிவிச்சார்
12. கைலாஸநாய ஸ்வாஊயாருடைய அனு க்ருஹத்தினாலே இந்த
13. வம்ஸஃ வுத்ரு ஹௌத்ரு வாரஃபரையாக சூவந்ராக்ஙீக
14. ஸ்தாயியாகஹி வ்ருத்திமாக இருக்க-

15. க்கடவது இப்படிக்கு திருப்பணி ...

16. உத்ரோத்தரம் நடக்கக் கடவது ஸுப–

17. மஸ்து ஸ்ரீகைலாஸநாயர் ரக்ஷிக்க

த.நா.அ.தொல்லியல் துறை ***தொடர் எண் : 101/2022***

மாவட்டம்	: சேலம்	ஆட்சியாண்டு	: கலி 4780
வட்டம்	: ஓமலூர்	வரலாற்றுஆண்டு	: பொ.ஆ. 1679.
